11 FEB 1971

Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | தை 27 | ஜுஹஜ் 12 | ( 9 - 2 - 71 ) | செவ்வாய்க்கிழமை | இதழ் 359




# இன்று காலை விண்வெளியில் பத்திரிகையாளர் மகாநாடு

## அப்பல்லோ 14 நாளை பூமியில் இறங்கும்!

ஹுஸ்டன், பெப். 9 மனித சமுதாயத்தின் ஐந்தாவது, ஆறுவது பிரதிநிதிகளாக அம்புலியில் காலடி எடுத்து வைத்து, உலக வரலாற்றில் தமது பெயர்களைப் பொறிக்கச் செய்திருக்கும் அப்பலோ-14 வீரர்களான அலன் பி ஷெப்பர்ட்டும், எட்கார் டி மிச்சலும் இன்று காலை விண்வெளியில் இருந்தவாறே பூமியிலுள்ள பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடுவர்.

பூமியை நாக்கி வந்துகொண்டிருக்கும் மூன்று வீரர்களும் நாளை 10-ந்திகதி அதிகாலை 2-33 மணிக்கு திட்டமிட்டபடி பூமியை வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

விண்வெளியில் இருந்தவாறே அம்புலி பற்றிய செய்திகளை டெலிவிஷனில் பத்திரிகையாளர்களுக்கு தெரிவிப்பது இது 2-வது தடவையாகும் இதுபோன்று அப்பலோ-12 வீரர்களும் பத்திரிகையாளர் மாநாட்டை முன்னர் நடத்தினர்.

அப்பலோ-14 வீரர்கள் மூவரும் பூமியை நோக்கி வரும் பாதையில் பல சுவாரஸ்யமான பரிசோதனைகளை நேற்றுச்செய்தனர். திட்டமிட்டபடி சகலநடவடிக்கைகளிலும் வீரர்கள் வெற்றிகண்டுள்ளதாக ஹுஸ்டன் கட்டுப்பாட்டு அதிகாரிகள் பெரும் குதூகலமடைந்தனர்.

விண்வெளி சூழ்நிலையில் இருந்துகொண்டு வீரர் மிச்சலும், ரூசாவும் பலபரிசோதனைகளை பூமியிலுள்ளவர்களுக்குச் செய்துகாட்டினர். இதை டெலிவிஷனில் உலக மக்கள் பார்த்துக்கொண்டிருந்தனர்.

இம்மாதம் முதலாம்திகதி அதிகாலை 2-33 மணிக்குபூமியிலிருந்து புறப்பட்ட வீரர்கள் மூவரும் நாளை 10-ம் திகதி அதிகாலை 2-33 மணிக்கு பூமியில் வந்திறங்கவிருக்கின்றனர். பசுபிக் சமுத்திரத்தில் இவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நடவடிக்கை குழுவில் எட்டு உறுப்பினர்கள்

வல்வெட்டித்துறை, திங் வல்வெட்டித்துறையில்நடந்தகமிழ்க்கட்சித்தலைவர்கள் மகாநாட்டில் 8 பேர் கொண்ட நடவடிக்கை குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது மகாநாட்டில் எடுக்கப்பட்ட 9 அம்ச திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டால் அதன்பின் என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்பது பற்றி இக்குழு முடிவு செய்யும்

இக்குழுவில் கிழ்க்காணுவோர் இடம்பெற்றுள்ளனர் திருவாளர்கள் ஏ அமிர்தலிங்கம், எஸ் எம் இராசமணிக்கம், வி என் நவரத்தினம், எம் சிவசிதம்பரம், என் சிவனேசன், வி சுந்தரலிங்கம், வி நவரத்தினம், கே ஞானமூர்த்தி.

மகாநாடு முடிவில் உடுப்பிட்டி எம் பி திரு ஜெயக்கொடிபேசும்போது இக்கோரிக்கைகளை அரசாங்கம் நிராகரித்தால் போராட்டத்தில் குதிக்க நம்மை நாம் தயார் செய்யவேண்டும் என்றார்

திரு வி சுந்தரலிங்கம் பேசும்போது 'கூட்டம்வெற்றிகரமாக முடிந்தது' என்றார் திரு ஏ அமிர்தலிங்கம் பேசும்போது 'தமிழ் இனத்தின் நல்வாழ்வுக்கு இக்கூட்டம் வழிவகுக்கும்' என்றார் திரு எம் சிவசிதம்பரம் பேசும் போது 'வல்லவை மக்களுக்குநாங்கள் கடமைப்பட்டவர்கள்' என்றார்

இம்மகாநாட்டில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் ஏ அமிர்தலிங்கம் வி தர்மலிங்கம் க துரைரத்தினம் எக்ஸ் எம் செல்லத்தம்பு, கே ஜெயக்கொடி, வி என் நவரத்தினம், சி கதிரவேலுப்பிள்ளை, மு ஆலாலசுந்தரம், செனட்டர் எஸ் ந ராசா, தமிழ்க்காங்கிரசைச்சேர்ந்த திருவாளர்கள் எம் சிவசிதம்பரம், தா சங்கரப்பிள்ளை, என் சிவநேசன், என் நடராசா, மு குணரத்தினம், கே பரமானந்தராசா, தமிழர் சுயாட்சிக்கழகத்தைச் சேர்ந்த திரு வி நவரத்தினம், திரு கே சிவானந்தசுந்தரம், ஈழத் தமிழர் முன்னணி தலைவர் திரு வி சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### செயற்குழு ஒத்திவைப்பு

இன்று நடைபெறவிருந்த தமிழ்காங்கிரஸ் செயற்குழு கூட்டம் பின்போடப்பட்டுள்ளதாகவும் திரு ஜி ஜி பொன்னம்பலம் இலங்கை திரும்பியபின்னரே இக்கூட்டம் நடைபெறுமென்றும் தமிழ்காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் கூறினார்.

### தபால் மந்திரி இன்று விஜயம்

யாழ்ப்பாணம், செவ் தபால் அமைச்சர் திரு செ குமாரசூரியர் இன்றுபிற்பகல் வாவைபூர் உபதபால் கந்தோரை திறந்து வைப்பார்.

கொய்யாத் தோட்டம், பாஷையூர் சுதந்திரக்கட்சி கிளைகளையும் தபால் மந்திரி திறந்துவைப்பார். இரவு பாஷையூர் சனசமூகநிலைய ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

### இன்று பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், செவ். தாவடி காந்தி கலை வளர்ச்சி மன்றத்தின் பத்தாவதாண்டு நிறைவு விழாவின் இறுதி நாளான இன்று கலைமணி சு. வடிவேலு 25 வருட கால கலைச் சேவைக்காகப் பாராட்டிக் கௌரவிக்கப்படவிருக்கிறார். தாவடி வேதவிநாயகர் ஆலய மேற்கு வீதியில் அமைந்த திறந்த வெளி அரங்கில் நடைபெறும் இவ் விழாவில் திரு. ஏ. ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் இசை விருந்தும் நடிகமணி வைரமுத்து குழுவினரின் 'மயான காண்டம்' நாடகமும் இடம் பெறவிருக்கின்றன.

## "ஒற்றுமை முன்னணி முடிவை ஆதரிக்க மாட்டோம்"

### நல்லூர் எம். பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், செவ் "வல்வெட்டித்துறையில் நடந்த தமிழ்க்கட்சித் தலைவர்கள் மகாநாட்டில் ஏற்பட்ட முடிவுகளுக்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல அவர்கள் அடிப்படை தீர்மானங்களுக்கு திருத்தம் அனுப்பினால் நாங்கள் அதைப் பாரமேற்கமாட்டோம் ஆதலால் அவற்றை நாம் ஆதரிக்கமாட்டோம்

தமிழ்க் காங்கிரஸ் ஆட்சி மன்றகுழு தலைவரும் நல்லூர் எம் பியுமான திரு சி அருளம்பலம் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்

திரு அருளம்பலம் மேலும் கூறியதாவது: யாழ்ப்பாணத்தில் நடந்ததாக கூறப்படும் தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் நான் கலந்துகொள்ளவில்லை அதனால் அங்கு என்ன முடிவு செய்யப்பட்டதோ எனக்குத் தெரியாது

வல்வெட்டித்துறையில், ஒற்றுமை மகாநாடு நடந்த அதே இரவு ஏழாலையில் நடந்த தமிழரசுக் கூட்டத்தில் எங்களைத் தாக்கிப் பேசிக்கொண்டிருந்தார்கள் இந்த நிலையில் எப்படி ஒற்றுமை ஏற்படுவது முதலில் நல்லெண்ணம் வளரவேண்டும் அதன்பின்தான் ஒற்றுமை ஏற்பட வழிபிறக்கும்

தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கத்தினால் கிடைக்கவிருக்கும் நன்மைகளை இல்லாமல் செய்வதற்கு ஒற்றுமை முன்னணி என்ற போர்வையில் சதி நடக்கிறது இதற்கு நாங்கள் பலியாகமாட்டோம்

### வீதிகளில் குப்பைக்குவியல்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண நகர வீதிகளில் சில குப்பைகூழங்கள் நிறைந்தனவாகவே காட்சியளிக்கின்றன. கடந்த சில தினங்களாக பிரதான வீதியை அடுத்துள்ள குறுக்கு வீதிகளில் உள்ள குப்பைகளை மாநகரசபையினர் கவனிக்காமல் விட்டுவிடுவதாகவும், இதனால் வீதிகளில் நாற்றம் எடுத்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## சிங்களப் பாடசாலையில் சாதிக்கலவரம்

### பொலிஸ் ஒருவர் பலி?

யாழ்ப்பாணம் திங் சிங்களமக்கள் மத்தியில் தாழ்ந்தவகுப்பாகக் கருதப்படும்ரொடியாஸ் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்கமுவப்பகுதி அரசாங்கப்பாடசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட சச்சரவால் ரொடியாஸ் இனத்தவரின் நான்கு வீடுகள் தீக்கிரையாகின என்று கூறப்படுகிறது

இது பற்றி விசாரணைசெய்யச்சென்ற பொலிஸ்கான்ஸ்டபிள் ஒருவரும் கொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு நியமன எம் பி திரு எம் சி சுப்பிரமணியம் பிரதமருக்கு அவசரத்தந்தி ஒன்றை நேற்று அனுப்பி வைத்தார்.

## சுவிசில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது

லண்டன், பெப், 8 சுவிட்ஸர்லாந்தில் பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது மிக விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் முதல் தடவையாக 78 லட்சம் பெண்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளுவார்கள். சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதென்ற முடிவு எடுக்கப்பட்டது பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை ஐரோப்பிய நாடுகளில், சுவிட்ஸர்லாந்தில்மட்டுமே மறுக்கப்பட்டிருந்தது. சவூதி அரேபியா, ஜோர்டான், குவாய்த், யேமன் ஆகிய நாடுகளில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை இன்னும் வழங்கப்படவில்லை.

# அரசியல் அரங்கு

## எப்பிரச்னைக்கும் முடிவுகாண இப்போதுதான் அரிய வாய்ப்பு

பராசரன்

மொழிப் பிரச்னை உள்ளிட்டு இலங்கையின் புதிய அரசியல் அமைப்பைப் பற்றிப் பேசி அமைதியாகத் தீர்த்துக்கொள்ள இதுதான் கடைசி வாய்ப்பு என்று கூறலாம். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தாவிடில் இதைப்போன்ற அரிய வாய்ப்பு இனிக் கிடைக்க முடியாது போகும்' என்று இலங்கையிலுள்ள ஓர் அரசியல் ஞானி என்னிடம் தெரிவித்தார்.

சென்றவாரம் லண்டனில் காலமான ஸோல்பரி பிரபுதான் இலங்கையில் இப்போது நடப்பிலுள்ள அரசியல் அமைப்பைத் தயாரித்து அளித்தது இந்தத் திட்டம் 23 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுள்ளதில் யாருக்கும் இது திருப்தியளிக்கவில்லை. இத் திட்டம் அமுலுக்கு வந்த சமயத்தில், தமிழும் சிங்களமும் அரசாங்க மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டு அமுலில் இருந்தன. இந்த ஏற்பாடே நீடிக்குமென்று நம்பித்தானோ என்னவோ மொழிப்பிரச்னையைப்பற்றி ஸோல்பரி பிரபு அரசியல் சட்டத்தில் ஒன்றும் கூறவில்லை. இந்நாட்டில் எந்த ஒரு சமூகத்தவரையும் பாரபட்சமாகப் பாதிக்கும்படியான சட்ட திட்டங்களையும் நிறைவேற்றப்படாதென்று 29 வது விதியில் குறிப்பிட்டிருந்தது. சிறுபான்மைச் சமூகங்களுக்குப் போதிய பாதுகாப்பாகுமென்று அவர் நினைத்தார் போலும். ஆனால் இதற்கு நேர்மாறாக தனிச்சிங்கள சட்டம் நிறைவேறியது. வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டுத் தமிழர் பல கஷ்ட நஷ்டங்கள் அடைந்தனர். சமீபத்தில் இலங்கைக்கு வேறு காரணமாக வந்திருந்த ஸோல்பரி பிரபு இந்நிலையைக் கண்டு பெரும் ஏமாற்றம் தெரிவித்தார். தாம் பெருந்தவறு செய்துவிட்டதாகவும், இப்படியெல்லாம் நடக்குமென்று தாம் கருதியிருந்தால் வேறு பாதுகாப்புகளை சட்டபூர்வமாகத் தாம் செய்திருக்கக்கூடுமென்று கருத்துப்படத் தெரிவித்தார்.

பிரிட்டன் நமக்கு அளித்துள்ள இந்த 'ஜனநாயக' அரசியல், சிறுபான்மைசமூக அரசியல் உரிமைகளையும், அந்தஸ்தையும் பாதுகாக்கத் தவறிவிட்டது. நமக்கு அமைதியாகச் சுதந்திரம் வித்ததற்காக நாம் நன்றி தெரிவிக்க வேண்டுமாயினும் நமக்கான அரசியலை நாமே தயாரித்துக்கொள்வதுடன் அதில் குறையிருப்பின் நாமே அதைநிறைவு செய்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இந்நாட்டிலுள்ள எல்லாச் சமூகப் பிரதிநிதிகளுமடங்கிய ஒரு வட்டமேசை மகாநாடு அல்லது அரசியல் நிர்ணயசபை கூடி, நமக்கான அரசியலைத் தயாரிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வந்தது.

பொதுத் தேர்தலுக்குப் பின் புதிய பார்லிமெண்ட் சபையில், அரசியல் நிர்ணய சபையாக மாறி புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிப்பது சரியான ஓர் காரியமாகும். பார்லிமெண்டிலே தங்களுக்கு அமோக பலம் இருப்பதைப் பயன்படுத்தி, அரசாங்கம் தனக்கு இஷ்டமானபடி எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும். தமிழர் உள்ளிட்டு சிறுபான்மைச் சமூகத்தவரும் சரிநிகர்சமானமாக இந்நாட்டில் திருப்தியுடனும், மானம் மரியாதையுடனும் வாழக்கூடியதாகப் புதிய அரசியல் இருந்தால்தான் அமைதியுடன் இங்கு மக்கள் வாழவும், ஒற்றுமையாக நாடு முன்னேறவும் முடிவதாக இருக்கும்.

தமிழருக்கு ஏற்கெனவே இருந்த மொழியுரிமை பறிக்கப்பட்டதால், அவர்கள் இந்நாட்டில் இரண்டாம் பட்சமான பிரஜைகளாகிவிட்டதாக உணர்கின்றனர். அன்றுமுதல் நாட்டில் அமைதியோ முன்னேற்றமோ இல்லை. தமிழருக்குச் செய்யப்பட்ட அநீதியையும் அவர்களது குறைகளையும் கேட்டு, அவர்களுக்கு அரசியல் அமைப்பு சபை மூலம் நியாயம் வழங்க இப்போது நல்லவாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை, தக்கபடி பயன்படுத்துவார்களா? அல்லது தங்களுக்குள்ள பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டு தங்கள் விருப்பப்படியே காரியம்செய்யப்போகிறார்களா?

இலங்கை எப்படியும் குடி அரசு ஆகப்போகிறது. இது நல்லதுதான். ஆனால் சிறுபான்மை சமூகத்தவருக்கு இன்றுள்ள ஒரே பாதுகாப்பு பிரிவிகவுன்ஸில் அப்பீல்தான். குடியரசுஏற்பட்டால் அந்த உரிமையும் பாதுகாப்பும் போய்விடுவதாகஇருக்குமென்று தமிழரில் பலரும் அஞ்சுவது இயற்கை. இந்த அச்சத்தைத் தீர்க்கவும், தமிழரின் குறையை உணர்ந்து, அதைத்தீர்க்கவும், அரசியல் நிர்ணயசபை என்ன செய்யப்போகிறதென்பதே முக்கிய கேள்வி. இக்கேள்விக்கான பதிலில்தான் இலங்கையின் எதிர்கால அரசியல்விதியும் அடங்கியிருக்கும்.

0 0 0

இலங்கையில் சென்ற 4-ந் திகதியன்று நடைபெற்றதுதான் கடைசி சுதந்திரதினமென்றும், அடுத்த வருடத்துக்குள் புதிய குடியரசு அரசியல் திட்டம் அமுலுக்கு வந்துவிடலாமென்றும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தெரிவித்தார்.

அமைச்சர் தயாரித்துள்ள 14, 15வது நகல் தீர்மானங்கள் புதிய குடியரசின் தலைவரைப் பற்றியது. "குடியரசுத் தலைவரே நாட்டின் தலைவராகவும், இராணுவத்தளபதியாகவும் இருப்பார். பிரதம மந்திரியால் அவர் நியமிக்கப்படுவார். விசுவாசப் பிரமாணம்எடுத்ததும் அவர் தலைவராவார். அவரது பதவிக்காலத்தை அரசியல் அமைப்பு வகுக்கும்" என்று 14-வது நகல் தீர்மானமும், "அரசியலில்வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிடில், பிரதமரின் ஆலோசனையின்படியே நடக்கவேண்டும்" என்று 15-வது நகல் தீர்மானமும் கூறுகின்றது.

அதாவது, சாதாரணமாக பிரதமரின் விருப்பப்படியே அவர் காரியம் செய்யவேண்டும். இல்லாவிடில் பிரதமர் அவரை நீக்கிவிடலாம். பிரதமர் ஏதும்தவறுசெய்தால், அவரைத்தடுக்கவோ திருத்தவோ யாருமில்லை. பிரதமருக்கு தேசியசபையில் பெரும்பான்மைப்பலம் இருக்கும்வரை அவர் எதுவும்செய்யலாம் பிரதமரை ஒரு சர்வாதிகாரிபோல்செய்யக்கூடும் இந்த ஏற்பாடு.

தலைவரை பொதுமக்களே நேர்முகமாகத் தெரிவுசெய்யலாமென்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஒரு திருத்தத் தீர்மானம் கொண்டுவந்துள்ளார். அமெரிக்காவிலுள்ளது போன்ற இந்த ஏற்பாடு நாட்டின் தலைவரை "தகராறுக்குட்பட்ட' வராக்கிவிடலாம், அதாவது தேர்தல் மூலம் அவருக்கு பல அரசியல் எதிரிகள் ஏற்படலாம், அந்த எதிரிகளின் விசுவாசமும் நம்பிக்கையும் அவருக்கு எப்படிக் கிடைக்க முடியும்? தலைவர் நாட்டின் ஒற்றுமைச் சின்னமாகவோ, எல்லாருடைய மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றவராகவோ இருக்க முடியாது.

இந்தியாவிலே சட்டசபை அங்கத்தவர்கள்மூலம் மறைமுகமாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படுகிறார். இந்த முறைப்படியும் ஜனாதிபதி தேர்தலில் போட்டா போட்டிகள் ஏற்பட்டு, முடிவில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர், எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பெறமுடியாதவராகிறார். இந்தியாவில் திரு. வி. வி. கிரியின் நிலைமை இதைக் காட்டுகின்றது.

நாட்டின் தலைவராக வருபவர், நாட்டிலுள்ள எல்லா மக்களின் விசுவாசத்தையும் பெறவேண்டுமானால், தேர்தல்முறையால் அவர் தெரிவு செய்யப்படுவது சரியாகாது. தேசிய சபையில் பிரதமரும், எதிர்க்கட்சியினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒருவரையே நியமிப்பது பலவகைகளிலும் சிறந்தது. நெருக்கடியான சமயங்களில் அவர் இருதரப்பினரையும் கலந்து, நடுக்கண்ட நீதியுடனும், கட்சிப்பற்றில்லாத முறையிலும்நடந்துகொள்ள முடியும் நாட்டின் தலைவர், பிரதமரின் தயவுக்கு உட்பட்டவராகவோ, அவரது தலையாட்டியாகவோ இருப்பின், அவர் முக்கிய சமயங்களில் நடுக்கண்ட நீதியுடன் எப்படி நடக்க முடியும்? பிரதமர் தவறு செய்வதாயின் அதைத் திருத்தவும் தலைவருக்கு எப்படி துணிச்சல் ஏற்படும்?

ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமாயின் தலைவர்,

(14-ம் பக்கம் பார்க்க)

## பரம்பரைக் கலைஞர் இந்தக் கலைமணி

### தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துகிறார்:

### இன்று வெள்ளிவிழா



தாவடி காந்தி கலை வளர்ச்சிமன்றம் தனது பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவில் கலைஞர் ஒருவரின் கலைச் சேவையைப் பாராட்டி அவரைக் கௌரவிக்கிறது. மூன்றுநாள்விழாவில் இறுதி நாளாவ இன்று செவ்வாய்க்கிழமை நிகழ்ச்சிகள் முழுவதும் பாராட்டு விழாவாக அமையும்.

கலைமணி சு. வடிவேல்தான் இன்று இப் பாராட்டுப்பெறும் கலைஞர் ஆவர். கலைமணியின் இருபத்தைந்து வருட கலைச்சேவையைக் கௌரவித்துப் பாராட்டுமுகமாக தாவடி இன்று விழா எடுக்கிறது.

வெள்ளிவிழாக் காணும் கலைமணி நாடறிந்த கலைஞர். ஏடறிந்தகலைத்தொண்டர். அவர் பல்கலை வல்லுநர். அவர் ஈழநாடு வார இதழில் எழுதி வந்த ஈழத்துக் கலைஞர்கள் பற்றிய கட்டுரைத்தொடர் அவரது கலைப்பற்றையும், நம் நாட்டுக் கலைவளர்ச்சியில் அவர் கொண்டுள்ள மோகத்தையும் எடுத்துக் காட்டுவதாகும்.

கலைமணி ஒரு சிறந்த நாடகநடிகர். விற்பாட்டு விற்பன்னர். கதாப்பிரசங்கி. பண்ணிசை வல்லுநர்.

திரு. பொ. செல்வரத்தினம் தலைமையில் தாவடியில் இன்று நடைபெறும்வெள்ளி விழாவில் தேவன்-யாழ்ப்பாணம், திரு ஈ. கே. குமரையா, திரு சமுத்திலிங்கம் ஆகியோர் கலைமணியின் கலைத்தொண்டினை எடுத்துவிளக்குகிறார்கள்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் விழாவையொட்டிப் பின்வருமாறுவாழ்த்துச் செய்தியனுப்பியுள்ளார் (ச)

**பல்லாண்டு வாழ்க**

"கலைகளிலே சிறந்தது நாடகக்கலை. ஒரு நடிகன் மேடையில் பல பாத்திரங்களில் தோன்றி அந்தப்பாத்திரத்துடன் ஒன்றி மக்கள் மனதிலே நல்ல எண்ணங்களை பரப்புகிறான் நாடகக் கலை மனித சமுதாயத்தை சிறந்தவழியில் ஒழுக்கத்துடன் நடாத்திச்செல்லவல்லது. அப்படியான கலையில் மிகத்திறமையுடன் புகழ் பெற்று விளங்குபவர் கலைமணி எஸ். வடிவேல்.

இளமை முதலே நாடகக் கலையைத் தொழிலாகச் செய்து வருபவர் கலைமணி நாடகக்கலை மட்டுமல்லாமல் கர்நாடக சங்கீதம் நட்டுவாங்கம், வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், பண்ணிசை ஆகியவற்றிலும் இவர்சிறப்புற்று விளங்குகின்றார். மூன்று தலைமுறையாக நாடக, சங்கீத, நடனக்கலையில் சிறந்த கலைஞர் குடும்பத்தில் பிறந்த இவர் இணுவில் அண்ணாவியார் சுப்பையாவின் இளைய புதல்வராவர். இலங்கை வாழ் எல்லா இனமத மக்களும் பாராட்டும் பல்கலை வல்லுனரான கலைமணி வடிவேலின் 25 ஆண்டுகலைச் சேவையைப் பாராட்டி விழா கொண்டாடுவது மிகமிகப் பாராட்ட வேண்டியதாகும். கலைஞர் கலைமணி இன்னும் பல்லாண்டு வாழ்ந்து கலைத்தொண்டாற்ற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்"


NIKONA SALES

நிகோந ஏல

விற்பனை நிலையம்

2-வது மாடி சங்கரப்பிள்ளை கட்டிடம்.

யாழ்ப்பாணத்தின் புதிய ஒரே ஒரு ஏல விற்பனை நிலையம்.

9-2-71 இன்று ஆரம்ப விழா நடைபெறுகிறது

தேவையான நல்ல நிலையிலுள்ள பொருட்களை நியாய விலையிற் பெற்றுபணத்தை மிச்சப் படுத்தவும், புதிதாக வாங்குவதைத் தவிர்க்கவும் வழி செய்வது.

உபயோகத்திற்குத் தேவை யற்றனவை நியாய விலைக்கு விற்றுப் பெறுமதியை பணமாகப் பெறலாம்.

எஸ். நரசிங்கம் J. P.
ஏல விற்பனையாளர்.

# தனிப் பெருந் தெய்வம்

குன்று தோறும் குடிகொண்டிருக்கும் குமரன் தமிழ் மக்களின் தனிப் பெரும் தெய்வம்' ஈழ வ ளத்திருநாட்டிலே அதிர்காமத்திலும், நல்லூரிலும் செல்வச் சந்நிதியிலும் எழுந்தருளிய முருகன்இரண்டாண்டுகளின் முன்பு பேராதனையிலும் எழுந்தருளன் இயற்கையின் எழிலும் கலைமகளின் கடாட்சமும் ஒருங்கே பெற்ற பேராதனையம்பதியிலே இந்து மாணவர்களின் இடையறா முயற்சியினால் எழுந்தருளியிருப்பது எல்லாவகையிலும் ஏற்றதே.

குன்றுதோறும்குடிகொண்டிருக்கின்ற குமரனை மக்கள் ஆதியில் முருகன் என்றழைத்தனர். முருகு என்றால் இளமை, அழகு, மனம்' தெய்வீகம் என்ற பல பொருள்களைக் குறிக்கின்றன. இயற்கையின் எல்லையற்ற வனப்பை, காலத்தின் கோலத்தினால் சிதையாத இளமையை முருகு என்ற அழகிய சொல்லால் அழைத்தனர் பண்டைத்தமிழர். ஆரம்பத்தில் குறிஞ்சிக்குமரனை அயினரும், வேடுவருமே தங்கள் தனிப்பெரும் தெய்வமாக வழிபட்டனர். நாளடைவில் தமிழரின் ஒப்புயர் வாய்ந்த தெய்வமாகி விட்டான்,

இயற்கையின் அம்சமாகத் திகழ்ந்த முருகன் காலகதியில் ஒருருவம் பெற்றதுடன் அவனுடைய உருவம், தோற்றம் என்பன பற்றியும் உருவப்படுத்தி வழிபடும் மரபு தோன்றியது இதனைக் கச்சியப்பச்சிவாச்சாரியார் கந்த புராணத்திலே-

அருவமும் உருவமாகி
அநாதியாய் பலவாய்
ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி
யாகித்
கருணைசுடர் முகங்க
ளாறும்



பேராதனைப் பல்கலைக் கழக முருகன் கோயிலின் வருடாந்த உற்சவத்தின் இறுதிநாளாகிய இன்றைய விழா பல்கலைக் கழகத்தின் இந்து பழையமாணவர்களால் எடுக்கப்படுகின்றது. ஹந்தானைக்குன்றில் நின்று என்றும் அருள் தருவானை துதி செய்யும் விசேடமலரிது.

கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்
குதித்தனன்
உலகமுய்ய.

என்கிறார்.

இத்தகையமுருகனை மையமாக வைத்து எண்ணிறந்த புராணக் கதைகள் எழுந்தன, இவை வெறும் கற்பனைக்கதைகளல்ல, அரிய பல தத்துவங்களை விளக்குவனவே. இம்முருகன் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்ற முப்பெரும் தெய்வங்களுக்கு நாயகனை விளங்குகின்றான். இச்சாசக்தியாகிய வள்ளியும் கிரியா சக்தியாகிய தேவயானையும் முருகனது இரு மனைவியராகவும் ஞானசக்தி அவரது வேலாகவும் புராணங்கள் சித்திரிக்கின்றன. மேலும் இக்கந்தனுக்கு ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம் வைராக்கியம் என அறுவகைக் குணங்களும் உண்டு என அவை கூறுகின்றன.

இத்தன்மையரான முருகனை உள்ளத் தூய்மையோடும் உறுதியோடும் வழிபடுவோர் எண்ணிய எண்ணியாங்கெய்துவர் கந்தனை இடையறாது வழிபட்டுயர்ந்தோரின் வரலாறுகள் நமக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன. குமரன் அருள் பெற்றுயர்ந்தவர்களான நக்கீரர், அருணகிரியார், குமரகுருபரர் என்போரின் வரலாறுகள் அனைவரும் அறிந்த ஒன்றுதான். பூதத்தின் குகையிலகப்பட்டு இறக்கும் தறுவாயில் தந்தளித்துக் கொண்டிருந்தார் நக்கீரர் ஒரு சமயம். அந்நிலையில் உள்ளம் கசிந்துருக முருகனை எண்ணி முருகாற்றுப்படை பாடினார். பக்தருக்கெளியோனான குமரனும் கருணை காட்டி அவரைக் காப்பாற்றினார். இதேபோலவே அருணகிரியாரும் பொய்மையாகிய உலகச் சுழியிலே அகப்பட்டுத் தத்தளித்த வேளையிலே கந்தன் கருணை கொண்டு கைகொடுத்துதவினான். செய்நன்றி மறவாத அப்பெரியாரும் குன்று தோன்றும் குமரனைத் தலங்கள்தோறும் சென்று திருப்புகழ்மாலையுமணிந்து கந்தனுக் கலங்காரமும் செய்தருளினார்.

— மா. சிவஞானவதி —

இத்தகைய குமரனை நம்பினோர் கைவிடப்படார், அவனை இதயக்கமலத்தில் இருத்தியோருக்கு நாளும் கோளும் துன்பம் செய்யா. தேடிவந்த தீவினைகள் செயலற்றதாகி விடும். கொடிய கூற்றுவன்கூட ஒதுங்கிவிடுவான். இக்கருத்தை அருணகிரிநாதர்—

"நாளென் செயும்
வினைதானென் செயு
மெனை நாடிவந்த
கோளென் செயும்
கொடுங்கூற்றென்
செயும் குமரேசரிரு
தாளுஞ் சிலம்பும்
சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளுங் கடம்புமெனக்கு
முன்னே வந்து
தோன்றிடிலே"

என்று கூறியுள்ளார். எனவே முருகனை மெய்யன் போடு வழிபடுவோருக்கு அவன் எல்லாப் பேறுகளையும் நல்குவான் என்பதில் ஐயமில்லை.

## பேராசிரியரின் ஆசிச் செய்தி

மாணவர்கள் நல்லவர்கள். ஆக்கப்பணியில் வல்லவர்கள் என்பதற்கு ஏற்றஎடுத்துக்காட்டாகவிளங்குவது பேராதனைக் குறிஞ்சிகுமரன்கோவில் பல்கலைக்கழக இந்துமாணவரின் முயற்சியாலும் உழைப்பாலும் உருவாகியது இக்கோயில். முருகன் எழுந்தருளியுள்ள இக்கோயிலைத் தரிசனம் செய்வோர் அருட்பொலிவுள்ள இத்தகையதோர் ஆலயத்தை மாணவர்கள் சிறப்புற அமைத்தார்களே எனவியப்புறுவர். அவர்களின் சாதனையைப் பாராட்டுவர்.

இக்கோயிலிலுள்ள முருகனை நாள்தோறும் வழிபடும் பாக்கியம் பெற்ற நாம். இப் பாக்கியத்தை எமக்கு அளித்த பல்கலைக்கழகப் பழைய இந்து மாணவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். ஒவ்வோராண்டும் அவர்கள் நடத்தும் திருவிழா அவர்களின் திருப்பணியை நினைவூட்ட உதவுகின்றது. நாள்தோறும் நாம் எமது இல்லத்திலிருந்த வண்ணம் கேட்கும் இக்கோயில் மணியோசை அவர்களின் சேவையை ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

பேராதனை முருகன் கோயிலின் கட்டட வேலைகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. பழைய மாணவரின் சேவை நிலைத்திருக்க வேண்டுமாயின் இக்கட்டட வேலைகள் செவ்வனே நடந்தேறவும் நான்தோறும் பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் அவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் நன்கொடையும் தொடர்ந்து கிடைக்கவேண்டும்.

அவர்கள் இப்பணியைச் செம்மையாகச்செய்ய அவர்ளுக்குப் பல நலனும் அருளவேண்டுமென முருகனை இறைஞ்சுகின்றோம்.

சு. வித்தியானந்தன்,
(பேராதனை பல்கலைக்கழக
தமிழ்த் துறைத் தலைவர்)

## குறிஞ்சிக் குமரனின் குறுமுறுவல்

— குகப்பிரியா —

பேராதனை யில்வந் தமர்ந்தருளாய்
பெருவிருப் போடு முருகா நீ
சீரசர் மாவிட்ட புரத்திலின்று
புறப்பட்டாயே, அன்று நான்
ஆரா அன்பை அகம்நிறைய
அள்ளிக் கொண்டு அங்குவந்து
வீரா உனது கழல்பணிந்தேன்
விழிகள் பெற்ற பயன்பெற்றேன்.

மெல்ல நிமிர்ந்து முருகா உன்
முகமலர் நோக்கி அகங்குழைந்தேன்
செரல்ல முடியா அழகுமுகம்
சோதி வீசும் அருட்கண்கள்
கல்லுங் கனியும் குறுமுறுவல்
கவிக்கு மெட்டா அருள்முறுவல்
கொல்ல எண்ணிச் சிரித்தாயோ?—எனைக்
கொள்ள எண்ணிச் சிரித்தாயோ.

பாழும் மனமோ அன்றுமுதற்
பற்றிக் கொண்ட துன்னடியை
நாளும் பேரா தனைமலைக்கு
நானே தேடி ஓடிவந்தேன்
காலும் உடலும் சோர்ந்ததில்லை
கண்ணும் கருத்தும் நிறைந்ததில்லை
நாளும் கண்டேன் அம்முறுவல்
நானோ அறியே னதன்பொருளை.

காலம் சென்றது, படுபாவிக்
கழகக் கல்வி முடிந்துவிட
வேலா உன்னைப் பிரிந்தேன்நான்
விதியோ சதியோ நானறியேன்
வாளாய் உனது மென்முறுவல்
வதைத்து உயிரை அறுக்கிறதே
வேலா வாராய் இக்கணமே
விரைந்து என்னைக் காராயோ?

## திருக்கார்த்திகையிலே....

ஏம் பேராதனை முருகன் இருக்கின்றானே அவன் கார்த்திகேயன். 'இதில் என்ன இருக்கிறது. முருகனுக்குக் கார்த்திகேயன் என்பதும் ஒரு பெயர்தானே' எனச் சிந்திக்கிறீர்களா? அதிலொரு விசேஷம் இருக்கிறதுதான் பேராதனையிலே குடிபுகுவதற்கு 1966-ம்வருடத் திருக்கார்த்திகையன்று தான் அத்திவாரமிட்டான் அந்தக் கார்த்திகேயன். அந்தத் திருக்கார்த்திகைப்பெருநாள் எம்மால் மறக்கமுடியாத திருநாள்.

மழைபொழிய வைத்துவிடுவான்.

கொட்டிய மழைநீர் தேங்கிநிற்கக் கட்டியாக உறைந்திருக்கும் எண்ணெயுடனிருக்கும் அகல்விளக்குகளைக் கோவிலைச் சுற்றிவர ஏற்றிவைப்போம். எப்படியோ கஷ்டப்பட்டு நாம் ஏற்றும் விளக்குகள் முருகனிக்கொண்டுபோய்க் குடிக்க வெறிப்பான்கள்" என்பது போன்ற பல கடுஞ்சொற்கள்.

"சம்யுக்தா"

அதன் நடுவே முருகனருளால் எமக்குப் பேராதரவு நல்கிய ஒவ்வொரு உள்ளங்களும் எம்கோவிலின் கோபுரத்தைப்போல் உயர்ந்தது என்றுதான் நாம்நன்றியுடன் நினைக்கிறோம்.

ஆனால் அந்த எதிர்ப்புகள், அதுதான் அன்று பொழியும் மழையோ? அதன் நடுவே நாம் தீபம் ஏற்றப்படும் கஷ்டம், எம் கோவில் எழக் காரணமான இந்துமாணவர் சங்கத்தின் அன்றைய தலைவர் திரு அப்புலிங்கம் போன்றோர் பட்டகஷ்டத்தை நினைவூட்டும் சாயலோ? அதன் பயனாக ஒளிவீசும் தீபங்கள் அருள் ஒளி நல்கும்முருகனுலயமோ? ஆம் அவன் கஷ்டத்தின் நடுவே எழுந்த கார்த்திகேயன், ஆலயத்தின் நடுவே பெற்ற அமிர்தம்.

## எழுந்தருளியகார்த்திகேயன்

அந்தநினைவாக ஒவ்வொரு திருக்கார்த்திகைத் தினத்திலும் நாம் கொண்டாடத் தவறுவதில்லை முருகன் அங்கே அருட்சோதி வீசத் தொடங்கிய ஒளித்திருநாள் அல்லவா? கோவிலையே ஒளிமயமாக்கி மகிழ்வதிலேஎமக்கோர் உற்சாகம்.

அந்த நினைவுநாளைச் சரியான முறையிலே கொண்டாட வேண்டுமென்பதில் எமக்கு மட்டுமல்ல முருகனுக்கும் ஓர் ஆசை. எப்படியோ ஒரு முறையாவது அருளால் பிரகாசித்து எரிவதைக் காணும்போது என் நினைவிலே இதுதான் தோன்றும்.

"திருவிழா பொருத்தமான நினைவு விழாவாகத்தான் அமைந்திருக்கிறது. கோவிலை அத்தனை சுலபமாகவா கட்டிமுடித்தார்கள். கோவில் கட்டத் தொடங்கிய போது எத்தனை எதிர்ப்புகள். எவ்வளவு கேலியும் கிண்டலும்.

"கோயிலே கட்டப் போறான்கள். காசை வாங்

### வெள்ளி மல்லிகை

# வண்ண(ணை)க் கிளி மொழியார் இரத்தினம்

**1947** டிசம்பர் மாதமாக இருக்கும். எட்டயபுரம் பாரதி மணிமண்டபத் திறப்பு விழாவுக்குத் தமிழகம் சென்று ஒரு மாதம்மட்டில் அங்கு தங்கியிருந்துவிட்டுத் திரும்பிய நாட்கள் எட்டயபுரம் விழா பற்றி இலங்கை வானொலியில் என் பதினைந்து நிமிடப் பேச்சு ஒன்று ஒழுங்காகியிருந்தது. அப்பொழுது நான் திருக்கோணமலை வாசி. வானொலிப் பேச்சுக்காக கொழும்பு பயணப்படவேண்டிய தினமாக திருமலையில் நல்ல மழை. பயணத்தைத் தடைப்படுத்திய மழை. எப்படி நல்ல மழையாகும். ஆகவே விடாமழை, வழிவிடாமழை என்போம். அதற்கும்மேல் 'அடாத மழை' என்றுவேண்டுமானாலும் சொல்லி ஏசலாம். ஏன்? பல்லாயிரக் கணக்கானோர் செவிப்புலனைத் தீட்டிக் கூர்மைப்படுத்திக்கொண்டே கேட்பதற்கு ஆவலோடு காத்திருந்த என் பேச்சுக்கச்சேரியைக் கடைசி வேளையில் இப்படி வகை மோசம் பண்ணிக் கெடுத்துவிட்டதல்லவா? (என் பேச்சு வானொலியில் நல்லதொரு பாட்டுக் கச்சேரி கேட்டது போலிருந்ததாக சில நாட்களின்பின் யாழ்ப்பாணத்திலிருந்து என் பழைய நாள் இலக்கிய விசிறி ஒருவர் அபிப்பிராயம் எழுதியிருந்தார். ஆகவேதான் பேச்சுக் கச்சேரி என்று குறிப்பிட்டேன்.)

அன்று அந்த மழையுடன் கூட எனக்குச் சுகவீனம்- வழமையான ஆஸ்த்துமாதான். அன்றைக்கென்று ரயில் பிரயாணம் செய்ய முடியாதபடி வலுவாகப் போட்டுப் பிடித்துவிட்டது. கடைசிப் பயணத்தையே அடிக்கடி பயங்கரமாக நினைவுபடுத்திக்கொண்டிருக்கும் பொல்லாத மூச்சுத் திணறல். அதுசமயம் ரயில் பயணத்துக்குத் துணிவு வருமா? கடைசி வேளையில் வானொலி நிலையத்துக்குத் தந்தி அனுப்பி வைத்துவிட்டுப் படுத்த படுக்கையிலானேன். படுக்கிறதாவது! ஆஸ்த்துமாக்காரர் படும் பாட்டைப் பார்த்திருக்கிறீர்களா, மகா கண்ணராவி. பத்துத் தலையணை, எட்டு விரிப்பு, ஏழு சாய்மனை. பாய், தடுக்கு மெத்தை இத்தனைக்கும் மேல் ஆணியிலே தூளி கூடக் கட்டிப்போட்டுவிட்டு படுக்கவும்மாட்டாமல் இருக்கவும்மாட்டாமல் வெளவாலைப்போலத் தலைகீழாய்த் தொங்குவார்கள். இந்த சென்மசத்துரு கடல் கடந்து எட்டயபுர விழாவுக்குச் சென்றிருந்தபோதும் அங்கு ஓர் இரவு தலைகாட்டிப் பெருந் தொல்லைகொடுக்கப்பார்த்தான். நல்லவேளையாக அதுசமயம் முன்னெச்சரிக்கையாகவிருந்து அந்தக் கிராதகனின் வாலை ஒட்ட நறுக்கித் தலையடி போட்டு மடக்கிவிட்டேன். வாழ்நாள் முழுக்கவும் அல்லும் பகலும் அனுதினமும் இதே போல் முன்னெச்சரிக்கையுடனே தற்காப்புப் போராட்டம் நடத்துவதே வேலையாக இருக்க யாரால் முடிகிறது!

அக்கரைச்சீமையில் எங்கேயோ ஒரு மூலையில் உள்ள பட்டிக்காட்டில் அன்றைக்கு அந்த இரவு இருளடைந்த ஒரு கிராமப் பள்ளிக்கூட மண்டபத்தில் கன்னித்தமிழ் வளர்க்கும் எழுதுகோல் குமரர்கள் மத்தியில் ...—...மகாவேடிக்கை அது! அதுபற்றிப் பின்னொரு முறை சொல்கிறேன். முன்பும் எப்பொழுதோ எழுதியதாக ஞாபகம்.

பாரதிவிழாபற்றிய பேச்சு நிகழ்ச்சி பின்போடப்பட்டதுபற்றி நிகழ்ச்சிக்குமுந்திய கடைசி நாள் அன்று அதனை அறிவித்த வானொலி அறிவிப்பாளர் அந்த நிகழ்ச்சி மாற்றத்தை எப்படித் தெரிவித்தார் தெரியுமா?

"பார்வதி மணிமண்டபம் பற்றி நாளை பேசவிருந்த பேச்சாளர் இன்று ரயிலைத் தவறவிட்டு கொழும்பு வர மாட்டாமலாகிவிட்டதால் அவரது பேச்சு எதிர்பாராதபடி பின்போடப்பட்டுவிட்டது" என்றார். என்னைப் பிடித்துவாட்டிய ஆஸ்த்துமா தடதடப்பு, அறிவிப்பாளரையும் அவ்வேளை

- அ. செ. மு.

பிடித்துவாட்டியதோ அல்லது வேறு என்ன படபடப்போ தெரியவில்லை. 'பாரதி மண்டபம்' 'பார்வதி' மண்டபமாகத்தான் அவர் வாயில் வந்தது! எனது தந்தி அறிவித்தல் உடனே கிடைத்துஅன்றைக்கிரவே ஏழு மணிச் செய்தி அறிக்கையோடு இது செய்தியும் அறிவிக்கப் பட்டுவிட்டதால் மறுதினம் என் பேச்சைக் கேட்க ஆவலோடு காத்திருந்த ஒலி அகில நேயர்கள் பலர் கடைசிவேளை ஏமாற்றத்துக்குள்ளாகி தட்டுக்கெடாமல் காப்பாற்றப்பட்டார்கள்.

அன்றைய தினமாக யாழ்ப்பாணத்திலிருந்து எங்கள் வீட்டுக்கு அதிதியாக வந்திருந்த பிரபல பாடகர் இரத்தினத்தார் நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டு அன்று என் கூட வீட்டிலிருந்தார். ஆஸ்த்துமாவினால் இவ்விதமாக நான் பட்ட அவதியையும் கொழும்புக்குத் தந்தி அனுப்ப அந்த விடாமழையில் பட்டபாட்டையும், வீடெல்லாம் எங்கும் ஒழுக்கும் தண்ணீருமாய்ப் போய்க்கிடந்த கோலத்தையும் பார்த்து மனுஷன் என்ன நினைத்தாரோ (இத்தனை ஆண்டுகளாக ரேடியோவில் பாடிவருகிறேனே, இதுமாதிரி ஒரு தடவைகூட புரோகிராமைத் தவறவிட்டதில்லையே என்றும் மனதுக்குள் நினைத்துச் சிரித்திருக்கலாம்) இராப்போசனம் ஆகி சில வேளைக்குள்ளாகக்கிளம்பிவிட்டார். இந்த இருட்டிலும் மழையிலும் எங்கே போவீர்கள் என்று எங்கள் வீட்டிலே எவ்வளவோ வற்புறுத்தி தடுத்தும் கேளாமல் 'எனக்கா இடமில்லை. இதே தெருவில் நாலுவீடு தாண்டிப்போனால் சொர்க்கலோகம்மாதிரி இடம் கிடைக்கும். ஒருபொழுது அங்குபோய் தங்கிவிட்டு காலையில் வருகிறேன்' என்று சங்கீதக்காரர்பாஷையில் கூறிப் போய்விட்டார்.

இரத்தினத்தார் கூறிய அடையாளப்படி அந்த வீட்டைத் தெரிந்து கொண்டபோது...... அது மெய்யாகவே 'சொர்க்கலோக'மாகத்தானிருந்தது. கிருஷ்ண பரமாத்மாவின் துவாரகைச் சொர்க்கம்; அந்த வீட்டிற்குத் 'துவாரகை' என்று சில காலத்துக்கு முன்னதாகத்தான் புதிதாகப் பெயர் சூட்டியிருந்தார்கள். அங்குள்ள ஒரு கானப் பிரியை திருமலை கண்ட மிகச்சில நல்ல பாடகிகளில் ஒருவர். அவரை எனக்கு முன்னமே தெரிந்திருந்தது. யாழ்ப்பாணத்து இரத்தினத்தாரையும் முன்னமே வெகுகாலமாகத் தெரியும். ஆனால் இரத்தினத்தாருக்கு ஊரெங்கும் சங்கீத உலகில் இவ்வளவு அறிமுகம் இருக்கும் சங்கதி அன்றைக்குத்தான் தெரியும். அதன்பின் திருக்கோணமலையில் தட்சிணகான சபா வைத்து நடத்தும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், அவரது தந்தையும் ஊர்ப்பிரமுகருமான பாலசுப்பிரமணியம் சாகும் வரை யாழ்ப்பாணத்துக் கலைஞர்களை மதித்து வந்த சரவணப்பெருமாள் - எனப் பலபேர் இரத்தினத்தாருக்கு 'மிகவும் வேண்டியவர் களாயிருந்ததைக் கண்டேன். அதனால் மறுதினம் விடியற்காலை திரும்பியவர், குந்தியிருக்க நேரமில்லாமலே எங்களிடம் விடைபெற்றுப் பறந்துவிட்டார்.

0 0 0

கலை உலகில் புகழ்பெற்ற யாழ்ப்பாணம் புத்துவாட்டி குடும்பத்தைச் சேர்ந்தவர் திரு இரத்தினம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக்கொண்டவர், பாலியம் முதலாக காலமான கடைசி ஆண்டான 67- வரை இசையே இவரது ஒரே தொழிலாக-உயிரும் பிராணனுமாக இருந்தது. ஆரம்பத்தில் சிலகாலம் மிருதங்கமும் தவிலும்கூட வாசித்தார், அதில் ஓரளவு வல்லமையும் பெற்றார். ஆனால் பிற்பாடு இரண்டையும் கைவிட்டுப் பாடகராக அரங்கேறி அத்துறையில் பேரும் புகழும் அடையலானார் இலங்கை வானொலியில் முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து பாடிவந்திருக்கிறார் (இத்தனை சித்திகளுக்கும் திரு இரத்தினம் தமது ஆயுள் காலத்தில் யாரிடமும் சிட்சை கற்றுக்கொண்டதில்லை இசைத்துறையில் தாயாகப் பெற்ற அனுபவமும் சொந்த ஆர்வமுமே காலக்கிரமத்தில் அவரை ஒரு சிறந்த பாடகர் ஆக்கி வைத்தன) இரத்தினத்தாரை வாய்ப்பாட்டுக்கு ஊக்குவித்தது சில காலம் ஆர்மோனியத்துடனே கூட கோவில்களில் பஜனை பாடிய நாளில் ரசிகர்களிடத்தே பெற்ற அமோக ஆதரவும் பாராட்டுகளுமே என்று கூறலாம்

அரசாங்க பாடசாலைகள் உட்பட பல பாடசாலைகளிலும் பெரும் உத்தியோகத்தர் குடும்பங்களிலும் நெடுங்காலம் பாட்டு வாத்தியாராகப் பணிபுரிந்த இரத்தினத்தார் அப்பொழுதெல்லாம் பல இசை நாடகங்களை முழுக்கவும் சுய ஆக்கமாகவே மேடைக்கு அளித்திருக்கிறார் கோலாலம்பூர் சங்கீத அபிவிருத்தி சபாவின் அழைப்பின் பேரில் அங்கு சென்று ஐந்து வருட காலம் சபாவின் சங்கீத ஆசிரியராகப் பணியாற்றி பல மேடைக் கச்சேரிகளும் செய்து கடல் கடந்த ரசிக நேயர்களின் பாராட்டும் ஆதரவும் பெற்று புகழ்சுமையுடனே தாய் நாடு திரும்பினார் - என்பதாக அவர் புதல்வர் கூறுகிறார்.

இரத்தினம்பிள்ளையிடம் இசை பயின்ற மாணவிகள் பொலிகண்டி (திக்கம்) மல்லிட்டி. ஏழாலை. திருக்கோணமலை, மட்டக்களப்பு, திருநெல்வேலி ஆகிய ஊரெங்கிலுமுள்ளனர். தென்னிந்திய சங்கீத வித்துவான்களிடத்தும் பாராட்டும் நன்மதிப்பும் பெற்றவர் இரத்தினம். பழைய நாள் தவில் வித்துவான் வண்ணார்பண்ணை கணேசுவும் ரேயல் பபூன் செல்லையாபிள்ளையும் இரத்தினத்தாரின் உடன்பிறந்த சகோதரர்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

---

### பழந்தமிழர் கண்ட

# உண்டிக்கு ஒரு விழா- 'புதிர்' சமைக்கும் விழா

கு. வி. மகாலிங்கம்

"இலமென் றசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும்
நல்லாள் நகும்"

வான்புகழ் கொண்டநாடு தமிழ்நாடு என்ற பெருமைக்கு வித்திட்ட வள்ளுவரின் மணிமொழி இது...

உழைப்பிலேதான் மனிதன் வாழவேண்டும். உழைத்துண்ணுகின்ற வாழ்க்கைதான் ஒப்பற்றதென்ற உண்மையை உறுதியாகவள்ளுவர் இந்த மணிமொழி மூலம் மன்னவருக்கு வழங்கினார்.

அசையாமல், இல்லையே என்று இருக்கின்ற மனிதனைப் பார்த்து நிலத்தாய் சிரிப்பாள் என்றுவள்ளுவர் சொல்லி மக்களனைவரையும் உழைக்கத் தூண்டுகின்றார். எனவே, உழைப்பில் நிறைவு காணுவதற்கு முனைந்தவன் தமிழ்உழவன்.

மாரிகாலத்தின் ஆரம்பத்தில் வரண்டநிலம் குன்றுகின்றது. காய்ந்த வாழ்வு கனிவுபெற ஏர்கொண்டுவயலைச் சீர்செய்தான். புனலுண்டுவயல்பொங்கிவளர்ந்தன... தன்னுழைப்புச்சக்தியெல்லாம் தண்ணார்ந்த கதிராகியதைத் காண்கின்றான் நிமிர்ந்த கதிர்கள் சூலுற்று நிலஞ்சாய்ந்து கிடந்தன. நெற்றி வியர்வையின் முத்துக்களான நெல்லுமணிகளைக் கண்டுஎல்லையற்றஇன்பம் கொண்டான்...

ஊரெலாம் வாழ, ஏர் பிடித்தவனிதயம்ஊரோடு உண்ணும் பண்பினன். புதுமையாகப் பூத்தநெல்லுமணிகளைக் கொய்தான்.

"கரும்பினை உடைத்து
வள்ளல்
கடாவினை அடித்தபோது
செறிந்தன முத்து"

கரும்பார் தடியினை முறித்து வயலில் உழுது கடாவை அடித்தபோது சிதறின நெல்லு முத்துக்கள் என்று பழமையான பாடல் ஒன்று முதன்முதலாக நெல்லைக் கொய்யும் காட்சியை வர்ணிக்கின்றது.

இவ்வாறு முதன்முதலாக நெல்லைக் கொய்கின்றநாள் புதிர்கொய்யும் தினமாகும்.

#### புதிர் கொய்யும் விதம்

வயலின் வடக்கு அல்லது கிழக்குப்புறத்தில் கட்டு வரம்புகளின் நாற்சந்தியில் முளைக்கட்டை நாட்டி அதில் மாவிலை, வேப்பிலை கட்டி தோரணங்களுடன் விக்னேஸ்வரனின் பிரதிமைய கோமயத்தினால் உண்டாக்கி வைப்பர்.

விக்னேஸ்வரனுக்கு பாலறுகு சாத்தி, தேங்காயுடைத்து கற்பூரம் காட்டிக் காவல் செய்வான். அதன் பின்னர் தலையில் தலைப்பாவைக்கட்டி கம்பீரத்துடன் சென்று வடக்குப்பக்கத்தில் அரிவாள் கொண்டு முதல்கதிரை அறுவடை செய்வான். அதை முளைக் கட்டையடியில் வைத்து வணங்கித் தனது விளைவு அதிகரிக்கப் பொலி பொலி எனப்பிரார்த்திப்பான்.

பின்னர் கதிர்கட்டை தலையிலே கொண்டு தேவார திருவாசகத்தை ஓதியபடி தனது வீட்டுக்கு நேரில்வருவான்.

வீட்டுவாசலில் வந்ததும் இல்லாள் ஆலாத்தியெடுத்து அவனை வரவேற்பாள். இல்லத்தின் முற்றத்தில்வைக்கப் பட்டுள்ள பூரண கும்பத்துக்கு முன்னர் அவன் செல்வான்.

பூரணகும்பத்தை வலம் வந்து களப்பலியாக அறுவடை செய்த ஆயுதத்தால் நிலத்தில் ஒருதரம் கொத்துவான். மாவிலை வேப்பிலை சேர்த்து முதலில் வீட்டின் கன்னிமூலையில் முதலில் கட்டியபின் மாட்டுக்கொட்டில் உட்பட குறிப்பிட்ட இடங்களில் கட்டுவான்.

புதுநெல்லைக் காயவைத்து ஆலயத்துக்கு எடுத்துச் சென்று வழிபாடு செய்த பின்னர்மீண்டும் வீட்டுக்குள் கொண்டுவருவான். அதன் பின்னரே நெல்லுக்குற்றப்பட்டு அரிசியாக்கப்படும். பகல் அது அமுதாகச்சமைக்கப்பட்டு பல கறிவகைகளுடன் பால் பழம் சேர்த்து தலைவாழையிலையில் படைத்து வணங்குவான். புதிருணவின் முதற்பகுதி அடுக்களை அடுப்புகளுக்கு அவிர்பாகமாக இடப்படும்.

அடுத்துக் குடும்பத்தலைவனான விவசாயி புதுச்சாதத்தைப் பல கறிவகையுடன் பாலும் பழமும் போட்டுப் பிசைந்து தனது குடும்பத்தவருக்கு வழங்குவான். தனக்கு அன்னம் வழங்கும் மனைவிக்கு கணவன் அன்னம் வழங்குவது புதிருண்ணும் தினத்திலேதான்.

இந்தப் பண்பாட்டோடொட்டி பாரம்பரியமான புதிர்எடுத்து உண்ணுவது தைமாதம் பூசம்வரை நடைபெறும்.

எப்படியேனும் ஒவ்வொரு விவசாயியும் தைப்பூசத்திலே புதிர் உண்ணவேண்டுவான். தைப்பூசவிழா புதிர் விழாவாகவும்; விவசாயமக்களின் பிள்ளைகள் நேர்த்திக் காவடியெடுக்கும் விழாவாகவும் அமைந்துள்ளது.

சிறுகதை

# "காதல் பொய்ப்பதில்லை"

— எஸ். பி. கிருஷ்ணன் —

"அடுத்த வீட்டு அம்பலவாணரின் மூன்றாவது மகள் கண்மணியாருடனோ ஓடிவிட்டாளாம்...பேப்பரிலே இல்லையா இந்தப்புதினம்..."

தினசரியை தாழ்த்தி. தலை நிமிர்ந்து மனைவியைப்பார்த்தேன்...

எப்போதுஓடினாள்...? ஓடினாள் என்றால் களவாக, காதலனோடு ஓடினாள்; அப்படித்தானே...?"

"ஓ, நேற்றிரவுதான்நடந்தது அவன் தெருவிலே, பஸ் நிலையத்திலே நின்றானாம்... இவள் ... திட்டமிட்டபடி, வெளியேறிப் போய் விட்டாளாம் ... அவனுடன் பஸ்ஸில் ஏறி..."

நல்லதுதானே...என்றேன்.

"எது நல்லது. களவாக ஓடுவதா?"

"பெண்ணுக்கு என்னவயதிருக்கும்?"

'இருபத்தெட்டு' என்றார்கள்.

"அடுக்கும் இது அடாதது இது என்று பகுத்தறியும் பக்குவம் பெற்ற வயதுதானே, வீடுவரை வந்து அழைத்துச் சென்றானே... அவன்கோழையல்லவே! கருத்தொருமித்த காதல்வாழ்க்கை மகிழ்ச்சியாக ஓடும் பாரும்" வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தினேன்.

"பாவம்... தாய்தந்தையரை, தவிக்கவைத்து. சகோதர. சுற்றத்தை துறந்து. போய்விட்டாள்... நீங்கள் நல்லது என்று வாழ்த்தி அவர் வீட்டுக்குப் போய் ஆறுதல் சொல்லிவிட்டு போங்கள்."

'சரி' என்று சொல்லிஎழுந்தேன்.

அரைமணி முன்னதாக அலுவலகம்போகப்புறப்பட்டேன் தெருவில்காலெடுத்து வைத்தபோது என் முன்னால் அம்பலவாணர் தோன்றினார்.

"ஐயா..."

"என்ன, எப்படிச்சுகம்?"

"எனக்கு ஒரு உதவிசெய்ய வேண்டும்... அறிந்திருப்பீர்களென நினைக்கிறேன். என் பிள்ளையை யாரோ ஏமாற்றிக் கூட்டிக்கொண்டு போய் விட்டான்... பொலிஸ் ஸ்டேசனுக்கு என்னோடே ஒருக்கால் வர வேணும்.

"பொலிசில் புகார்செய்து ...பிள்ளையை திருப்பிக்கூட்டி வரப்போகிறீரோ கொஞ்சம் யோசித்து செய்ய வேண்டிய அலுவல், இது. இதை இப்படியே விட்டு விடுவதுதான் புத்திசாலித்தனம்; அம்பலவாணர்... இப்ப உமக்கு கவலையும், கோபமும். இருப்பதால் அப்படி எண்ணுகிறீர்... ஆனால் கடைசியல நடப்பதும் நான் சொல்வதும் ஒன்றாகத்தானிருக்கும்..."

"அவன்...சாதியாம்... சமயமாம் ஐயா, ஊர். உலகம் என்ன சொல்லும் இருக்கிற மற்றப்பிள்ளைகளைப் பிறகு நான்என்ன செய்கிறது? அவனுக்கு அவ்வளவு துணிவுதானே...பொலிசில் சொல்லி அவனைப்பிடித்து...

உமது மகளுக்கு என்ன வயதிருக்கும்?

இருபத்தெட்டு, அவன் விரும்பியவனை மணஞ்செய்ய சட்டம் இடமளிக்கிறது. சாதிவேறு சமயம்வேறு என்பதற்காக அத்திருமணத்தை தடைசெய்யசட்டமில்லை. பிள்ளைக்கு இருபத்தெட்டு வயது என்றால் காலாகாலத்தில் கலியாணத்தை முடித்துவைத்தால் சாதி, மதம் மானம் இவற்றை எண்ணிக்கவலைப்படும் நிலை வந்திருக்காதே. கடமையிலிருந்து தவறியநீர் மேன்மேலும் தவறிழைக்க வே விரும்புகின்றீர் உமதுபெண் புத்திசாலி தனக்குப்பிடித்தவனை, தேர்ந்தெடுத்து விட்டாள்.

காலம் மிகவேகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. படித்தவன், நாகரிகமடைந்தவன், என்ன எண்ணுகிறான் தெரியுமா? வயது வந்த பெண்கள் வாலிபரோடு கலந்து பழகவேண்டும், காதலிக்கவேண்டும். விரும்பியவரை மணம்செய்து கொள்ளவேண்டும், என்று எண்ணுகிறான் சீதனத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறான். பெற்றோரின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கும் நல்ல பிள்ளைகள் வயது கடந்தபின்னும் வாழ வழியற்றுப் பெருமூச்சுவிடுகிறார்கள்.

எனவே, கவலையைவிடும். உமது பிள்ளை நல்லபடி வாழ்வாள்... பொறுத்துப்பாரும் என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு அலுவலகம் சென்றேன்.

0 0

கலியாணப் பதிவுகாரர் அலுவலகம், அங்கே நாலைந்து இளஞ் சோடிகள் சுற்றஞ் சூழ காணப் பட்டனர். ஒரு வேளை கண்மணியும் அவள் காதலனும் பதிவுசெய்து கொள்ள வந்திருப்பார்களோ, என்ற ஆவல் உந்த எழுந்து ஒருசிற்றுலா சென்றுபார்க்கையில்-

ஐயா என்றொரு குரல் கேட்டது.

திரும்பிப்பார்த்தேன்.

கண்மணி நின்றாள்

அம்பலவாணர் கண் கலங்கி நின்ற காட்சி என் மனக்கண்முன் நின்றது. அவருக்கு நான் சொன்ன அறிவுரைகளை மறந்தேன்.

"நீ யாருடனோ ஓடிவிட்டாயாமே? உன் குடும்பத்திற்கு வசையுண்டாக்கிவிட்டாயே?" என்றேன் சற்று கோபத்தோடு.

"ஐயா. என்னைமன்னியுங்கள்-நீங்கள், படித்தவர் பெரியமனிதர், என்று எண்ணியே..."

படித்தவர் என்று அவள் சொன்னபோது அவள் மீது எனக்கு கருணை பிறந்தது என் கடமையை உணர்ந்தேன்.

என்ன கண்மணி உனக்கு என்ன வேண்டும். எங்கே உன் காதலன்? பதிவுசெய்து கொண்டுபோக வந்தீர்களா? என்று அன்போடு கேட்டு நின்றேன்.

அவள் தன் கணவனோடு காரில் ஏறினாள். அவன் அழகனாகத் தோன்றினான்.

மாலையில் அலுவலகம் விட்டு வீடு திரும்பும் வழியில் அம்பலவாணரைக்கண்டு ஆறுதற்சொற்கள்சொல்லிப் போகவேண்டும், என்று காலையில் எண்ணிய எண்ணம் மாறலாயிற்று. நேரே என்வீடுபோய்ச்சேர்ந்தேன்.

மனைவி தந்த தேநீரைப் பருகி, களைப்பை அகற்றிக் கொண்டு. காலைத் தினசரியை எடுத்தேன், தொடர.

'அம்பலவாணர் வீட்டிற்குப் போனீர்களா?' என்று கேட்டபடி என் அருகில் வந்தமர்ந்தாள் மனைவி.

"போனேன்..."

"போனீர்கள் பயனில்லாமல்."

"சொல்ல வேண்டியதைச் சொன்னேன் பயனைப் பற்றி கவலைப்படமுடியுமா?'

'உண்மைதான் ... நாம் சொல்லுவது நல்லதாகப் படாது, அவர்களுக்கு வாலிபர் சிலர் சேர்ந்தார்களாம்.

விடாதேபிடி...என்றவகையில் காரியம் நடந்ததாம், அதற்காகவே வந்தோம் சாட்சி வேண்டப்பட்ட போது நீங்கள் அருகேவேலை செய்யும் நினைவு வந்தது. தேடிவந்தேன், என்றாள் சரி வருகிறேன் என்று அவர்களோடு சென்று அலுவல்களைக் கவனித்தேன்

தம்பதிகளின் பெயர் விபரம் கேட்டு எழுதினார் பதிவுகாரர்.

பெயரால் சாதிவேறுபாடு தெரிந்தது

மதத்தால் வேறுபாடு தெரிந்தது.

சமூகம் செய்த வேறுபாடுதானே. சட்டம் இடம்தருகிறதே என்றெண்ணி அமைதிபெற்றேன் சாட்சியாக கையெழுத்திட்டு, தம்பதியை வாழ்த்தி, விடைபெற்றேன்

பலன்தான் பூச்சியமாம்.

'என்ன நடந்தது...?'

'தேடிப்போனார்களாம் ... கண்டார்களாம்... கண்மணி சொன்னாளாம் எண்ணித் துணிந்த கருமம், இனி எண்ணுவதற்கொன்றில்லை, யென்று.'

'ஓ அவள் திருக்குறள் படித்திருக்கிறாள்.'

'போனவர்கள் திரும்பி வந்தார்களாம் தோல்வியோடு, பாவம் அவள் தாய்— அவருக்கு நான் ஆறுதல் சொன்னேன்.'

என்பிள்ளை எங்கே என்ன கஷ்டப்படுகிறதோ, அவன் அவளையும் கூட்டிக்கொண்டு வந்தான் என்றால், என்று ஆசைப்பட்டாள். பெற்றவளுக்குள்ள பாசம் அப்படி,'

'எனக்கொரு பாடல் நினைவு வருகிறது,'

'வெஞ்சின விறல்வேல் காளையொடு

அம்சில் ஓதியை வரக்

கரைந்தீமே'

தாயொருத்தி காக்கையைப் பார்த்து கெஞ்சினாளாம். காதலனோடு களவாக சென்றுவிட்ட தன்மகள் காதலனோடு திரும்பி வர, கரைவாய் என்று பேசுவதெல்லாம் பல வகையாகயிலும் எண்ணங்கள் ஓர் இயல்பினதானே.

0 0 0

செய்தித் தலைப்புக்களைப் பார்த்துவிட்டு, அலுவலகம் போவதும் மாலையில் வந்து விபரமாகப் படிப்பதும் என் பழக்கம்

'எட்டுப்பிள்ளைகளின் தாய் காதலனுடன் ஓட்டம்.'

'காதலன் கைவிட்டதால் காதலி தற்கொலை'

'பள்ளி மாணவி படமாளிகையில் கும்மாளம்'

'பருவக்குமரி கற்பழிக்கப் பட்டாள்'

'நள்ளிரவில் காதலனுடன் கன்னி ஓட்டம்'

இவை போன்ற கடைசிப் பக்கச் செய்திகளை இரண்டாம்முறை படிக்கமாட்டேன்

ஆனால் சில நாட்களாக அத்தகைய செய்திகளை கவனமாகப் படித்துவந்தேன்.

நள்ளிரவில் காதலனுடன் ஓடியவள் நமது கண்மணிதான் அச்சம்பவம் நடந்து இருபது நாட்களாகிவிட்டன இப்போதுதான் பத்திரிகையில் வந்திருக்கின்றது

பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு எழுந்தேன் இணற்றடியிலிருந்து மனைவியின் அழைப்புக்குரல் கேட்டது:

என்ன என்று கேட்டு நடந்தேன்

மெல்ல என்காதில்சொன்னாள் அங்கே பாருங்கள் 'கண்மணி நிற்கிறாள் அவனும் நிற்கிறான் போலிருக்கு

நிமிர்ந்து பார்த்தேன் அங்கே பல்துலக்கியபடி நின்றவன்- அவன் தான் அவன் தான் என்றேன்.

(யாவும் கற்பனை)

# இதுதான் வாழ்க்கை!

உருவகக் கதை

— நவசிலி —

படிப்படியாக ஒழுங்கான வட்டங்களில் பரவிச் சிதறுகின்றன. அலைகள் பேரலைகளுடன் பொங்கும் கடலின் பரபரப்போ அன்றி சிறியோடும் அருவியின் வேகமோ சிறிதேனும் கொண்டிராத அக்கிணற்றின் அமைதியை சிறுவன் ஒருவன்கல்லெறிந்து குழப்புகிறான். அடுக்கடுக்காக உண்டாகி அசைகின்ற அலைகளிலே நீர்க்குமிழி ஒன்று தோன்றித் தோன்றி உடைகிறது.

'களுக்...' ஒரு கல்!

ஆயிற்று அலைகள் விரைகின்றன. கூடவே நீர்க்குமிழி அவற்றின்மீது உருள்கின்றது அவை பரவும் வேகத்தில் அது விரைந்து உடைகிறது.

இரண்டுமூன்று நான்கெனப் பெருகுகின்றது கற்களின் தொகை. நீர்க்குமிழியும்பிறந்து பிறந்தழிகிறது.

மீனொன்று இதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. நீர்க்குமிழி உண்டாவதும் உடனடியாக அழிவதும் அதற்கு வேடிக்கையாக இருக்கிறது.

அடுத்துவந்த அலைகளிற் தோன்றிய நீர்க்குமிழி அதிர்ஷ்டவசமாக ஒரு இலையின் நுனியிற் படிகிறது இலையோடு மிதந்து அது மீனுக்கருகே வருகிறது தன்னைப் போல சுயமாக நீந்தும் திறனின்றி இலையின்மீது தொற்றிக்கொண்டு நீர்க்குமிழி பெயர்வதைப் பார்க்க மீனுக்கு அடக்கமுடியாத சிரிப்பு உண்டாகிறது.

மீனின் சிரிப்பைப் பார்த்து நீர்க்குமிழி காரணமறியாது விழிக்கிறது. 'என்ன தம்பி சிரிக்கிறாய்?'

'பிறக்கில் என்னைப்போல லாவகமாக நீந்தக்கூடியதாக வல்லவா பிறக்கவேண்டும்? இதோபார் உன் நிலையை; இலைக்குமீது ஏறியல்லவா வலம்வருகிறாய்?' என்கிறது மீன்.

நீர்க்குமிழி மெதுவாக முறுவலிக்கிறது. 'எல்லோரும் உன்னைப்போல இருந்துவிட முடியுமா? நிறைவினால் மட்டும் வாழ்க்கையாகிவிட முடியாது. அதிற் குறைகளும் இருக்க வேண்டும் தெரியுமா?

'வீண்பேச்சு!'

'ஏன் தம்பி?'

'போயும் போயும் உன்னைப் போலவா இருக்க வேண்டும்? இந்த விடி தோன்றி அடுத்த விநாடி மறைந்தே நிலையில்லாமல்...'

ஆஹா...ஹா நீர்க்குமிழிக்கு சிரிப்பு பீறிடுகிறது, அதன்சரீரம் பெருத்து பெருத்து சருமம் மெல்லிதாகி நலிவுற்று வெடிக்கிற நிலையிலும் அது தன்னிலையறியாமற் சிரிப்பைத் தொடர பட்டென்று உடல் வெடித்து அதன் சிரிப்பு அடங்கி விடுகிறது.

மீன் திருதிருவென்று விழிக்கிறது.

மீண்டும் ... களுக்

நீர்க்குமிழி அசடு வழிய தலையை மெதுவாகத் தூக்குகிறது. எதையும் அதிகம் அனுபவிக்க நினைத்தால் இப்படித்தான் தம்பி நான் அதிகம் சிரித்தது தப்புதான். அதுசரி நான் அழிந்தழிந்து தோன்றிக்கொண்டேயிருப்பேன். காலவரையறையில்லாமல் தோன்றுவேன் அழிவேன். நீ அழிந்தால் மீண்டும் தோன்ற முடியுமா?

மீனுக்குப் பொறுக்க முடியவில்லை. லபக்கென்று தொங்கி விழுகிறது நீர்க்குமிழிமீது.

படீர்!

(12 ம் பக்கம் பார்க்க)

வட்டியுடன் இனாம்!
ரூபா 1000'- ஆயிரத்துக்கு
வருடம் 7 சதவீத வட்டி கொடுக்கப்படும்
இதை ஏழுநாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்
ஒவ்வொரு மாதமும் அதிஷ்டமுள்ள ஒருவருக்கு
ரூபா 30/- முப்பது
இனாமாகக் கொடுக்கப்படும்
மறு விபரங்கட்கு:-
தம்பி அன் கோ,
வண்ணார்பண்ணை.

# திராட்சை அபிவிருத்தியால் சிறந்த வருவாய் கிடைக்கும்

— செலஸ்தீன் இராசா —
தாளையடி.

தாளையடியைச் சுற்றியுள்ள குடத்தனை, செம்பியன்பற்று, மருதங்கேணி இராமசேவையாளர் பிரிவுகளை வடமராட்சி கிழக்குப் பகுதியெனமக்கள் அழைத்து வருகிறார்கள். இந்தப்பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும்பான்மையாக கடற்கரையோரங்களிலே வசித்து கடற்றொழிலையே தமது ஒரே தொழிலாகச்செய்து வருகிறார்கள் இப்பிரதேசம் புவியியல் முறைப்படி குறைந்த மழையும் கூடிய வெப்பமும் கொண்ட வரண்ட பிரதேசமாகும் இங்கு சிறு பற்றைக்காடுகள்காணப்படுகின்றன. இப்பிரதேசத்தில் எவ்வித பயிரும் பயிரிட முடியாது என்ற எண்ணம் மக்கள் மத்தியிலும் பொதுவாக அரசினர் மத்தியிலும் நிலவி வருகிறது இது ஒரு தவறான எண்ணமாகும். "கைசயத்தால் கமுகும் காய்க்கும்" என்பது ஒரு முதுமொழி. "முயற்சி உயர்சி தரும்" என்பதற்கொப்ப எந்தக்காரியத்திலும் முயற்சி எடுத்தால் கைமேல் வெற்றி கிட்டும் என்பது உண்மை.

ஒரு சில வருடங்களுக்கு முன்பு இந்த வரண்டபிரதேச புவியியல் சுவாத்தியத்திற்கொப்பான ஏனைய மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மர முந்திரிகை (கஜூ) செழித்து வளர்வதினால் இங்கு மரமுந்திரிகை வளர்க்கலாம் என்று பருத்தித்துறை மக்கள் மன்றப் பிரதிநிதி திரு. க. துரைரத்தினம் அவர்கள் அரசினருக்கு அறைந்து கூறினார், அதன்பயனாக இந்த வரண்ட பூமியில் மர முந்திரிகைச் செய்கைக்கென அரசினர் முடிக்குரிய காணிகள் வழங்கினர். திட்டத்தை திறமையாகச் செயற்பட எவ்வித உதவியும் அரசினர் செய்யாததினால் அத்திட்டம் மறந்த திட்டமாகிவிட்டது.

வரண்ட பிரதேசத்தில் மரமுந்திரிகை மாத்திரமல்ல கொடி முந்திரிகையும் (திராட்சைக் கொடி) செழிப்பான முறையில் வளரும். வரண்ட மணல் பிரதேசம் வளம்கொழிக்கும் செல்வச் சீமையாக மாறலாம் என்பதை இத்திராட்சைஆராய்ச்சி எமக்கு நிரூபணமாக்குகிறது. தாளையடியில் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் அரசினரால் வழங்கப்பட்ட எமது காணியில் இவ்வாராய்ச்சியை நடாத்தினோம். இக்காணியில் ஏற்கனவே சிறு பற்றைக்காடுகள் மாத்திரம் இருந்தன. ஆனால் எமது ஆராய்ச்சி வெற்றிக்கு மேல் வெற்றியைத் தந்துள்ளது. திராட்சை திறமான முறையில் வளர்ந்து பயனைத் தந்தது மாத்திரமல்ல எமது பிறப்பிடம் பிரயோசனமற்ற வரண்ட மணற்காடு என்ற இழிவான பெயரையும் மாற்ற வழிகோலியுள்ளது.

திராட்சை அபிவிருத்தித் திட்டத்திற்கு எமது ஆராய்ச்சி மட்டும் போதுமானதல்ல. எமது ஆராய்ச்சி ஒரு கட்டிடத்தின் அத்திவாரத்திற்கு வைக்கும்மூலைக்கல்லுக்கு சமனேயொழிய கட்டிடமல்ல. எமது ஆராய்ச்சி வடமராட்சி கிழக்குப் பகுதியில் திராட்சை செழித்து வளர்ந்து பயன் கொடுக்கும் என்பதை நிரூபிக்கிறது. திராட்சையை விருத்திபண்ணுவதற்கு என்னென்ன விஞ்ஞான முறையைக் கையாளவேண்டும், நோய் நொடிகள் ஏற்படும்போது என்ன தடுப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்து உதவுவது அரசினர் பொறுப்பாகும்.

திராட்சை பெரும்பாலும் வடமராட்சி கிழக்குப் பகுதியிலும், முள்ளியான் கிராம சேவையாளர் பிரிவிலும், வீரக்களியாற்றின் தென் கரையிலுள்ள மண்டலாய் திரியாய ஆகிய கிராமங்களிலும் செழித்து வளரலாம் என்பது எமது நம்பிக்கை. எனவே இப்பகுதிகளிலுள்ள பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்களும், மக்கள் மன்றப்பிரதிநிதிகளும் இதில் அக்கறைகாட்டி தேசப்பற்றுடன் சேவைசெய்வார்களேயானால் எதிர்காலத்தில் பொருளாதாரம் குன்றிய பிரதேசம் என்று அரசியல் மேடையில் இகழப்பட்ட யாழ்ப்பாணக்குடாநாட்டின் வர்த்தகப் பொருளாகத் திராட்சைப் பழம் வளம் பெறும் என்பதுவெள்ளிடைமலையாகும். திராட்சை அபிவிருத்திக்கென ஒரு காணித் திட்டத்தை தொடங்கி கமத்தொழில் இலாகாவின் உதவியுடன் காணி வழங்கி இத்திட்டத்தை அமுல் நடத்துவது மேலதிகாரிகளின் பொறுப்புள்ள கடமையேயாகும்.

### வருமான விபரம்

ஒரு தனி மனிதன் இருபத்தைந்து திராட்சைக் கொடியைப் பயிரிட்டு வருடமொன்றுக்கு இரண்டாயிரத்தி ஐநூறு ரூபா சம்பாதிக்க முடியும், நடுத்தர வருமானம் உள்ள ஒருவர் அரை ஏக்கர்நிலத்தில் நூறு திராட்சைக் கொடி வரையில் பயிரிட்டு வருடமொன்றுக்கு சகல செலவுகளையும் கழித்து மொத்தலாபமாக பத்தாயிரம்ரூபாவரையில் சம்பாதிக்க முடியும் என்பதைநாம் இதன் கீழ் புள்ளி விபரத்துடன் நிரூபிக்கிறோம். வாசக நேயர்கள் தெளிவாக, விபரமாக அறிந்துகொள்வதற்காக நாட்டு விகிதாசார முறைப்படி கணக்குகளை சமர்ப்பிக்கிறோம்.

திராட்சை வருடத்தில் இருமுறை பயன்தரும் என்பதை முதலில் கூறிவைக்க விரும்புகிறோம்.

ஒரு திராட்சையில் ஒரு முறை குறைந்த அளவு 20 றாத்தல் பழம் பழுக்கிறது. ஒரு திராட்சையில் ஒரு வருடத்தில் சமஅளவு 20X2-40 றாத்தல் பழம் பழுக்கிறது. ஒரு றாத்தல் திராட்சைப் பழம் நாட்டுப்புறவிலைப்படி 5 ரூபா பெறுமதியாகும், 40 றாத்தல் திராட்சைப்பழமும் ஒரு வருடத்தில் 40X5-200 ரூபா பெறுமதியாகும் எனவே ஒரு வருடத்தில் 100 திராட்சை 100X200- 20,000 ரூபா பெறுமதியாகும்.

இதன்மூலம் ஒரு தோட்டச்சொந்தக்காரருக்கு வருடமொன்றுக்கு மொத்த வருமானம் இருபதாயிரம் ரூபா கிடைப்பது உறுதியாகிறது.

### செலவு விபரம்

25 திராட்சைக்கொடிக்கு ஒரு கூலியாள் விகிதம் 100 திராட்சைக் கொடிக்கு நாலு கூலியாட்கள் வைத்தல் வேண்டும். ஒரு கூலியாளுக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 125/- சம்பளச் செலவாகும். ஒரு கூலியாளுக்கு ஒரு வருடத்துக்கு 125X12- ரூபா 1500/- சம்பளச் செலவாகும். நாலு கூலியாளுக்கு ஒரு வருடத்துக்கு 1500X4- ரூபா 6000 சம்பளச் செலவாகும். ஒரு கொடிக்கு பசளை 10 ரூபா விகிதம் 100 கொடிக்கும் 100X10- ரூபா 1000 செலவாகும். மருந்து வகைகள் ரூபா 300 செலவாகும். உபகரணங்கள் ரூபா 100 செலவாகும்.

மொத்தச்செலவுகள் ரூபா 7400 செலவாகிறது. செலவு நீங்கி லாபம் 20,000.— 7400 ரூபா 12,600 முதல் வருடத்தில் கொடிக்கு பந்தல் போடுவதற்கு ரூபாஆயிரத்துக்கு மேல் செலவுபிடிக்கும். அடுத்தடுத்த வருடங்களில் பந்தல்போடும்செலவு ஏற்படமாட்டாது. இயந்திர சாதனங்களால் நீர் இறைப்பதாயிருந்தால் கூலியாட்கள் இருவர் மட்டும்போதுமானது.

### செய்கை முறைகள்

திராட்சை பெரும்பாலும் இருவாட்டிமண் உள்ள இடங்களிலும், தூசிசேர்ந்த மணல் பிரதேசங்களிலும் செழித்துவளரும். கடினமான களிஉள்ள இடங்களில் செழித்து வளரமாட்டாது. களி நிலத்தில் குழிதோண்டி திராட்சை பயிரிடவேண்டிய இடத்தை மென்மைப்படுத்தவேண்டும். அப்போது தான்ஓரளவிற்பிரயோசனத்தைப் பெறலாம். கடற்கரையை அடுத்துள்ளபிரதேசங்களில் திராட்சை செழித்து பயனைத்தருமோ என்று அற்பமேனும் அச்சப்படத்தேவையில்லை. மேலைத்தேசங்களில் கடற்கரையை அடுத்துள்ள பிரதேசங்களில் திராட்சை செழித்து காய்த்தால் எமது கடற்கரைப்பிரதேசங்கள் திராட்சைக்கு விதிவிலக்காவது எப்படி? இன்னும் நாம் ஆராய்ச்சி நடத்திய தாளையடியும் கடலை அடுத்துள்ள கிராமமாகும். ஆனால் உவர் நீர் திராட்சைக்கு ஊற்றக்கூடாது என்பதை கண்டிப்பாகச் சொல்லுகிறோம் திராட்சைக்கு ஓரளவு ஈரலிப்பும் கூடிய வெப்பமும் தேவை வளரும் காலத்தில். ஆரம்ப காலத்தில் குறைந்த அல்லது சரிசமனான வெப்பமும் குளிரும் இருத்தல் நல்லது. திராட்சைக்கொடியின் அடியில் ஒருபோதும் நீர் கட்டுப்பட்டு தங்கியிருக்கக்கூடாது. அப்படி நீர்தேங்கி நின்றால் வெயில் வெப்பத்திற்கு நீர் சூடுபெற்று கொடியின் வேரை அவித்துவிடும், ஒரு சில நாட்களில்கொடியே பட்டுவிடும் என்பதை அறியத்தருகிறோம்.

### குழி அமைத்தல்

நாலடி நீள, அகல, ஆழமுள்ள குழி ஒன்று தோண்டல் வேண்டும். அதன் அடிப்பாகத்தில் ஓர் அடி உயரத்திற்கு ஊமலும், தேங்காய் மட்டையும்போட்டு பரப்புதல்வேண்டும். அதன்மேல் குப்பை கூழம் கலந்த மணல் அரை அடி உயரத்திற்கு போடல்வேண்டும் பிற்பாடு மாட்டெருவும் ஊமலும் அரைஅடி உயரத்திற்குப்பரவுதல் வேண்டும். அதன்பின் கரள்பிடித்த இரும்புச் சாமான்கள், எலும்புவகைகள் அரைஅடிக்கும் தேங்காய்மட்டை ஊமல் என்பன அரையடிக்கும் போடுதல்வேண்டும். இறுதியாக ஓர் அடிக்கு மாட்டெருகூழம், மணல்என்பனகலந்து போட்டு குழியை மூடிவிடவேண்டும். பண்படுத்தப்பட்ட குழிக்கு 15 நாள் வரையில் நீர்ஊற்றிவிட்டு விடவேண்டும். அப்போது எரு பசளைகளில் உள்ள சூட்டுத்தன்மை குறைந்து போகும். திராட்சைப்பதி நாட்டுவதற்கு இரு தினங்களுக்கு முன்பு மூன்று அடி நீளமுள்ள நாலு தென்னங் குத்திகளால் மூட்டப்பட்ட சற்சதுரத்தை குழியின்மேற்பாகத்தில் வைத்து அதை நிறைய களியும் மணலும் கலந்துகொட்டிவிடல் வேண்டும்.

திராட்சையிலிருந்து வெட்டியெடுத்த கொடியை ஒருசாண் நீளமான துண்டுகளாக வெட்டியெடுத்தல் வேண்டும். அதை இருவிதமாக பதியவைக்கலாம். பேணியில்மண்ணைப்போட்டு கொடியை அதில் நாட்டி நீர் ஊற்றி வருதல்வேண்டும். துளிர்விட்டு கொடி வளரத் தொடங்கியதும் பண்படுத்தப்பட்ட குழியில் நாட்டி விடவேண்டும் இது ஒரு முறை- அடுத்த முறை பண்படுத்தப்பட்டகுழியில் வெட்டிய கொடியை நாட்டி நீர் இறைத்தல்வேண்டும். தடி துளிர்த்து மூன்று அடிக்குமேல் வளரும்வரைக்கும் இரண்டு பனை ஓலையை எடுத்து அக்கம்பக்கத்தில் நட்டு அடிமரத்தில் நிழல் படச்செய்தல்வேண்டும்.

### வளர்க்கும் முறை

தினமும் காலைமாலை இரண்டு வாளி நீர் இறைத்து வருதல்வேண்டும். கொடி ஐந்தடி உயரம்வரையில் வளர்ந்ததும் அது பந்தலில் படரும்பருவத்தை அடைந்துவிடும். இதுவரைக்கும் கெட்டுவிடாது கவனமாகப் பார்க்கவேண்டும். அப்படிக் கெட்டு விடுதினால் மரத்தின் சக்தி குன்றிவிடும். ஐந்தடி உயரத்தை அடைந்ததும் கூரிய கத்திகொண்டு கொடியின் நுனியைவெட்டிவிடவேண்டும். நுனி வெட்டப்பட்ட சில தினங்களில் கொடியின் மொளிகளில் புதியதுளிர்கள் விட்டு கொடிகள் வளரும். அத்துளிர்களில் எங்களுக்கு வேண்டியளவு கெட்டுகளை விட்டுக்கொண்டு ஏனையவற்றை கிள்ளிவிடுதல்வேண்டும் திராட்சைக்கொடி நாட்டிய ஆறுமாதத்தில்மொட்டு விட்டு பூக்கத் தொடங்கும். ஆரம்பதில் வரும் பூக்களை கிள்ளிவிடுவதினால் திராட்சைக் கொடிக்குகூடிய சக்தி ஏற்பட்டு பின்னால் கூடிய பலனைக்கொடுக்கும்.

### பந்தல்போடும் முறை

திராட்சைக் கொடி ஐந்து வருடங்களுக்குமேல் நின்று பலனைக்கொடுக்கும் எனவே நாம் போடும் பந்தல் பலம் உள்ளதாகவும் ஐந்துவருடங்களுக்கு நின்றுபிடிக்கக்கூடியதாகவும்இருக்கவேண்டும். பந்தலுக்கு வேண்டிய கப்புகளை பனை மரத்தில் பிளந்து எடுத்தல்வேண்டும். அதற்கு உபயோகிக்கப்படும் குறுக்கு வளைகளையும் பனையில் எடுத்தல் நன்று. பத்தடி தூரத்திற்கு ஒன்றாக கப்புகளை நாட்டி குறுக்குவளைகளைப்

(12-ம் பக்கம் பார்க்க)

### பாடும் மலை

பாடும் மலையா? எங்கே இருக்கிறது இந்த அதிசய மலை என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? இந்தமலை ரஷ்யநாட்டில் இருக்கிறது. மேற்கு காசக்டனி என்ற ஒரு பாலைவனத்தில் இந்த மலை இருக்கிறது. இதன் அடிப்பாகம் சரிவாக இருக்கிறது. இதை மனிதராலும் மற்ற மிருகங்களாலும் எளிதில் அசைத்துவிட முடியும். ஆனால் கீழே விழுவதில்லை. காற்று அடித்தாலும் இந்த மலை அங்கும் இங்கும் அசைகிறது. இம்மலை சில சமயங்களில் ஒருவித சத்தத்தையும் எழுப்புகிறது.

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காஸ்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

# கலைஞர்கள் எவருக்கும் எமது கதவுகளைத் திறக்க வேண்டும்

**தன்னடக்கம், எளிமை எக்கலைஞர்களையும் மதிக்கும் மனம் இவற்றின் மொத்த உருவாகத் திகழும் திரு. கே. கணேசன் நாடறிந்த தவில் வித்துவானுவார்.**



"கலைஞர்களுக்கு நமது கதவுகளைத் திறக்கவே வேண்டும் வெளிநாட்டுக் கலைஞர்களால் நமது உற்சாகமும், ஊக்கமும் பிறக்கும். அவர்களுடன் அளவளாவினுல் நம்மிடத்தில் இருக்கின்ற கலை நம்மை உயர்த்துவதற்கு வழிசெய்யும். இதுதான் நமது முன்னவர்களை முன்னுக்குக் கொண்டு வந்தது."

இவ்வாறு நெஞ்சந்திறந்து வெளிநாட்டுக் கலைஞர்களைப் பற்றிக்கூறியவர் யாரென்ருல் நமது நாட்டின் தவில் வித்துவான்களுள் முன்னணியில் திகழும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி கே. கணேசன் என்றபோது நாம் ஆச்சரியப்படவேண்டியுள்ளது.

வெளிநாட்டுக் கலைஞர்களிடத்தில் மாத்திரமல்ல, உள்நாட்டுக்கலைஞர்களான முன்ஞேடிகளிடத்திலும்தனி மதிப்பும் காட்டுகின்ற வித்துவான் கணேசனை கடந்த வாரம் சந்திக்க அவரது இல்லத்துக்குச் சென்றிருந்தேன்.

காவி வர்ண வேட்டி யொன்றை அரையில் கட்டி என்னை இன்முகத்துடன், பணிவும் குழைவும் ஒருங்கிணைய மனப்பூர்வமான அன்புடன் ஏற்று வரவேற்று ஆசனமளித்தார் கணேசன்.

### நாம் எமதுதிறமையால் உயரவேண்டும்

வெளிநாட்டுக் கலைஞர்களினுல் உள்நாட்டுக் கலைஞர்களுடைய வருமானம்பாதிக்கப்படுகிறதல்லவா? என்ற ஒரு கேள்வியைக் கேட்டபோது அவர் அடக்கமாக "அப்படிச் சொல்லமுடியாது. இந்த நாட்டில் தமிழகக் கலைஞர்கள் எவ்விதக் கட்டுப்பாடுமில்லாத காலத்தில் அடிக்கடி வந்திருக்கிருர்கள். அப்படி அவர்கள் வந்த காலத்தில் நமது முன்னேர்களும் இங்கு கலைத்தொண்டுசெய்திருக்கின்ருர்கள். அவர்களும் வாழ்ந்து மற்றவர்களும் வாழவே விரும்பினர்.

ஆனல் வெளிநாட்டுக்கலைஞர்களிடம் மேதாவிலாசம் அதிகம் என்று இரசிகர்கள் எதிர்பார்ப்பதுண்மை. நாமும் நமது திறமையினுல் எங்களையும் வலிந்து வரவழைக்கக்கூடியதான திறமையுள்ளவராஞல் இந்தப் பிரச்னைக்கே இடமிருக்காது' என்ருர் கணேசன்.

### சேதுராமன் சகோதரர் அழைப்பு

அண்மையில் அண்ணுமலை இசைமன்றத்தின் அழைப்பின்பேரில் சென்னையில் நடைபெற்ற இசைவிழாவில் சேதுராமன், பொன்னுச்சாமி சகோதரர்களுக்கு தவில் வாசிக்கச்சென்றிருந்தவர் கணேசன்.

திரு. கணேசனின் திறமையும், கலை நுட்பமுமே இவற்றுக்குக் காரணமாக இருந்தது. கடந்த டிசம்பர் மாதம் 3-ந் திகதி இசை

வளர்ச்சி பெற்றிருக்கின்றமைக்கான காரணத்தை விசாரித்தபோது, திரு. தெட்சணுமூர்த்தி, திரு. சின்னராஜா ஆகியவர்களின் புகழும் உற்சாகமுமே காரணமென்பதைப் புலப்படுத்திய

**பேட்டி கொடுத்தவர்:**
**தவில் வித்துவான் - கே. கணேசன்**

திரு. கணேசன், ஏறத்தாழ தாம் மூவரும் ஒரே ஆண்டிற் பிறந்தவர்களென்றும், தனக்கு மருமக்கள் முறையில் அவர்கள் இருவரும் உள்ளனரென்றும் மிக ஆர்வத்துடன் தானுகத் தெரிவித்தார்.

### எல்லோரையும் ஒன்ருக மதித்தல்

தமிழ்நாட்டு நாதஸ்வரக் கலைஞர்களில் சிறந்தவர்கள் கோவிந்தராவின் இசைக்கச்சேரி.

திரு. கோவிந்தராவ் பக்கவாத்திய காரர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கும் போது கெஞ்சிரா வாசித்தவரை சபாஷ், பலே என்றெல்லாம் பாராட்டி சலாம் செய்தார். அப்போது நான் அவரை கவனித்து வந்திருந்தேஞயைால் கெஞ்சிரா பற்றியும் விசாரித்தேன்.

## நமது திறமையினுற்ருன் நம்மை உயர்த்தலாம்!

விழாவில் அவர் சேதுராமன் சகோதரர்களுக்கு தவில் வாசித்ததை வானெலிஇரசிகர்கள் பலர் கேட்டு இரசித்தனர்.

இச்சம்பவம்எப்படி நேர்ந்தது என்ற கேள்விக்கு சேதுராமன், பொன்னுச்சாமி சகோதரர்களின் தொடர்புதான் சென்னை இசைவிழாவில் தவில் வாசிக்கும் சந்தர்ப்பத்தைத் தந்ததுஎன்று தெரிவித்தார்.

அவர் இதுசம்பந்தமாகப் பேசும்போது திரு. சேதுராமனை அவர் யாழ்ப்பாணத்துக்கு வருமுன்னமேயே நன்கு தெரிந்திருக்கின்றதென்றும், ஏற்கனவே இந்தியாவிலும் அவருக்குத் தவில் வாசித்திருக்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

### தெட்சணுமூர்த்தி சின்னராஜா

தென்னகமும் போற்றக்கூடிய விதத்தில் கலைத்துவ

பற்றி அவர் குறிப்பிடும்போது குழிக்கரைப் பிச்சையப்பா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், சேதுராமன் சகோதரர்கள், சின்னமௌலாஞ ஆகிய நால்வரையுமே சேர்த்துக் கூறி தான் எவரிடத்திலும் தனிப்பற்றுக்காட்டுவதில்லையென்பதைப் புலப்படுத்திஞர்.

### கெஞ்சிரா வித்துவான் கணேசன்

திரு. கணேசனை முதன் முதல் அறிவதற்கு காரணமாயிருந்தது தமிழகசங்கீத வித்துவான் திரு. ரீ. கே.

காழும்பில் இலங்கை வானெலியில் பணிபுரியும் மிருதங்கவித்துவான் க. சண்முகம்பிள்ளை தனதுசகோதரஞகையால் அவரது பரிச்சியம் கெஞ்சிரா வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டியதென்று தெரிவித்தார்.

திரு. கணேசன் ஈழத்தில் மாத்திரமல்ல இந்தியாவிற் கூட சில சங்கீத வித்துவான்களுக்கு கெஞ்சிரா வாசித்திருப்பதாக அடக்கமுடன் தெரிவித்துக்கொண்டார்.

பேச்சுக்கள் மீண்டும் திசைதிரும்பி இந்தியப் பயணத்திற்குச் சென்றன...

### கணேசன் கருத்து

அப்போது அவர் தெரிவித்தவை:

சென்னை இசைவிழாவிற் கலந்துகொண்டபோது திருவனந்தபுரத்தைச் சேர்ந்த குமாரிநாயகர் என்பவருக்கு கணேசனின் தவில் வாத்தியம் நன்ருகப் பிடித்து விட்டது. திருவனந்தபுரத்திலுள்ள கிருஷ்ணன் கோவிலில் கச்சேரிசெய்தமையால் தங்கப்பதக்கம் ஒன்றையும் அவர் பெற்றுள்ளார்.

தமிழ்நாட்டில் திறமையை மதிப்பதில் எப்பவுமே எவரும் பின்னிற்பதில்லை. நிறைய சந்தர்ப்பங்கள் கலைஞர்களின் திறமையை வெளியிடுவதற்குள்ளன. இலங்கையிலுள்ளவர்கள் இந்தியாவிலுள்ளவர்கள் என்ற பாகுபாட்டுக்கு மேலாக, நல்லது எது? என்று நாம் உண்மையில் சிந்திக்கவேண்டியவர்களாகவுள்ளோம். இலங்கையிலுள்ள நாதஸ்வரக்கலைஞர்களின் வரிசையில் தவிலில் முன்னிடம்பெற்றுள்ள திரு. தெட்சணுமூர்த்தியின் மேதைத்திறனை எவ்வளவு பாராட்டினுலும் தகும். அவர் திறமைக்காகவே மதிக்கப்படுகிருர்

**பேட்டி கண்டவர்:**
**இ. நாகராஜன்**

இத்தகைய கருத்துக்களை அவர் தொடர்ந்து தெரிவித்த பின்னர் குடும்பவிவகாரங்களில் நமது சம்பாஷணை திரும்பியது...

பரம்பரைக்கலையை இன்றைய கலைஞர்கள் கைவிட்டு வாழ்க்கை வசதிக்காக பிள்ளைகளை வேறுதுறையில் இறக்கிவடுகிருர்கள். இப்பிரச்னையைக் கிளப்பிய போது திரு. கணேசன் தன்னுடைய முதல் இருபுத்திரர்களையுமே நாதஸ்வரம், தவில் ஆதியவற்றில் ஈடுபடச் செய்துள்ளமையைப் புரிந்துகொண்டேன்.

என்னுடைய பேட்டியின் இறுதிநிகழ்ச்சியாக தென்னகத்தில் இசைவிழாவில் வாசித்துப் பாராட்டுப்பெற்றீர்களே அங்குள்ள பத்திரிகைகள் உங்களையெல்லாம் பாராட்டியதுதானே என்றேன்:

"ஆமாம் பெயரை மாத்திரம் போட்டிருந்தார்கள், ஆனல் இங்குள்ளபத்திரிகைகளைப்போல முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்று சொல்லமாட்டேன்" என்று முடித்துக்கொண்டார்.



வட்டுக்கோட்டை கலைமகள் கலைக்குழுவினரின் இலங்கேஸ்வரன் நாடகத்தில் இலங்கேஸ்வரஞகத் தோன்றிய சண்முகம் குமாரவேலின் ஒரு தோற்றம்

## நல்ல மாம்பழம் உண்ண விருப்பமா? இதோ சில வழி முறைகள்

நவீன விவசாய முறைகளைக் கையாண்டு விவசாயத் துறையில் பெரும் முன்னேற்றத்தைக் காண உதவும் இலங்கை கமத்தொழிற் பகுதியால் வெளியிடப்பெறும் விவசாயிகளின் முத்திங்கள் வெளியீடான 'கமத்தொழில் விளக்கம்' என்னும் சஞ்சிகையில் இருந்து எடுக்கப்பட்ட மாமரச் செய்கைக்கு இன்றியமையாத சில விடயங்கள் இங்கு தரப்படுகின்றன.

### மாங்கன்று ஒட்டும் நவீன முறை

மிகவும் சுலபமான, இலாபகரமான மாங்கன்று ஒட்டு முறை ஒன்று இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம்முறையில் முளைக்கும் மாவிதைகள் ஒட்டுக்கட்டையாக உபயோகிக்கப்படுகின்றன. அரைவாசி முற்றிய இலைகள் உள்ள 12—15 செ. மீ நீளமுள்ள நுனிக்கிளை ஒட்டுக் கிளையாக உபயோகிக்கப்படும். இவ்வொட்டுக் கிளை ஆப்பொட்டு முறையில் ஒட்டுக்கட்டையில் ஒட்டப்படும். ஒட்டியபின்பு நாற்றங்காலில் மணல் மேடையில் உலர் ஈரப்பதனில் 2 வாரங்களுக்கு வைக்கப்படும். விதையில் சேமிக்கப்பட்ட உணவு இருப்பதால் ஒட்டுக்கிளை துரிதமாக வளர்ச்சியடைவதும் ஒட்டு இலகுவில் பிடித்துக்கொள்வதும் இம்முறையில் உள்ள நன்மைகள். அத்துடன் நேரகாலத்துடன் இவ்வெட்டுக் கன்றைக் கொட்டுகளில் எடுத்து வைக்கவும் முடியும்:

—சி. நடேசன்
(உதவி விவசாய பொறியியலாளர்)

### மாமரம் காய்க்காததற்கு காரணம்

எந்தமரம் காய்ப்பதற்கும் அந்த இனத்துக்குரிய காபோவைதரேற்று, நைதரசன் விகிதம் சரியான முறையில் அமையவேண்டும். எக்காரணத்தால் இவ்விகிதம் மாறுபடினும் மரங் காய்க்க மாட்டாது. மாமரத்தின் வேர் மிக ஆழமாகச் செல்வதால் அதிகம் நைதரசனை நீருடன் சேர்த்துக் கிரகித்துக்கொள்ளும் வாய்ப்பு உண்டாகிறது. அதனுல் நைதரசனின் அளவு அதிகரித்து விகிதத்திற்குப் பங்கம் விளைகிறது. இருவகைகளில் அவ்விகிதத்தைச் சீர்படுத்தலாம். ஒன்று நைதரசன்எடுப்பதைக் குறைப்பது மற்றையது காபோவைதரேற்றின் அளவைக் கூட்டுவது. நைதரசனைக் குறைப்பதற்கு மரத்தின் அடியிலிருந்து 3 அடி தூரத்தில், 2 அடி அகலமான ஒரு குழியை மரத்தைச்சுற்றிப் பறித்து அங்குள்ள சல்லிவேர்கள் எல்லாவற்றையும்களையவேண்டும். குழியை அப்படியேவிட்டு 8-10 நாட்களின் பின் அதை மூடிவிட்டு நீர்ப்பாய்ச்சலாம்.

காபோவைதரேற்றுஒளித்தொகுப்புமூலம் ஆக்கப்படுகிறது. வேறு மரங்களின் நிழல்படிந்தாலும் மாமரக்கிளைகள் அதிகம் அடர்த்தியாயிருந்தாலும் சூரிய வெளிச்சம் போதியளவிற் கிட்டாமல், காபோவைதரேற்று ஆக்கம் குறையும். நிழலை நீக்கியோ சிறு கிளைகளைக் களைந்தோ சூரிய வெளிச்சம் ஊடாடுவதைத் தூண்டவேண்டும். மேலும் ஒளித் தொகுப்பின் வினைத்திறனைப்பொற்ருசு பெருக்க வல்லதாகையால் பொற்ருசுப் பசளையையிடுதலும் நன்மை பயப்பதாகும் இவற்ருேடு இன்னுமொரு

(13-ம் பக்கம் பார்க்க)

# சோஷலிஸ மேதையும் கலைக்குரிசிலும் பிறந்த நெல்லியடி

## எங்கள் கிராமம் - 9

ஓர் ஊரின் பெயரைச் சொன்னால் அப்பெயர் எவ்வாறு பிறந்தது என்ற கேள்வி எழுவது வழக்கம். நான் பெரிதாக ஒன்றும் புதைபொருள் ஆராய்ச்சி செய்யாவிட்டாலும் எங்கள் ஊரான 'நெல்லியடி' என்ற பெயர் எவ்வாறு தோன்றியிருக்கும் எனச் சிலவேளைகளில் சிந்தித்திருக்கிறேன். எனது ஆராய்ச்சிகளின் முடிவாகப் பின்வரும் விடயங்கள் புலப்பட்டன. முன்னொரு காலத்தில் மிகப்பெரிய நெல்லிமரம் ஒன்று இருந்ததாகவும் நான்கு சந்திகள் கூடுகின்ற இடத்தில் அம்மரம் இருந்ததால் போக்குவரத்துச் செய்த மக்கள் அவ்விடத்தைச் சுலபமாகக் குறிப்பதற்காக 'நெல்லியடி' என்று சொல்லிவிட்டார்கள் என்றும் அந்தக் குறிச் சொல்லே இப்போது 'நெல்லியடி' என்ற மகத்தான பெயராகவும் கூடவே 'நெல்லை' என்ற விருப்பப் பெயராகவும் மாறிவிட்டது என்று உணர்ந்தேன். இன்னும் சிலர் இங்கே நெல் வியாபாரிகளும் நெல் அரைக்கும் ஆலைகளும் அதிகம் இருந்த காரணத்தால் 'நெல்லியடி' என்று பெயர் வந்ததாகவும் சொல்கிறார்கள். எப்படி எடுத்தாலும் பெயர் பொருத்தமாகவே இருக்கிறது. இனிமேல் இக்கிராமத்தின் வளர்ச்சி நிலைகளைக் கவனிப்போம்.

இக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கு புவியியல் காரணங்களாக உள்ள போக்குவரத்து. பொதுச் சந்தை, சினிமாத்தியேட்டர்கள் இரண்டு, அரசினர் கல்லூரி என்பனவற்றைக் காரணமாகச் சொல்லலாம்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதானவீதியும் இக்கம் கொடிகாமம் பிரதான வீதியும் நெல்லியடிச்சந்தியை ஊடறுத்துச்செல்கின்றன. இதனால் அயல்கிராமங்களான திக்கம், வதிரி, அல்வாய், நவிண்டில், துன்னாலை போன்ற இடங்களிலுள்ள மக்களும் தங்கள் வியாபார நோக்கங்களுக்காகவும் போக்குவரத்திற்காகவும் கல்விக்காகவும் நெல்லியடியை நாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது இச்சுற்றுடலில் உள்ள ஏனைய கல்லூரிகளைவிட நெல்லியடி சென்றல்ஸ்கூலை (இது முன்னர் 'மொடல் ஸ்கூல்' என அழைக்கப்பட்டது). அரசினர் மத்திய மகாவித்தியாலயமாக்கி மிகப்பிரமாண்டமான இரண்டுமாடிக் கட்டிடங்களையும் அரசாங்கம் கட்டித் தந்தது. இதற்காக முன்னாள் காலஞ்சென்ற சோஷலிசமேதை பொன் கந்தையா முழுமூச்சாக நின்று உழைத்தார் முன்னாள் பருத்தித்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதியும் வடமாகாணத்தின்ஒரேயொரு கம்யூனிஸ்ட் எம். பி. யுமான திரு பொன்னம்பலம் கந்தையா அவதரித்த இடம் நெல்லியடியாகும், அவரது திறமையான பாராளுமன்றச் சொற்பொழிவுகளையும் கல்வித் தராதரத்தையும் நேர்மையான உழைப்பையும் மெச்சாதவர்களே இல்லை எனலாம். அமரர் கந்தையா தான் வாழ்ந்த சோஷலிசப் பாதையில் தனது கிராமத்து மக்களும் குறிப்பாக இளைஞர்கள் வளரவேண்டும் என்று ஆசைப்பட்டார். அவர் காலமாகிவிட்டாலும் அவரது கொள்கைகள் இன்னும் செத்துவிடவில்லை. இளமைத்துடிப்பும் உற்சாகமும் கொண்ட இளம்சந்ததியினர் இங்கு முற்போக்குப் பாதையிலேதான் பீடுநடை போடுகிறார்கள்.

எங்கள் நெல்லியடிக் கிராமத்தில் உள்ள ஒரேயொரு பெரிய கோயில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயமாகும். சரித்திரப் பிரசித்தி வாய்ந்த இவ்வாலயத்தில் கடந்த பதினைந்து வருடங்களுக்கு முன்னர் வருடாந்த உற்சவங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தன. திருவிழாக்காலங்களில் குதிரைகளும் யானைகளும் வந்து தேர் இழுத்தனவாம். நாளடைவில் ஆடம்பரமான செலவுகளைக் குறைத்து இப்போது பக்திபரவசமாக நல்லமுறையில் திருவிழாக்களை நடாத்தி வருகிறார்கள். இந்த ஆலயத் திருவிழாக்களில்இப்போதுதேவடியாள் நடனங்கள் (சின்னமேளம்) இடம்பெறுதமைபாராட்டுக்குரியதாகும். இதைத்தவிர எங்கள் கிராமத்தில் 'கொட்டில் பிள்ளையார் கோவில்' என்ற சிறியகோவில்ஒன்றும் உள்ளது.

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் முன்பாக ஒரு 'சனசமூக நிலையம்' வைத்து அதில் வாசிகசாலையும் விளையாட்டுக்கழகமும் இயங்கி வந்தன. சமீபத்தில் நெல்லியடி பட்டினசபை பொது நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நெல்லியடி சனசமூகநிலைய வாசிகசாலையில் இருந்த நூல்கள் அனைத்தும் பொது நூல் நிலையத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டுவிட்டன. தற்போது இப்பகுதி மக்கள் பொதுசன நூல்நிலையத்திற்கே சென்று நூல்களையும் வாராந்த சஞ்சிகைகளையும் வாசித்து வருகிறார்கள். இப்பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ள பொழுதுபோக்கிடமாக 'நெல்லியடி பொதுசன நூல் நிலையம்' அமைந்துள்ளது. கட்டைவேலி கிராமசபையின் ஓர் அங்கமாக இருந்த நெல்லியடி பின்னர் பட்டின சபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டபின்னர் ஏழு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஏழு வட்டாரங்களிலும் இரண்டாம்வட்டாரமான முருகையன் கோவில் வட்டாரமே 'நெல்லியடி'யைக் குறிப்பாகப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. காலஞ்சென்ற முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் வே. சு பொன்னையா அவர்கள் நெல்லியடியைச் சேர்ந்தவர். இவர் பட்டின சபையின் முதலாவதுதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த கல்விமானும் நேர்மையாளனும் கூட்டுறவு இயக்க ஸ்தாபகருமான இவரைப் பெற்றதனாலும் நெல்லியடி பெருமையடைந்தது. நெல்லியடியில் சமாதான நீதிபதியாக இருந்த அமரர் எஸ். எஸ். சபாரத்தினம் அவர்களும் இக்கிராமத்திற்குப் புகழ்தேடிக் கொடுத்த பெரியார்களுள் ஒருவராவார். இவரது பதவி இன்னும் காலியாகவேஇருக்கிறது.

எங்கள்கிராமத்துமக்களில் அநேகர் விவசாயிகளாகவும் சிறந்த வியாபாரிகளாகவும் இருக்கிறார்கள். மிகச்சிலரே உத்தியோகங்களில் இருக்கிறார்கள். இங்குள்ள தோட்ட நிலங்களில் புகையிலைதான் பிரதானமானபயிர். இடைக்காலப்பயிர்களாகக் கீரை, பயற்றங்கொடியும் மற்றும் படிகத்தரி, வெண்டி, தக்காளி, மிளகாய் என்பனவும் பயிரிடுகிறார்கள். காய்கறி வகைகளை நெல்லியடிச்சந்தையிலேயே கொண்டுவந்து விற்கிறார்கள். மத்திய சந்தையை இப்போது பட்டின சபை பொறுப்பேற்று மிகவும் இலாபகரமான முறையில் நடாத்தி வருகின்றது. புதிய கட்டிடங்களைக்கட்டிப் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. உழைக்கும் கரங்கள் இங்கே நிறைய உண்டு.

### கலைமேவிய நெல்லியடி

கலைஞர்களும் எழுத்தாளர்களும் தாம் பிறந்த ஊரைப் பெருமைப்படுத்துகிறார்கள் என்ற உண்மையை எங்கள்கிராமத்திலும் காண முடிகிறது. கலைக்குரிசில் கந்தவனம் (ஐயா) அவர்கள் பிறந்தஊர் நெல்லியடி. கலையரசு சொர்ணலிங்கம், வானொலி நாடக நடிகர் சானா போன்றவர்களுடன் சமகாலத்தில் மேடையில் தோன்றிப் பல அற்புதங்களைச் செய்தவர் கந்தவனம். (ஐயா) அவர்கள். இவருக்கு கரவெட்டி வாணி கலைக்கழகத்தார் 'கலைக்குரிசில்' என்ற பட்டத்தை வழங்கிப் பொன்னாடையும்போர்த்திக் கௌரவித்தார்கள். இவர் ஒரு சிறந்தநாடக நடிகர். தவில், வீணை, நாதஸ்வரம், மிருதங்கம் தாளம் முதலிய சகல கருவிகளையும் வாசிக்கத் தெரிந்தவர். பல குரல்களில் பேசுவார். மொத்தத்தில் ஒரு சிறந்த கலைஞர். கலைக்குரிசில் என்ற பட்டத்தைப் பெற்றதோடு மட்டுமல்லாமல் நெல்லை சண்முகானந்த நாடகசபா என்ற நிறுவனத்தின் ஸ்தாபகர்களுள் ஒருவராகவும் பின்னர் அதன் போஷகராகவும் இருந்து வருகிறார். இவரைத் தொடர்ந்து இவ்வூரைச் சேர்ந்த திரு. வேலாயுதம் (இவரை இயமன் வேலாயுதம்என்றும் அழைப்பார்கள். அவ்வளவுதூரம் நாடக உலகில் பிரசித்தி பெற்றவர்) கறுப்பையாச் சாத்திரியார் இசைமணி எம். கனகரத்தினம் போன்ற கலைஞர்களைச் சொல்லலாம். வருடந்தோறும் சித்திரை வருடப்பிறப்பன்று தரமான நாடகங்களை மேடையேற்றும் பணியை நெல்லை சண்முகானந்த நாடகசபையினர் செய்து வருகின்றனர். அல்வைச் சுகுணு கதை வசனமெழுதிய 'கண் திறந்தது' 'மாதவி பெற்ற மாணிக்கம்' 'பழிக்குப்பழி' போன்ற நாடகங்களும் அதைத் தொடர்ந்து இரத்த திலகம், இறுக்கடா புட்டிசம், முடிவு எங்கே முதலிய நாடகங்களை வெற்றிகரமாக மேடையேற்றினார்கள். இச்சபையினரின் பிற்கால நாடகங்கள் நல்ல சீர்திருத்தக் கருத்துள்ளனவாகவும் முற்போக்கானவையாகவும் அமைந்தன. உதாரணமாக இப்போது ஈழத்தில் பிரசித்தி பெற்ற தீண்டாமை ஒழிப்புப் பிரச்சார நாடகமான 'கந்தன் கருணை' என்ற இசை நாடகத்தைத் தயாரித்தவர்களும் நெல்லை சண்முகானந்த நாடகசபையினரே என்பது பெருமைக்குரியது. உடனிகழ்காலப் பிரச்னைகளை மையமாக வைத்துச் சமூகத்திற்குத் தேவையான தரமான நாடகங்களை இங்குள்ள கலைஞர்கள் குறிப்பாக இளைஞர்கள் மேடையேற்றுகிறார்கள். சிறந்த இசைஞானம் கொண்ட கலைஞர்களும் பாடகர்களும் மிருதங்க வித்துவான்களும் எங்கள் கிராமத்தில் இருக்கிறார்கள், கந்தன் கருணை என்ற இசைநாடகம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் யாழ்ப்பாணம், வவுனியா, அச்சுவேலி, வதிரி போன்ற இடங்களிலும் வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டது. வளர்ந்துவரும் இருபதாம் நூற்றூண்டில் மூடக்கொள்கைகளுக்கும் சாதித் திமிருக்கும் எங்கள் கிராமம் மெல்ல மெல்ல விடுதலையளித்துக்கொண்டே வருகிறது.

எழுதுவது
நெல்லை க. பேரன்

இங்குள்ள மரணவைபவங்களுக்குப் பறைமேளம் அடிக்கும் முறையும் கோவிய முறை முதலிய சம்பிரதாயங்களும் தற்போது ஒழிக்கப்பட்டுள்ளன. 'விடுதலை விடுதலை விடுதலை பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை' என்று பாரதி பாடியது போல எங்கள் கிராமத்தில் அடிமை குடிமை முறைகள் படிப்படியாக ஒழிக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள படித்த இளைஞர்கள் கேரள—வங்கத்துப் பாதையிலும் புரட்சிகர எண்ணங்களிலும் தமது சிந்தனையைச் செலுத்துகிறார்கள். உலகம் முழுவதிலுமுள்ள உழைக்கும் மக்களின் விடுதலைக்காகவும் பாட்டாளிகளின் பரவசத்திற்காகவும் பாடுபடவேண்டும் என்று இவர்களில் அநேகர் விரும்புகிறார்கள். எங்கள் கிராமத்தில் பொதுக்கூட்டங்களுக்கும் வரவேற்புகளுக்கும், அரசியல் வகுப்புக்களுக்கும் குறைச்சலே இல்லை. உயர்ந்த மாடிக் கட்டிடங்களும், அழகான சிறிய கல்வீடுகளுமாக எங்கள் கிராமம் இப்போது உருமாறி வருகின்றது. கிராமம் பட்டினமாகி பட்டினம் நகரமாகிறது என்பார்கள், அதுபோலவே இப்போது பட்டினத்தின் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டிருந்தாலும் எமது மக்கள் தமது கிராமப்புற வாழ்க்கையைக் கைவிடவில்லை.

மாலை 6 மணி என்றதும் நெல்லியடியிலுள்ள மஹாத்மா இலட்சுமி என்ற இரண்டு தியேட்டர்களின் ஒலிபெருக்கிகளும் பாட ஆரம்பித்துவிடும். இது படம் ஆரம்பமாவதைக் குறிக்கும். பிறகு முதலாம் காட்சி விட்டவுடன் 9 அல்லது 9 1/2 மணிக்குப் பாடும். இது இரண்டாம் காட்சி ஆரம்பிக்கச் சைகையாகும் பக்கத்து வீடுகளில் கூடிக் கதைத்து மகிழும் மக்கள் ஆ... இனிப் படம் பாடுது. ஒன்பது மணியாய்ப் போச்சுது. போவம்' என்று சொல்லித் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்வார்கள். அநேகமாக முதியவர்களுக்குப் படம் பாடுவதுதான் கைக்கடிகாரம்.

சிறந்த நகைச்சுவைப் பேச்சாளரும் வித்துவான் பட்டம் பெற்றவருமான பொன். சிவப்பிரகாசம் பிறந்ததும் எங்கள் நெல்லியடிக் கிராமமாகும். சிறந்த சேவையுணர்ச்சி கொண்ட ஆசிரியர்கள் ஆ. தாமோதரம்பிள்ளை, க. கந்தப்பு ஆகியோர் பிறந்ததும் இக்கிராமத்திலேயாகும்.

எங்கள் கிராமத்தில் நடைபெறும் பண்டிகைகளில் புதுவருடப்பிறப்பும் சூரன் போர் நிகழ்ச்சியும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருகின்றன. முருகமூர்த்தி கோவிலில் நடைபெறும் சூரன்போர் நிகழ்ச்சியைக் காண்பதற்காக அயலூர்களிலிருந்து மக்கள் திரண்டுவருவார்கள்.

சிறந்த கல்விமான்களும் பாட்டாளித் தோழர்களும் ஆசிரியர்களும் வியாபாரிகளும் வாழ்கின்ற நெல்லியடியில் கலை, இலக்கியத்துறை ஆர்வத்திற்குப் பஞ்சமே இல்லை. நெல்லியடி முழுவதற்கும் இன்னும் பக்கத்துக் கிராமங்களுக்கும் புதினப்பத்திரிகைகளையும் (ஈழநாடு உட்பட) சஞ்சிகைகளையும் அறிவு நூல்களையும் விநியோகம் செய்யும் ஒரேயொரு புத்தக நிலையமாக நெல்லியடிச்சந்தியில் உள்ள 'லஷ்மி ஸ்ரோர்ஸ்' விளங்குகிறது. இந்தக் கடையைத் தெரியாதவர்கள் இப்பகுதியில் இல்லை எனலாம்.

ஓரே நாளில்
பெருக்கு கண்பார்
தவரை நேரில்
கூடிய சந்தர்ப்பம்
தது. அவர் ஒரு
கண் வைத்திய
இலங்கையைச் சேர்
ஞர். அவர்தான்
சந்திரா பராரா
எந்த நோயாளிக்கு
ரைப்பார்த்தவுடன்
நோய் மாறிவிடும்.
டன் பேசியதுடன்
நோய் மறைந்துவி
வளவு தங்கமான
சிரித்துப்பேசி
கதைப்பார். இவை
நேரில் கண்டு

இலக்கிய பசிகா
ளுக்கு உணவு
பது இந்தக் கடைதா
பகாலமாக நெல்லி
இலக்கியத்துறையி
லான விழிப்புணர்ச்
பட்டுள்ளது.
விமர்சனங்களும் இ
கூட்டங்களும் நடை
வருகின்றன. ஈழத்
இலக்கியங்களுக்கு
ஊக்கமும் அளிக்க
என்ற தேசிய உண
குள்ள வாசகர்கள்
எழுந்துள்ளது.
அரசினர் மத்திய ம
யாலய மாணவர்
புவியியல் மன்றம்
அடிக்கடி சொற்
களை ஏற்பாடு செ
கின்றன.

நெல்லியடி என்
பலவழிகளிலும்
பெற்று விளங்கினு
னும் சில அத்திய
தேவைகளும் உள்ள
குள்ள நாடக, இ
ஞர்கள் தமது ப
களை அரங்கேற்
சென்று ஒரு பொ
பம் கிடையாது. யா
சபை மண்டபம்போ
அல்லது யாழ். திற
யரங்குபோன்றோ
டியிலும் ஒரு 'நாட
அல்லது பொது ம
கட்டாயமாகக்
படல்வேண்டும்.
மணவைபவங்களு
பொதுக் கூட்டங்
இலக்கியச் சர்ச்சை
நாடகம், கூத்துக்
பாவிக்கக்கூடிய ஒ
மண்டபமாகத்
வேண்டும். நெல்லி
டினசபையும் இப்ப
களும் இவ்விடயத்தி
டாய சிரத்தை எடு
டும். அடுத்தபடி
பகுதி மக்கள்
கள் விளையாடுவத
ஒரு சிறுவர் பூங்
பொது விளையாட்டு
னமும் அமைக்க
வேண்டும். இவை
அத்தியாவசிய தே
கும்.

மிகச் சமீபத்திலே
படிக்கு மின்சாரம்
கப்பட்டுள்ளது.
வீதிகளெல்லாம்
ஒளிமயமாகக்
கின்றன,

ஒரு காலத்திலே
மரம்நின்றதனால்
என்று அழைக்கப்ப
கள் கிராமம் கொ
கொஞ்சமாக மு
பட்டினசபை அந்
உயர்த்தப்பட்டு
அரசியல்துறையிலு
ளாதாரத்துறையி
வித்துறையிலும் ச
பாடுகள் ஒழிப்பு
லும், கலை, இலக்கி
யிலும் படிப்படியா
னேறிச் செல்கின்ற
உண்மையை நான்
கிராமத்துச் சிவ
ணிலே உதித்தவன்
உரிமையோடும்
யோடும் கூறிக்கொ
ஆசைப்படுகிறேன்.

எங்கள் ஊர் மக்
வர்கள். பழக
கள் விருந்தோ
பண்பு மிக்கவர்கள்
மாணால் ஒரு தடவை
நெல்லியடிக்கு விஜ
யுங்களேன்.

# ஒரே தினத்தில் 150 பேருக்கு மீண்டும் கண் பார்வையளித்தார்

## தமிழ்நாட்டு கண் நிலையங்கள் பற்றி டாக்டர் பரராஜசேகரம் விளக்குகிறார்

— கா. யோகநாதன் —

ஓரே நாளில் 150
பருக்கு கண்பார்வையளித்
வரை நேரில் பார்க்கக்
டிய சந்தர்ப்பம் கிடைத்
து. அவர் ஒரு டாக்டர்.
ன் வைத்திய நிபுணர்.
லங்கையைச் சேர்ந்த தமி
ர். அவர்தான் இராமச்
ந்திரா பரராஜசேகரம்.
ந்த நோயாளிக்கும் அவ
ரப்பார்த்தவுடன் பாதி
நாய் மாறிவிடும். அவரு
ன் பேசியதுடன் மிகுதி
நாய் மறைந்துவிடும். அவ்
ளவு தங்கமான மனிதர்.
ரித்துப்பேசி இனித்துக்
தைப்பார். இவை நான்
நரில் கண்டு அறிந்து

கொண்டதுமட்டுமல்ல, அவரிடம் சிகிச்சைபெற்ற சில நோயாளிகளின் வாயிலாகவும் அறிந்துகொண்டவை.

அவரது சகோதரரான வடபகுதி பொலிஸ் அதிபர் ஆர். சுந்தரலிங்கத்தின் பங்களாவில் அவரைச் சந்தித்தேன். சாதாரணமாகயாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, வேறு எந்தப் பகுதியிலென்றாலும் சரி, டாக்டர்களோ, வழக்கறிஞர்களோ, பெரிய மனிதர்களோ பிற்பகல் 1 மணி முதல் 3 மணிவரை சந்திக்க முடியாது.. அவர்கள் நித்திரை செய்யும் நேரம் அது. நான் அங்கு செல்லும்போது சரியாக 2-30 மணி. அந்த நேரத்தில் அவரைச் சந்திக்க முடியுமா! என்ற சந்தேகத்தில் நான் போனேன். நான் வந்திருப்பதை அறிந்தவுடன் புன்சிரிப்பு தவழ்ந்து விளையாட அவர் வந்து அமர்ந்தார். அன்றுதான் எனக்கு அவரை முதன்முதலாகத் தெரியும். ஆனால் பல வருடங்கள் என்னைத் தெரிந்தவர் போல அன்பொழுகப் பேசிக்கொண்டிருந்தார். டாக்டர் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டேன்.

தமிழ் நாட்டில் அமைந்த 'கண் வைத்திய நிலையம்' பற்றி அவரிடம் நேரில் கேட்டறிவதற்காகவே சென்றிருந்தேன். சுமார் 2 மணி நேரம் நான் கேட்டவற்றிற்கெல்லாம், விபரமாகப் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

'தமிழ் நாட்டில் கண் வைத்தியநிலையம்பற்றி ஏதாவது கூறுவீர்களா?' என்று கேட்டேன்,

'நிறையச் சொல்லமுடியும். மதுரை வைத்தியக்கல்லூரியினர்தான் இதனை ஒழுங்குசெய்திருந்தனர். நாகர்கோவில் சிவகாசி, மதுரை, ஸ்ரீரங்கம், கரூர், பொள்ளாச்சி ஆகிய ஆறு இடங்களில் கண் சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன. இந்த நிலையங்கள் அங்குள்ள பாடசாலைகளில்தான் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. 'லயன்ஸ் கிளப்' உறுப்பினர்களும், உள்ளூர் வாசிகளும் தங்களால் முடிந்தளவு சகல உதவிகளையும் செய்திருந்தனர்.

தமிழ்நாட்டு அரசாங்கம் ஒவ்வொரு நிலையத்திற்கும் தலா 5000 ரூபா வீதம் பணவசதியளித்திருந்தது. ஒவ்வொரு இடங்களிலும் தொண்டர்கள்சென்று அங்குள்ள செல்வந்தர்களிடம் பணவுதவி மட்டுமன்றி, பொருளுதவியும் பெற்றிருந்தனர். பல வர்த்தகஸ்தாபனங்கள், தாராளமாக உதவியளித்தன. பணவுதவி மட்டுமன்றி பலர் சரீரஉதவியளிக்கவும் முன்வந்தனர். ஆஸ்பத்திரிகளில் எந்நேரமும் நோயாளிகளுடன்பழகி வந்த என்போன்ற டாக்டர்களுக்கு இப்படியான நிலையம் ஒரு புதிய சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுத்தது.

இதனை நாங்கள் ஒரு கடமையாகக் கருதாமல் ஒரு தொண்டாக, பணியாக, சேவையாகக் கருதினோம்

அதில் ஒரு தனி மகிழ்ச்சி இருந்தது. லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள்கூட அன்று முழுவதும் செய்யவேண்டிய உதவிகளைச் செய்துகொண்டிருந்தனர்.

டாக்டர் மேலும் தொடர்ந்துகொண்டேபோனார். நான் மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

"எத்தனையோ கிளப்புகளையும் சங்கங்களையும் பார்த்திருக்கிறேன். அத்திபாரக்கல் நாட்டுவது, கட்டடங்கள் அமைப்பது, பாராட்டு விழா வைப்பது போன்றவற்றில்தான் இந்தக் கிளப்புகளும், சங்கங்களும் கவனம் செலுத்தி வந்திருக்கின்றன, சில கிளப்பு உறுப்பினர்கள் பணத்தைமட்டும் கொடுத்துவிட்டு பேசாமல் இருந்துவிடுவார்கள். ஆனால் தமிழ் நாட்டில் லயன்ஸ் கிளப் உறுப்பினர்கள் நேரில்வந்து பல உதவிகளைச்செய்தனர்.

"நீங்கள் எந்த நிலையத்தில் பணியாற்றினீர்கள்?"

ஸ்ரீரங்கத்தில்நிறுவப்பட்ட நிலையத்தில் நான் பணியாற்றினேன். முதல் நாள் மட்டும் 4000 பேர் சிகிச்சை பெற வந்திருந்தனர் அதிகமாக எல்லாரும் வயோதிபர்கள்தான், அப்பகுதியிலிருந்துமட்டுமன்றி பலர் தூர இடங்களிலிருந்தும் வந்திருந்தனர், அவர்களை பரிசோதனை செய்து, 1000பேர் சிகிச்சைபெற அனுமதிக்கப்பட்டனர்.

"எத்தனை டாக்டர்கள் பணியாற்றினார்கள்?"

" அங்கு 8 டாக்டர்கள் பணியாற்றினார்கள். மதுரையிலிருந்து 6 டாக்டர்கள் சிகாகோவிலிருந்து பேராசிரியர் கொல்பேக் ஆகியோருடன் நானும் பணியாற்றினேன்.

ஒரேநாளில் 900 பேருக்கு சத்திரசிகிச்சை நடைபெற்றது; அது ஒரு பள்ளிக்கூடம். ஆஸ்பத்திரியில் உள்ள வசதிகள் அங்குகிடையாது. சிகிச்சை பெறுவோர் தங்குவதற்கும் மற்றும்சாப்பாட்டு வசதிகளையும் லயன்ஸ் கிளப்பும் தொண்டர்களும் செய்திருந்தனர். தொண்டர்கள் தாங்களாகவே சமைத்து, அத்தனை பேருக்கும் சாப்பாடு வழங்கினார்கள்.

'நீங்கள் எத்தனைபேருக்கு அன்று சத்திரசிகிச்சை செய்தீர்கள்?'

'நான்மட்டும் அன்று சுமார் 150 பேருக்கு சத்திரசிகிச்சை செய்தேன். காலை 7 மணிக்கு ஆரம்பித்துஇரவு 7 மணிவரை தொடர்ந்துசத்திரசிகிச்சை செய்துகொண்டிருந்தோம். இரவு 7 மணிவரை நான்மட்டுமல்ல மற்றும் டாக்டர்கள், தொண்டர்கள் எவருமே சாப்பிடவில்லை. இரவு 7 மணிக்குப் பின்னர்தான் எல்லோரும் சாப்பிட்டோம்.

"எத்தனை நாட்கள் சிகிச்சையளிக்கப்பட்டது;'

'சில நாட்கள்தான் நாங்கள் தங்கியிருந்து பரிசோதனை செய்தோம். 2 டாக்டர்கள் அதன்பின்னும் அங்கிருந்து உதவியளித்தனர். அங்கு வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் சகல சத்திரசிகிச்சைகளும் வெற்றிகரமாகவே முடிவடைந்தன. அங்குள்ளவர்கள் சத்திர சிகிச்சைக்கு விருப்பத்துடன் வந்தனர்.

'பேராசிரியர் டாக்டர் வெங்கடசாமிதான் எங்கள் குழுவுக்குத் தலைமை தாங்கியிருந்தார். ஒரு கிழமை 'காம்ப்' வைத்தாலும் சிகிச்சைக்கு ஆட்கள் வருவார்கள் என்றும் அவர் கூறினார். இந்தியாவில் இங்குள்ளதைவிடக் கூடிய ஜனத்தொகை, வறுமையால் கஷ்டப்படும் குடும்பங்கள் அதிகம், ஆகலால் அங்குள்ள ஆஸ்பத்திரிகளில் இப்படியான சத்திர சிகிச்சை பெற்றுக்கொள்வது சுலபமல்ல, அதனால்தான் இந்த நிலையத்திற்கு ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர்.

'இந்த சிகிச்சை நிலையம் பற்றி அவர்களெப்படி அறிந்திருந்தனர்?'

'இந்த நிலையங்கள்பற்றி நிறைய விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன. பத்திரிகைகளிலும் சுவரொட்டி துண்டுப் பிரசுரங்கள் மூலமும் முன்கூட்டியே விளம்பரம் செய்திருந்தனர். இவை தவிர ஒலிபெருக்கி மூலமும் விளம்பரம் செய்திருந்தனர். சிலர் 200 மைல்களுக்கப்பாலிருந்தும் வந்திருந்தனர். பெருந்தொகையானோர் கிராமங்களில் இருந்து வந்திருந்தனர்.

பரிசோதனையும், சத்திர சிகிச்சையும் ஒரேநாளில் நடைபெற்றதா?'

"இல்லை, முதல்நாள் பரிசோதனை நடைபெற்றது. அன்று சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டியவர்கள் அனுமதிக்கப்பட்டனர். மறுநாள்தான் சத்திர சிகிச்சை நடைபெற்றது. பரிசோதனை முடிந்தபின்கூட பலர்காத்து நின்றுகொண்டிருந்தனர். அவர்களிடம் நிலைமையை எடுத்துக்கூறினோம். ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். கடைசிநாள்கூட பெருந்தொகையானோர் வந்திருந்தனர். எங்களால் ஒன்றுமே செய்யமுடியாமல் போய்விட்டது. ஆறுதல் வார்த்தைகூறி அவர்களை அனுப்பினோம், குறிப்பிட்ட தொகையினருக்குத்தான் சத்திரசிகிச்சை செய்யமுடியும். அதற்குமேல் செய்ய வசதியுமில்லை: நேரமுமிருக்காது. எங்களால் இயன்றளவு செய்யக்கூடியவற்றைச் செய்தோம்.

"இந்த நோயைப் பற்றி விளக்கிக் கூறுவீர்களா?"

'இந்த நோய் அநேகமாக வயோதிபர்களுக்குத்தான் வருவதுண்டு. சிறுவர்களுக்கு வருவதுகுறைவு, இந்த நோய்வந்ததும்கண்பார்வையற்றுவிடும். நிரந்தரமாகக் கண்பார்வை மறைந்துவிடாது, சத்திர சிகிச்சையின்மூலம் மீண்டும் கண் பார்வையைப் பெற்றுவிட முடியும். இந்தச் சத்திரசிகிச்சை சாதாரணமானது. பயப்படத் தேவையில்லை. எந்த வயதுபோனவரும் செய்துகொள்ளலாம். சிலர் தங்கள் உடலில் இரத்தமில்லையென்று பயப்படுவார்கள். இந்தச் சத்திர சிகிச்சைக்கு உடல் பலமாக இருக்கவேண்டுமென்ற அவசிய—

(12ம் பக்கம் பார்க்க)

---

லக்கிய பசிகாரர்க
க்கு உணவு கொடுப்
து இந்தக் கடைதான். சமீ
காலமாக நெல்லியடியில்
லக்கியத்துறையில் பரவ
ான விழிப்புணர்ச்சி ஏற்
ட்டுள்ளது. சிறுகதை.
மர்சனங்களும் இலக்கியக்
ட்டங்களும் நடைபெற்று
ருகின்றன. ஈழத்துக் கலை.
லக்கியங்களுக்கு ஆக்கமும்
க்கமும் அளிக்கவேண்டும்
ன்ற தேசிய உணர்வு இங்
ள்ள வாசகர்கள் மத்தியில்
ழுந்துள்ளது. நெல்லியடி
ரசினர் மத்திய மகாவித்தி
லய மாணவர் மன்றம்
தியியல் மன்றம் என்பன
டிக்கடி சொற்பொழிவு
ள ஏற்பாடு செய்துவரு
ன்றன.

நெல்லியடி என்ற ஊர்
லவழிகளிலும் பெருமை
பற்று விளங்கினாலும் இன்
ம் சில அத்தியாவசிய
தவைகளும் உள்ளன. இங்
ள்ள நாடக, இசைக் கலை
ர்கள் தமது படைப்புக்
ள அரங்கேற்றுவதற்
ன்று ஒரு பொது மண்ட
ம் கிடையாது. யாழ். நகர
ப மண்டபம்போன்றோ
ல்லது யாழ். திறந்தவெளி
ரங்குபோன்றோ நெல்லிய
யிலும் ஒரு 'நாடகசாலை'
ல்லது பொது மண்டபம்
ட்டாயமாகக் கட்டப்
டல்வேண்டும். இது திரு
ணவைபவங்களுக்கும்
ாதுக் கூட்டங்களுக்கும்
லக்கியச் சர்ச்சைகளுக்கும்
டகம், கூத்துக்களுக்கும்
விக்கக்கூடிய ஒரு சிறந்த
ண்டபமாகத் துலங்க
ண்டும். நெல்லியடி பட்
சபையும் இப்பகுதி மக்
ளும் இவ்விடயத்தில் கட்
ய சிரத்தை எடுக்கவேண்
ம். அடுத்தபடியாக இப்
குதி மக்களின் குழந்தை
விளையாடுவதற்கென
ரு சிறுவர் பூங்காவும்
ாது விளையாட்டு மைதா
மும் அமைக்கப்படல்
ண்டும். இவை மூன்றும்
த்தியாவசிய தேவைகளா
ம்.

மிகச் சமீபத்திலே நெல்லி
டிக்கு மின்சாரம் தருவிக்
பட்டுள்ளது. இருண்ட
கெளெல்லாம் இப்போது
ிமயமாகக் காட்சிதரு
றன.

ஒரு காலத்திலே நெல்லி
ம்நின்றதனால் நெல்லியடி
ன்று அழைக்கப்பட்ட எங்
கிராமம் கொஞ்சம்
ாஞ்சமாக முன்னேறிப்
டினசபை அந்தஸ்திற்கு
ர்த்தப்பட்டு இப்போது
சியல்துறையிலும் பொரு
ாதாரத்துறையிலும் கல்
த்துறையிலும் சமூககுறை
டுகள் ஒழிப்புத்துறையி
ம், கலை, இலக்கியத்துறை
லும் படிப்படியாக முன்
றிச் செல்கின்றது என்ற
ன்மையை நான் இந்தக்
ாமத்துச் சிவந்த மண்
லே உதித்தவன் என்ற
மையோடும் பெருமை
ாடும் கூறிக்கொள்வதில்
சப்படுகிறேன்.

ங்கள் ஊர் மக்கள் நல்ல
ள். பழக இனியவர்
விருந்தோம்பும்
பு மிக்கவர்கள்,வேண்டு
ால் ஒரு தடவை எங்கள்
ல்லியடிக்கு விஜயம் செய்
களேன்.

---

# மனிதன் தோன்றியது எப்போது?

(குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்பது டார்வின் தத்துவம். இப்போது இரண்டு ஆராய்ச்சியாளர்கள் மனிதன் தோன்றியது பற்றிய சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள்)

மன்பதையியலில் உருவத் தோற்றத்தை ஆராயும் விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாகவே மனிதன் எப்போது தோன்றினான் என்ற கேள்விக்கு விடைகாண முயன்று வருகிறார்கள்.

அறுதியிட்டுச் சொல்வதற்கு இன்னமும் நெடுங்காலம் ஆகும் என்றாலும் மனிதனைப்போன்ற உயிரினங்கள் முதன் முதலில் தோன்றிய காலம் ஏறக்குறைய ஒன்றரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்பாகும் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர் இருவர் திண்ணமாக எண்ணுகிறார்கள்.

டாக்டர் எல்வின் எல். சைமன்ஸ், டாக்டர் டேவிட் ஆர். பில்பிம் ஆகிய அவ்விருவரும் யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள். பழம் படிவமான இரண்டு தொடை எலும்புகளை மிகக்கருத்தாக ஆராய்ந்து இவர்கள் அம்முடிவுக்கு வந்துள்ளனர். அந்த இரண்டு எலும்புகளும் இப்போது பூண்டற்றுப்போன ராமாபித்திக்கஸ் என்ற பழைய உயிரினமாகிய பிரைமேடினுடையவை என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் 'பிரைமெட்' எண்பது லட்சம் முதல் ஒன்றரைக்கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஆசியாவிலு ஆபிரிக்காவிலும் வாழ்ந்தது. விஞ்ஞானிகளுக்கு ஏற்கெனவே தெரிந்ததுதான், ஆனால் அது உருவத்தோற்றத்தில் அதிகமாக மனிதனைப்போல் இருந்ததா அல்லது வாலில்லாக் குரங்கைப்போல் இருந்ததா என்று அவர்கள் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை,

'ராமாபித்திக்கஸ் ஒரு ஹோமினிட்' என்கிறார் டாக்டர் சைமன்ஸ். உடல் அமைப்பில் மனிதனைப் போன்ற மிகத் தொன்மையான உயிரினம் இதுவே என்று அவர் கூறுகிறார்

ஏ. ஸ்வாட்வர்

உண்மையிலேயே ராமாபித்திக்கஸ் ஒரு ஹோமினிட் என்றால் அதிலிருந்தேநேரடியாக ஆஸ்ட்ரலோபித்திக்கஸ் என்ற பிரைமேட் தோன்றியிருக்கக்கூடும். மனிதன் தோன்றியது ஆஸ்ட்ரலோபித்திக்கஸிடமிருந்துதான் என்பர்.

ஆஸ்ரலோபித்திக்கஸ் தோன்றிக் கிட்டத்தட்ட இருபது லட்சம் ஆண்டுகள் இருக்கும் என்று முன்பு நினைத்திருந்தனர், ஆனால் 1969-ல் சிக்காக்கோ பல்கலைக்கழக விஞ்ஞானி டாக்டர் எவ். கிளார்க்ஹோவல் தலைமையில் கிழக்கு ஆபிரிதகாவில் ஆராய்ச்சி செய்க் குழுவினர் கண்டெடுத்த பழம் படிவங்கள் ஆஸ்ட்ரலோபித்திக்களின் காலம் கிட்டத்தட்ட 40 லட்சம் ஆண்டுகளுக்குமுன்னதாகும் என்று காட்டின.

மனிதனுக்கு முந்தியவையான இந்த இரண்டு உயிரினங்களுக்கும் இடைப்பட்ட காலம் இவ்வாறு இந்த ஆராய்ச்சியால் குறுகியது. டாக்டர் ஹோவல் குழுவினர் கண்டெடுத்த பழம் படிவங்கள் எதியோப்பியாவில் ருடால்ப் ஏரிக்கு வடக்கே ஒருபழைய ஆற்றின் படுகையில் கிடந்தவை ஆகும்.

டாக்டர் சைமன்ஸ், கூறுகிறார். "நாங்கள் கண்டுபிடித்துள்ள இரண்டு எலும்புகளும் குறிக்கும் உயிரினம் 'ஆஸ்ரலோபித்திக்கஸ்' உயிரினத்தை எத்தனையோவகைகளில் ஒத்திருக்கின்றது. ஆதலால் அது வாலில்லாக் குரங்கினோடு அதிகமாக ஒத்திருக்க முடியாது"

டாக்டர் சைமன்ஸ், டாக்டர் பில்பீம் இருவரும் ஆராய்ந்த தொடை எலும்புகள் 1930-க்கு முன்னும் பின்னும் இந்தியாவில் தோண்டி எடுக்கப்பட்டவையாகும்.

அவை பூண்டற்றுப்போன ஒருவகை வாலில்லாக் குரங்குகளின் எலும்புகள் என்று இதுவரை தவறுகக் குறிக்கப்பட்டிருந்தன என்று டாக்டர் சைமன்ஸ்,டாக்டர் பில்பீம் இருவரும் கூறுகிறார்கள்.

ஓர் உயிரினத்தின்தொடை எலும்பைப் பார்த்து அதன் உண்ணும் பழக்கத்தையும் பிற நடவடிக்கைகளையும் உருவத் தோற்ற மன்பதையியல் விஞ்ஞானிகள் உய்த்துணர்ந்துவிடுவர். அதுவும் பற்கள் இவ்வகையில் மிகவும் உதவியாக உள்ளன.

வாலில்லாக்குரங்குகள் எல்லாவற்றிற்கும் பெரிய கோரைப்பற்கள் உண்டு. ஆனால் யேல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்த தொடை எலும்புகளில் அவ்வாறு இல்லை ஆகவே ராமாபித்திக்கஸ் பக்கவாட்டில் வாயசைக்க முடியும், இது 'கோமினிடுகள்' எல்லாவற்றுக்கும் உரிய செயலாகும். வாலில்லாக் குரங்குகள் பெரும்பாலும் தாடைகளை மேலும்கீழும் அசைத்து உணவை அரைக்கும். ஏனெனில் அவற்றின் கோரைப்பற்கள் வாயைப் பக்கவாட்டில் அசையவிடமாட்டா.

வாலில்லாக் குரங்குகளுக்குப் பின் கடைவாய்ப் பற்கள் இரண்டும் ஏறத்தாழ ஒரே சமயத்திலே முளைத்திருக்கும். மனிதனுக்கோ அப்படியில்லை. டாக்டர் சைமன்ஸ், டாக்டர் பில்பீம் இருவரும் ஆராய்ந்த 'ராமாபித்திக்கஸ்' தொடை எலும்புகளில் முன்கடைவாய்ப் பல்லைவிடப் பின்கடைவாய்ப் பல் குறைவாகத் தேய்ந்திருந்தது. இது மனிதனுக்குள்ள பல் அமைப்பை ஒத்திருக்கிறது.

நன்றி- அமெரிக்கச் செய்தி




சிறுவர் கவி நயம் — 21

# எறும்பு: எறும்பு: எறும்பு

அன்புள்ள
தம்பி தங்கைகளே.

மிருகங்கள் பறவைகளிலும் பார்க்கமனிதன் உயர்ந்தவன். அவைகளுக்குப் பகுத்தறிவு இல்லே. மனிதனுக்கு மாத்திரம்பகுத்தறிவு உண்டு. ஆனுல் மனிதனின் சில நல்ல பழக்கங்களே மிருகங்கள் பறவைகளிடமிருந்தும் படித்துக்கொள்ளல் வேண்டும்; காக்கையிடம் சுத்தம். காலேயில் எழும்புதல், ஒற்றுமை இவற்றைக் காணலாம், தேனீயிடம் சுறுசுறுப்பு, சேர்த்துவைத்தல் முதலியவற்றைப் பழகலாம். நாயிடம் நன்றியறிதல் குணத்தையும், ஆமையிடம் அடக்கக குணத்தையும் தெரிந்துகொள்ளலாம். ஆனல் சிலர்— வளர்ந்தவர்கள் — நல்ல குணங்களே விட்டுவிட்டு நரியின் தந்திரத்தையும், குரங்கின் சேட்டைகளேயும். புலியின் சீற்றத்தையும், சிங்கத்தின்கர்ச்சனையையும் கற்றுக்கொள்கிருர்கள்: காலமெல்லாம் கஷ்டப்படுகிருர்கள்.

சிறுவர்களாகிய நீங்கள் நல்லவற்றைக் கடைப்பிடித்துத் தீயனவற்றைக் கைவிட்டுவிடவேண்டும். உங்கள் வீடுகளில் வரிவரியாக ஊர்ந்துசெல்லும் எறும்பைப் பாருங்கள். சர்க்கரையைத் தின்னுகின்றது. இனிப்புப் பண்டங்களில் மொய்க்கிறது. காலேவைத்துவிட்டால் கடிக்கிறதென்று உங்களிற் பலருக்கு எறும்பின்மீது கோபம். ஆனுல் சின்னஞ்சிறிய எறும்பிடமிருந்தும் நீங்கள் படித்துக் கொள்ளவேண்டிய நல்ல பாடங்கள் எவ்வளவோ இருக்கின்றன கடிக்கும் எறும்பிடமிருந்து படிக்கக் கூடிய பாடம் என்ன என்று கேட்கிறீர்களா? இதோ ஒரு கவிஞர் அழகான பாடல் ஒன்றிலே அதை அழுத்தமாகப் பாடியுள்ளார்.

சுறுசுறுப்பாய்
ஊர்ந்துபோகும்
எறும்பைப்பார் தம்பி
சின்ன -
எறும்பைப்பார் தம்பி -
அதன்
சோம்பலற்ற
வாழ்வுதன்னே
எண்ணிப் பார்தம்பி -
என்றும்
எண்ணிப்பார் தம்பி.

எறும்பு - சின்னஞ்சிறிய எறும்பு-எவ்வளவு சுறுசுறுப்பாக வேலேசெய்கிறது. உனக்குத் தெரியுமா? சோம்பல் என்பதை சில பிள்ளேகள் கைக்கொண்டு உழைப்புஎன்பதை மறந்துவிட்டார்கள். எறும்பு சோம்பலற்ற வாழ்வு வாழ்கிறது. இந்த எறும்பைப் பார்த்தாவது சுறுசுறுப்பு, சோம்பலற்ற வாழ்வு இவற்றைப் பழகிக்கொள்ள வேண்டாமா? என்று கவிஞர் கேட்கிருர்.

பரீட்சை நெருங்குகிறது. படித்த பாடங்களே மீண்டும் படிக்க வேண்டும். அதிகாலேயே படிப்பதற்கு ஏற்ற நேரம். தாயார் எழுப்புகிருர். ஆனுல் சிலபிள்ளேகள் எழும்புவதேயில்லே சோம்பல். கடைசியில்முடிவுஎன்ன தெரியுமா? பரீட்சையில் தோல்வி. எறும்பைப்பார்த்தாவது பழகிக்கொள். அதன் சோம்பலற்ற வாழ்வை எண்ணிப்பார் என்று கவிஞர் அழுத்தமாக பல விடயங்களே உள்ளடக்கிக் கூறுகிருர்.

கூட்டுணர்ச்சி
போற்றுகின்ற
எறும்பைப் பார்தம்பி -
சின்ன
எறும்பைப்பார் தம்பி -
அதன்
குறிக்கோளேக்
கொள்ளவேண்டும்
எந்நாளும் தம்பி - நீ
எந்நாளும் தம்பி.

சுறுசுறுப்பு சோம்பலற்ற வாழ்வு இவற்ருேடு இன்னும்பல குணங்கள் எறும்பிடம் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று கூட்டுணர்ச்சி, ஒற்றுமையாய்ப் பலசேர்ந்து வாழ்தல். எறும்புகள் தனித்தனியாக வாழ்வதில்லே. கூட்டமாகவே வாழும். வரிசையாகச் செல்லும் எறும்புக்கூட்டத்தைப் பாருங்கள்? ஒன்ருே? இரண்டா? நூருே ஆயிரமா? அப்பப்பா எண்ணிமுடியாத கூட்டம்! வண்ண வரிசையின் வனப்பு!

அரிசி இழுத்துச்
செல்லுகின்ற
அழகைப்பார் தம்பி -
எறும்பின்
அழகைப்பார் தம்பி -
வரிசையாக
வளேந்துசெல்லும்
வனப்பைப்பார் தம்பி-
எறும்பின்
வனப்பைப்பார் தம்பி.

மழை வரும் அறிகுறிகள் தெரிந்தால் எறும்புகள் தங்கள் முட்டைகளே எடுத்துக் கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு வரிசைவரிசையாகச் செல்லும். எங்கெங்கோ இருக்கும் அரிசியை இழுத்துச் சென்று சேமிக்கும். அப்போது அவை செல்லும் அழகு! ஒன்றன்பின் ஒன்ருக ஊர்ந்து செல்லும் நேர்த்தி! இவை எறும்பிடம் மனிதன் படிக்கவேண்டிய பாடங்கள் ஏற்றத்தாழ்வு இல்லாமல் சரிசமமாய் உழைத்து வாழும் எறும்பின் வாழ்க்கை மனிதன் முக்கியமாகக் கைக்கொள்ள வேண்டிய பாடம்.

நல்ல குறிக்கோளை எறும்பின் மூலம் வற்புறுத்திப் பாடுவதகு எளியதாய்இப் பாடலை எழுதியிருக்கும் கவிஞர் ஆசுவன். அவரது கவிதை நூல் பள்ளி மாணவர்க்குப் பயனுள்ள பாடல்கள். மல்லிகைப் பதிப்பகம் (தியாகராஜநகர் சென்னை —17) இதை வெளியிட்டுள்ளது.

பாடலை ஒருசேர மீண்டும் பாடுங்கள்.

சுறுசுறுப்பாய்
ஊர்ந்து போகும்
எறும்பைப் பார்
தம்பி-சின்ன
எறும்பைப் பார் தம்பி.
சோம்பலற்ற
வாழ்வு தன்னே
எண்ணிப் பார் தம்பி-
என்றும்
எண்ணிப் பார் தம்பி.
கூட்டுணர்ச்சி
போற்றுகின்ற
எறும்பைப் பார்
தம்பி-சின்ன
எறும்பைப் பார்
தம்பி-அதன்
குறிக்கோளேக்
கொள்ள வேண்டும்
எந்நாளும் தம்பி- நீ
எந்நாளும் தம்பி.
அரிசி இழுத்துச்
செல்லுகின்ற
அழகைப் பார் தம்பி
-எறும்பின்
அழகைப் பார் தம்பி.
வரிசையாக
வளேந்து செல்லும்
வனப்பைப் பார் தம்பி
-எறும்பின்
வனப்பைப் பார் தம்பி.
எறும்பைப் போல
மனிதர்களும்
இருக்க வேண்டுமே
-தம்பி
இருக்க வேண்டுமே.
ஏற்றத் தாழ்வும்
இல்லாமலே
உழைக்க வேண்டுமே
-தம்பி
உழைக்க வேண்டுமே.

—இரசிகமணி கனக செந்திநாதன்—

# பாம்பின் விஷம் பயன்படுகின்றது!

— தென்மயிலேச் சண்முகன்

"பாம்பென்ருல் படையும் நடுங்கும்" என்பது பழமொழி. பாம்பு என்றதுமே பதைபதைத்துநாமெல்லாம் நிற்கின்ற வேளேயில் அந்தப் பாம்பின் விஷத்தைக்கறந்து அதனே விலேப்படுத்துவதன் மூலம் சீவியம் நடத்துகிருர் ஒருவர்.

ஐக்கிய அமெரிக்காவின் புளோரிடா மானிலத்தின் பிரபல நகரான மியாமியிலிருந்து தெற்குபுறமாய்சிறிது தூரத்துக்கப்பால் பயங்கரப் பாம்புகள் பலவற்றையும் சேர்த்து பாம்புகள் கூடமொன்றை அமைத்து அவற்றை பராமரித்து பாம்புகளுடன் விளேயாடுகின்ருர் வில்லியம் ஹாஸ்ட் என்பவர். ஆயிரத்துக்கும் அதிகமான விஷப்பாம்புகளின் இருப்பிடமாக அமைந்துள்ள இந்தப்பண்ணே உலக மக்களின் கவனத்தைஈர்த்து நிற்கின்றது.

பல்வேறு நாடுகளேயும் சேர்ந்த பலவகை விஷப் பாம்புகளேயெல்லாம் கருவித்து ஓர் ஆராய்ச்சி நிலேயமமைத்து அவற்றின் விஷத்தைக் கறந்து பல நாடுகளுக்கும் விற்பனை செய்கின்ருர்.

வில்லியம் சேகரிக்கு இந்த விஷம் பாம்புகடிப்பதுல் மனிதஉடலேத் தாக்கும் விஷத்தின்நச்சுத்தன்மைக்கு எதிராக பாம்பின் விஷக்கடியின் வலுவை இழக்கச் செய்ய உதவுகின்றது. இவ்வாறே பல்வேறு நச்சு எதிர்ப்பு மருந்துகளே தயாரிக்கவும் இவை உதவுகின்றன.

இவர் விஷத்தை சேகரிக்கும்போது போதியளவு விஷம்சேர்ந்ததும் அதனே திடீர் உறைவாக்கியபின் அதிலுள்ள நீரினே அகற்றி பொடியாக்குகின்ருர். இந்த விஷப்பொடி பல்வேறுநாடுகளிலும் உள்ள மருந்து தயாரிப்பு நிலேயங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதன்மூலம் ஆண்டுக்கு ஐம்பதாயிரம் டாலர்களுக்குமேல்பெறுகின்ருர் வில்லியம்.

விஷம்கறக்கும்விஷப்பரீட்சையில் நூறுதடவைகளுக்கு மேல் பாம்பின் விஷக்கடிக்குள்ளாகிய வில்லியம் தான் பெற்ற விஷஎதிர்ப்புமருந்துகளே தன் உடலில் செலுத்தியதன் மூலம்தன் உயிரைக் காப்பாற்றி மேலும் தன் தொழிலேச் செய்துவருகின்ருர். இவரின் இந்தப்பணி மூலம் பலரின்உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. இன்றும் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

உயிரைப்பணயம் வைத்து 'வில்லியம்'செய்யும் இந்தத் தொழில் அவரின் வயிற்றுப் பிழைப்புக்கு வழிசெய்ததோடு உலகமக்களின் உயிர் காக்கும் அமிர்தமாகவும் இருக்கிறது எப்படித் தானிருந்தாலும் விஷம் கறக்கும் "வில்லியம் ஹாஸ்ட்" உண்மையில் விந்தை மனிதரே!

## ஓர் அங்குலம்

ஓர் ஊரிலே மூன்றுபேர் சந்தித்துப் பேசினுர்கள். அவர்களுள் ஒருவர் ரஷ்யர், ஒருவர் அமெரிக்கர். மற்றவர் இந்தியர். மூவரும் பேசிக்கொண்டு நின்றபொழுது அவர்களுள் ஒருவரான ரஷ்யருக்குத் தன் நாட்டைப் பற்றிப் புகழ விருப்பமாயிருந்தது. உடனே அவர் அமெரிக்கரையும். இந்தியரையும் பார்த்து எங்கள் நாட்டில் நீர்மூழ்கிக் கப்பல் தரையை முட்டித் தட்டிக்கொண்டு போகிறது என்ருர் அதற்கு அவர்கள் இருவரும் அது எப்படியப்பா நடக்கும்என்று கேட்டார்கள் அதற்கு அவர்கள் தரையிலிருந்து ஓர் அங்குலம் மேலாகச் செல்கிறது என்று சொன்னுர். இதைப் பார்த்த அமெரிக்கருக்கும் தன் நாட்டைப் பற்றிப் புகழவேண்டும் என்ற விருப்பம் வந்தது உடனே அவர் எங்கள் நாட்டில் ஆகாய விமானம் வானத்தைத் தொட்டுக்கொண்டு செல்கின்றது என்ருர். அதற்கு மற்ற இருவரும் அது அப்படிச் செல்லமுடியாது என மறுத்தார்கள். அதற்கு அவர் வானத்திலிருந்து ஓர் அங்குலம் கீழாகச் செல்கிறது என்ருர். பின் அமெரிக்கரும் ரஷ்யரும் இந்தியரைப் பார்த்து உங்கள் நாட்டில் எதுவித அதிசயம் ஒன்றும் இல்லேயோ என்று கேட்டனர். அதற்கு இந்தியர்

(11-ம் பக்கம் பார்க்க)

## தெரிந்து கொள்ளுங்கள்

நாக்கிளிப் புழுக்கள் கமக்காரர்களுக்கு மிகவும் உதவி செய்கின்றன. இவை நிலத்தைத் துளேத்துச் செல்லும்பொழுது அடியிலுள்ள தலேப்பகுதியால் மண்ணுடன் கூடிய உணவை உண்டு மேல் மட்டத்திலுள்ள வாலினுல் மண்ணே எச்சமாகக் கழிக்கின்றன. இவை இப்படிச் செய்வதால் மேலுள்ள மண் கீழாகவும் கீழுள்ள மண் மேலாகவும் இடம் பெயர்கின்றன. இதனுல் நிலம் காற்ருேட்டமுள்ளதாகின்றது. தாவரங்கள் செழிப்பாக வளருகின்றன, இதனுல் இதை' இயற்கையின் உழவாளி' என்பர்.

வால்வெள்ளிகள் சூரியனே நீள் வட்டமான பாதையில் சுற்றுகின்றன. இவை சூரியனே நெருங்கும்பொழுது சூரியனின் ஈர்ப்புச் சக்தியால் மிக வேகமாக சூரியனேச் சுற்றுகின்றன. அப்பொழுது இவைகளுக்கு வால் போன்ற ஒளிக்கதிர் உண்டாகின்றது.

குளோரீன் என்னும் வாயு பச்சை நிறமானது. இவ்வாயு பொருட்களே வெளிறச்செய்யும் தன்மைவாய்ந்தது. சாக்துணி உற்பத்தித் தொழிற்சாலேகளில் துணிகளே வெண்மையாக்குவதற்கு மூலப்பொருளாகப் பாவிக்கப்படுகின்றது.

0 0 0

அவுஸ்திரேலியாவிலுள்ள எமு, ஆபிரிக்காவிலுள்ள நெருப்புக்கோழி மற்றும் கெசவாரி ஆகிய பறவைகள் ஒரே இனத்தைச் சேர்ந்தது டன் ஏறக்குறைய உருவில் ஒரே அளவுடையனவாகவே இருக்கின்றன.

0 0 0

நாம் சாதாரணமாக உண்ணும் கணவாய்கள் போன்று 25 அல்லது 30 அடி நீளமான பெரிய கணவாய்கள் சமுத்திரங்களில் காணப்படுகின்றன. இவற்றுக்கு ஒக்ரொபஸ் என்று பெயர். இக்கணவாய் சாதாரணமாக ஒரு மனிதனே பிடித்து விழுங்கக்கூடியதாக உள்ளது.

— நஞ்சன்

## சயிக்கிள் வண்டி

—சோ. சுப்பிரமணியம்—

சின்னச் சின்ன வண்டி
சிவப்பு நிற வண்டி
என்னே ஏற்றிச் செல்லும்
எனது சயிக்கிள் வண்டி
காலால் மிதித்தால் ஓடி
கடுகதியிற் செல்லும்
பாலா மாமா எனக்கு
பரிசாய்த் தந்த வண்டி
ஆசை யோடு அமர்ந்து
அங்கு மிங்கு மோட
ஆசன மும் உண்டு
அமர் ந்திடலாம் சென்று
பாதையிலே ஓடும்
பாலர் விலகி ஏக
காதை யடைக்கும் நல்ல
கனத்த மணியும் உண்டு
கோதை யக்கா கேட்டு
குறும்பு செய்து நிற்கும்
ருேதை மூன்று உள்ள
எனது சயிக்கிள் வண்டி

## போனில் முகம்

நாம் போனில் பேசுகிறோம். நமது பேச்சு எதிர்தரப்பில் உள்ளவர்களது செவியில் ஒலிக்கிறதேயன்றி எமது முகபாவம் அவர்களுக்குத் தெரிவதில்லை. எனவே நாம் பேசும்போது ஏற்படும் முகபாவங்களும் உணர்ச்சிகளும் தொடர்பு கொள்ளுபவர்களுக்கு தெரியாமற் போவதோடு ஊன்றிக் கவனிப்பவர்களுக்கு மிக வேடிக்கையாகவும் இருக்கும். இந்த கையை ஓர் அவஸ்தை அமெரிக்காவிலுள்ள பிற்ஸ்பேர்க் நகரில் உள்ளவர்களுக்கு ஏற்படுவதில்லை ஏன் தெரியுமா? அந்நகரத்தில் உள்ளூர் தொலைபேசியாக முகம் தெரியக்கூடிய டெலிபோன் அமைக்கப்பட்டுளது. இதன்மூலம் பேசுபவரும் கேட்பவரும் பரஸ்பரம் போன் மூலம் ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்கலாம்: பேசுபவரின் முகத்தைப் பார்த்துக்கொண்டே பேசக்கூடிய போனில் அதிக பட்சமாக ஒன்றரை மணிநேரம் பேச அனுமதிக்கப்படும்.

இந்த போன்சேவையை பிற்ஸ்பேர்க் நகரத்தின் பெல் கம்பனியார் அமைத்துள்ளனர். இதற்குப் 'பிக்சர் போன்' எனப் பெயரிட்டுள்ளனர். 20 றாத்தல் எடையுள்ள இந்தப் போனில் ஒளி குறைவாக உள்ள அறையில் கூட இதில் பேசுபவரின் உருவம் நன்கு தெரியும். முகம் பார்த்துக் கொண்டே பேசக்கூடிய இந்தப் போனில் கம்பியூட்டரும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கம்பியூட்டரின் உதவியால் புதிய கண்டுபிடிப்புகளையும் மார்க்கெட் நிலவரங்களையும் விலைவாசி, உற்பத்தி செய்திகளையும் கூட அறிந்து கொள்ளலாம்.

### பார்க்கலாம்

# பதிபக்தி....... யோகீஸ்வரர்

பதிபக்தி செய்வதனால் எல்லாத் தெய்வங்களும் அப்பெண் ஏவல்வழிநிற்கும்' பஞ்சமகா பூதங்களும் அவள் சொற்படி நடக்கும். அவளால் ஆகாததொன்றில்லை. தமயந்தி வேடனை எரித்ததும், அநசூயை மும்மூர்த்திகளையும் புத்திரராகப் பெற்றதும், சூரியனுதியாதிருக்கும்படி நளாயினி சபித்ததும், இறந்த கணவனைச் சாவித்திரி மீட்டுக் கொண்டுவந்ததும், சுகன்யை அசுவினி தேவர்களை ஜெயித்துத் தன்கணவனுக்கு மாறாதஇளமையைக்கொடுத்ததும், சீதையும் திரௌபதியும் தம் சத்துக்களை சங்கரித்துக் கீர்த்திபெற்றதும் உலகம் புகழ வாழ்ந்ததும், அருந்ததி எல்லாராலும் கொண்டாடப்பட்டு நட்சத்திரமண்டலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதும் இன்னும் பலவும் இந்தப் பதிவிரதத்தால் கிடைக்கப்பெற்ற பாக்கியமேயாகும்'

ஆடவனுக்கு வணக்கத்துக்குக் காலம் உண்டு. பெண்ணுக்கு அவ்வாறு காலவரையறையில்லை. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி ஆகிய மூன்று நிலையிலும் அவள் வணங்கவேண்டும். நாயகனின் புகழ், அவன் அறிவாற்றல், அவன் உரையாடல் ஆகியவற்றை மனைவி நினைவு கூருவாளானால் அவள் மனம் பிற ஆடவரை நாடாது. இதனால் கணவன் பால் அன்பும் பாசமும் ஏற்படும். மனம் யோக நிலையடையவும், தெய்வ அனுக்கிரகம் அவளுக்குக் கிட்டும். இதுவே பெண்ணுக்கு வேண்டியதாகும். இதையே வள்ளுவரும்,

'தெய்வந் தொழாஅள்
கொழுநற்றொழு
தெழுவாள்
பெய்யெனப் பெய்யும்
மழை"

எனக் கூறியுள்ளார்.




### மண்பாண்டம்

சமையலுக்கு உபயோகிக்கும் பாத்திரங்களில் மண்பாண்டம் தான் மிகவும் சுத்தமானது, சுகாதாரபூர்வமானது. உணவின் தன்மையோ ருசியையோ அவை கெடுப்பதில்லை.

### அறுசுவை உணவு

முன்னோர்கள் அறுசுவை உணவு என்று வகுத்தது சுவையைமட்டும் கருதியல்ல. உடல்வளர்ச்சிக்குத் தேவைப்படும் எல்லாச்சத்துக்களும் உணவில் சேரவேண்டும் என்பதற்காகத்தான் அவ்வாறு ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

### காரணம் இதுதான்

ஓடியாடும் குழந்தைகளுக்கு வீணாகும் சக்தியை ஈடுசெய்யவேண்டியிருக்கிறது. அதனாலேயே அவை இனிப்புப் பொருள்களை அதிகம் விரும்பிச் சாப்பிடுகின்றனர்.

# தலையலங்காரம் ஒரு கலை!

(திருமதி மாத்யூ — தாமரக்காடு)

சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடிதான் நாம் ஆடை அணியவும், தலையலங்காரம் செய்துகொள்ளவும் வேண்டும். அலுவலகத்துக்கும் பள்ளிக்கூடத்துக்கும், கல்லூரிக்கும், ஆஸ்பத்திரிக்கும் போகும்பொழுது நாம் ஒரே மாதிரியான ஆடை அணிகளுடன் போவதில்லை அதே போல் மாலை வேளையில் உலாத்தச் செல்லும்பொழுதும் நடனம் முதலியவற்றைப் பார்க்கப் போகும் பொழுதும் நாம் தனிமுறையில்தான் செல்லுகிறோம். எது எப்படியிருப்பினும் சுலபமாகச் செய்துகொள்ளும் தலையலங்காரங்கள் சிலவற்றை இங்கே கவனிப்போம்.



கூந்தலை அலங்கரிக்கும் பொழுது நாம் முதலாவதாகக் கவனிக்கவேண்டியது முடியில் எண்ணெய்ப் பசையைக் குறைப்பதே. ஷாம்பூவை உபயோகிக்க முடியாவிட்டால் நல்ல சோப்பை உபயோகித்தும் எண்ணெய் பசையை அகற்றலாம் அதிகம் எண்ணெய்ப்பசையிருந்தால், முகத்தின் ஒளி குறைந்துவிடும். முடியில் ஈரம் இருக்கக்கூடாது. முடி நன்றாக உலர்ந்திராவிடில் முடிச்சு நன்றாக அமையாததுடன் கூந்தலுக்கும் தீங்கு நேரும்.

முடியை வாரி ஒதுக்கிக் கொள்ளுவதில் கவனிக்க வேண்டிய பல விஷயங்கள்: அதிக அகலமுடைய நெற்றியுள்ளவர்கள் சிறிதளவு நெற்றி மறையும்படி தலைமயிரை வாரிக்கொள்ள வேண்டும். முன்பக்கத்தை அகலமாக வாரி காதுகளை மூடாது பெரிய கொண்டை போட்டுக்கொள்வது தற்கால நாகரிகம். காதின் பின்புறமிருந்து சிறிதளவு முடியை வெட்டி முன்பக்கம் வைத்தால் கவர்ச்சியாக இருக்கும்

தலையலங்காரம் ஒரு கலை என்று கூறலாம். புதுத் 'தினுசு'களை இதில் தனிப்பட்ட முறையில் யாரும் ஏற்பாடு செய்யலாம். கொண்டை போட்டுக்கொண்டு அதில் அழகிய பூக்கள், பூமொட்டுக்கள், அழகிய இலைகள், காய்கள், ஒளிரும் கற்கள் பதித்த 'ப்ரூச்' இவற்றோடு ஊசி மிளகாய்களைக்கூட அலங்காரமாக உபயோகிக்கலாம். உடுக்கும் சேலை, பிளவுஸ் இரண்டின் நிறமும் உடைய அணிகளைத் தலையில் சூடுவது அதிக அழகு தரும் பொருத்தமான நிறம் உள்ள அணி கிடைக்காவிடில் தையல் கடையிலிருந்து சுக்கரித்து எறியும் துண்டுகளைக்கொண்டு சிறிய பூக்களைப் பல நிறத்தில் தயார் செய்து வைத்திருந்தால் வேண்டியிருக்கும் போது உபயோகித்துக் கொள்ளலாம்.

கூந்தலை மூன்றாகப் பிரித்துக்கொண்டு, நடுவில் இருப்பதை நூலால் கட்டியபிறகு சுற்றிக் கட்டிக்கொள்ள வேண்டும். முடி குறைவாக இருப்பவர்கள் செயற்கை முடியை உபயோகிக்கலாம். வலது பக்கம் இருக்கும் கேசத்தைச் சிறிது பிரித்து இடதுபக்கம் கொண்டுவந்து கொண்டையைச் சுற்றிலும் தலையூசிகளைக் குத்திக் கொண்டையைக் கெட்டிப் படுத்தவேண்டும். இடது பக்க முடியையும் இவ்வாறு செய்தல் வேண்டும். உத்தியோகத்துக்குச் செல்லும் பெண்கள இம்முறையைக் கைக்கொள்ளலாம். கொண்டையை அலங்கரிக்க விரும்புவோர் ஒரு பக்கம்மட்டும் பூமாலை வைத்துக்கொள்ளலாம் சேலை, பிளவுஸ் இவற்றின் நிறத்திற்கேற்ப நான்கு சிறிய பூக்களைக் கொண்டையின் மேற்புறமும், கீழ்ப்புறமும், பக்கங்களிலும் குத்திக்கொண்டாலும் அழகாக இருக்கும். இது ஒரு விதம்.

மற்றொருவிதம், கூந்தல் முழுவதையும் ஒரு நாடாவினால் தலையின் அடிப்பக்கத்தில் கட்டவேண்டும் பின் மூன்றாகப் பிரித்து நடுப்பகுதியின் நுனியில் மேல் பகுதியில் ரோலஸ் வைத்துச் சுருட்டிச் சுருட்டித் தலையின் உச்சியில் கொண்டுவந்து தலையூசிகளைக் குத்தி நிறுத்த வேண்டும். பிறகு பக்கத்தில் தொங்கும் இரு பகுதிகளில் ஒன்றை முன் கூறிய முறையில் சுருட்டிக்கொண்டு வந்து முதல் சுருளின் அடியில் நிறுத்தவேண்டும். மறுபுறம் இருப்பதையும் அதே போல் சுருட்டி இரண்டாவது சுருளின் அடியில்வைக்க வேண்டும். கேசம் அடர்த்தியாக இருந்தால் நாலாகப் பிரித்து வைத்துக்கொண்டாலும் நன்றாக இருக்கும். இந்தக் கட்டுக்குப் பூ அணிய வேண்டும் என்பதில்லை நாகரிகமாகத் தோற்றம் அளிக்க வேண்டிய சமயத்தில் இந்தத் தலையலங்காரம் ஏற்றது. கடையிலிருந்து 'ரோல்ஸ்' வாங்கிக்கொள்ளலாம்.

நன்றி மஞ்சரி

### பாம்பின் விஷம்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் இல்லை? என்று சொல்லி எங்கள் நாட்டில் மக்கள் மூக்கினால் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னார். அதற்கு ரஷ்யரும் அமெரிக்கரும் திகைத்து எப்படியப்பா மூக்கினால் சாப்பிட முடியும்? என்று கேட்டு மூக்கின்மேல் கைவைத்து அதிசயித்தனர். அதற்கு இந்தியர் மூக்கிலிருந்து ஓர் அங்குலம் கீழாக உள்ள வாயினால் சாப்பிடுகிறார்கள் என்றார்.

(அனுப்பியவர்- க. பாலசுப்பிரமணியம்)

### விதவையின் பெயர் சுமங்கலி!

நேபாளத்தில் பெண்கள் பருவமடைந்த உடனே கல்யாணம் செய்துவிடுகிறார்கள். நேபாளிகள் மணமகனைத் தேடியலைவதில்லை. ஸ்வர்ணகுமார் என்று அங்கே ஒரு தங்க விக்கிரகம் இருக்கிறது. இந்த விக்கிரகத்துக்கு பருவப்பெண்ணை 'விவஇகல்யாணம்' செய்து விடுகிறார்கள். இதற்குப் பிறகுதான் ஏற்ற கணவனைத்தேடி திருமணம் செய்துகொள்கிறார்கள். அந்தக்கணவன் இறந்துவிட்டால், முன்பே ஸ்வர்ணகுமாரிக்குத் திருமணம் செய்திருப்பதால் அந்தப் பெண் விதவையாகாமல், ஸ்வர்ணகுமாரின் மனைவியாக அழைக்கப்படுவாள். பூவும் பொட்டும் வளையும் மஞ்சளுமாய் சுமங்கலியாய் இருப்பாள்!

இன்றே வருக! நன்றே கொள்க!!

தங்க, வைர நகைகள்

வியாபாரத்தில்

முன்னணியில் நிற்கும் சிறந்த

நாணயமுள்ள ஸ்தாபனம்

ராணி

ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

மனேஜர்: A. KARAPUTUGALA.

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— ச. வே. பஞ்சாட்சரம் —

## 15. உலகுக்கோர் ஆலநிழல்

ஊரில் பயிர் தந்து வந்த ஓயாத வருவாயில்
நீரப்பல நேர்த்திக்கடன் செய்துகடன் கழித்
திட்டான்.
தென்னகத்துத் தீர்க்கவுள நேர்த்திகள்வே
றுள்ளதினும்
வெண்காயம் விற்றபணம் வீட்டிலுள தப்பாவும்
உண்டென்றுரர் தன்னிடமும் ஒரைந்து நூறு
மட்டில்
வானச்சி. பெற்றவரை வழியனுப்ப ஊரவர்கள்
வானூர்தி நிலையத்தில் வந்திருந்தார்! நச்சியிடம்
ஊர்ப்புறத்தின் தனிமையிலே ஓங்குமார்க்
காட்டிடையே
பார்த்தினிய மடமமைத்துப் பக்கு மாய்
உங்களடித்
தொண்டு செய்து பிறப்பறுத்துச் சுகந்தேட
விழைகின்றோம்.
மண்டுகின்ற பாவத்தின் வலியழித்து வானடைய
விரும்புகிறோம்! அனுமதிக்க வேண்டுகிறோம்
என்றார்கள்
"கரும்பனைய அருள்நல்குங் கடவுளுக்குச்
செயத்தக்க
பணிவிடைகள் பலவுண்டு! பரிந்தோம்பிச்
செய்திடுக!
மணிமிடற்றன் அருள் மகிமை வளம்படுத்தும்
உம்முயிரை!
சிறியேற்குச் செய் உதவி செலவாகும் பணம் நேரம்
இறைவேற்குச் செலவானல் எத்தனையோ பல
மடங்கு
நன்மைகளை தருந்திடமாய்! நம்பிடுக!
என்றிட்டான்
'வன்மையற்ற ஆன்மாக்கள் வழிகாட்டி யாயிருந்து
உய்திபெறத் தக்கவைகள் உயர் பணிகள்
பிழையின்றிச்
செய்திடவே அருள் புரிக! திரும்ப உங்கள்
திருவடிகள்
இம் மண்ணில் படுகையிலேஎங்களரும்
ஊர்ப்புறத்தில்
செம்மை பெறக் காத்திருக்கும் செவ்வியதோர்
ஆச்சிரமம்!
என்றவனின் சம்மதத்தை எய்திவிட்ட
மன நிறைவில்
நின்றவரின் சிந்தனையின் நேர்மைநிலை ஆராய்ந்து
மாசின்மை தான் தெளிந்து வானூர்தி போயேறி
வீசி ஒளிக் கரந்தன்னை விடை கொடுத்து
வந்தோர்க்கு
விண்ணடையும் என்றனுயிர் மேலுஞ்சிலகாலத்தில்
கண்டிடுவீர் இவ்விதமே என்பதுபோல்
காற்றிடையில்
மேற்கிழும்பிப் பறந்திட்டான் விண்ணூர்தி
யுள்ளிருந்து
மேற்கிலுள ஊர் மரங்கொள் வெளியினையே
ஆச்சிரமம்
கட்டுதற்குத் தகுந்ததெனக் கண்டிருந்தார்
ஊரவர்கள்!
எட்டுநிலப் பரப்புவிலை ஏழாயி ரம்ரூபா!
தலையாரி சம்பந்தி தந்தார்கள் இத்தொகையை!
குலையாத உழைப்பாளக் கமக்காரர்
கொடுத்தார்கள்
ஆளுக்கு நூறுக! அதில்பத்தா யிரம்ரூபா!
நாளுக்கு நாளயலூர் நண்ணுபணக் காரர்கள்
ஐம்பதுநா ருய்க்காசை அள்ளிவழங் கிட்டார்கள்
நம்பிக்கை யானவர்கொள் நற்சபையொன்
றுருவாகி
கச்சிதமாய் நடந்துவரும் கட்டுகின்ற மடவேலை,
நச்சிவந்து சேருமன்று நடத்துதற்குத்திறப்புவிழா!
கொத்தர்கள் பதவியிலே கூடிநின்று
பணிசெய்தோர்
ஓத்துக்கொண் டிவர்கா சென்றுருசதமும்
வாங்குதற்கு
கொடிநாளும் தீன்சமைத்துக் கொடுத்தனுப்பி
வருகின்றான்
மடங்கட்டும் தொண்டருக்கு! மடங்கட்டி
முடிந்தபினர்
ஏற்றவிதி முறைப்படியே இடம்பார்த்தோர்
ஆலயமும்
தோற்றுவிக்க மடத்தருகில் தொடங்கியுள்ளார்!
அருகிலொரு
திருக்குளமும் தோண்டுகிறார்! திருச்சோலை அமைக்
கின்றார்
திருப்பணிகள் யாவையுமே செம்மையுற
நிறைவேறி
நச்சிவரும் நன்னாளை எதிர்நோக்கி இருக்கின்றார்!
(அடுத்த இதழில் முற்றும்)

# ஒரேதினத்தில்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லை. 90 வயதைக் கடந்த சிலர்கூட இந்த நிலையத்தில் வந்து சத்திரசிகிச்சைசெய்து பார்வைபெற்றுச் சென்றிருக்கின்றனர்.

'சிகிச்சை பெற்றவர்களைக் கவனிக்க உறவினர்களும் வந்திருந்தனரா?'

சொந்தக்காரர் எவருமே அங்கு தங்கியிருக்கவில்லை. அங்கு பணியாற்றிய 500 தொண்டர்கள்தான் இவர்களையெல்லாம் கவனித்தார்கள். நோயாளரைப் பார்க்கும்நேரத்தில் மட்டும்தான் உறவினர்கள் வந்து பார்த்துச்சென்றனர். மற்றும் நேரங்களில் தொண்டர்கள் தான் எல்லா உதவிகளையும் செய்தனர். தொண்டர்களின் ஒழுங்குமுறை நிர்வாகம் பாராட்டப்படக்கூடியது. பொறுப் புணர்ச்சியுடன் மட் மன்றி சேவை மனப்பான்மையுடன் நடந்துகொண்டார்கள்.

'சிகிச்சைபெற வந்தவர்கள் எல்லாரும் வயோதிபர்களா?'

'எல்லோரும் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள்தான். 95 வயதான ஒருசிலரும் வந்திருந்தனர். அதிகமானோர் 8 அல்லது 10 வருடம்பார்வை இல்லா திருந்தவந்தவர்கள், பார்வை கிடைத்ததும், அவர்கள் ஒரு புதிய உலகத்தைப்பார்ப்பதுபோல்பார்த்தார்கள், மீண்டும் பார்வை கிடைக்குமென்று தாங்கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை எனச் சிலர் தெரிவித்தனர்.'

'இலங்கையிலும் இப்படியான நிலையங்கள்மூலம் சிகிச்சை செய்யமுடியாதா?'

'செய்ய முடியும். ஆனால் சிகிச்சை பெறுவோர் பெருந்தொகையினராக இருக்க மாட்டார்கள். இங்குள்ள ஆஸ்பத்திரிகளில் பலர் சத்திரசிகிச்சையினால் பார்வை பெற்றுவருகின்றார்கள். கிராமப்புறங்களில் இப்படியான நிலையங்களை அமைத்து சிகிச்சையளிக்க முடியும். கண்பார்வை இழப்பதைத் தடுப்பதற்கான சபையும், கண்பார்வை இழப்புக்கான றோயல் காமன்வெல்த் சபையும் இப்படியான நிலையங்களை நிறுவ உதவியளிப்பதாக தெரிவித்துள்ளன, மற்றும் வசதிகளை றோட்டரி, லையன்ஸ்கிளப் போன்ற ஸ்தாபனங்கள் செய்தால் இப்படியான நிலையங்களை நிறுவலாம். இதற்கான முயற்சிகளைச் செய்துவருகிறோம். போக்குவரத்து வசதி குறைந்த கிராமப்புறத்தில் இப்படியான நிலையம் நிறுவி சிகிச்சையளிப்பது அப்பகுதி மக்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்!

இந்நோய் 55 வயதின்பின் தான் அநேகமாக ஏற்படும். குழந்தைகளுக்கும் வருவதுண்டு. பிள்ளைகளுக்கு பரிசோதனை செய்து நோயைக் கண்டுபிடித்தால் சிகிச்சையளித்துச் சுகமாக்கலாம். கண் அழுத்தத்தினாலும்பார்வைக்குறைவு ஏற்படுவதுண்டு. அழுத்தம்கூடி, நரம்பு கெட்டுவிடுவதனால்இந்த நிலைமை ஏற்படுவதுண்டு.

இந்த நோய்மூலம் கண்பார்வை இழந்தவர்கள் தேவையான வைத்தியத்தினாலும், மருந்தாலும், சத்திரசிகிச்சையினாலும் சுகமடையலாம். முன்னர் போல சத்திர சிகிச்சைசெய்தால் மூன்று நான்கு நாட்கள் கட்டிலில் படுத்திருக்கவேண்டியதில்லை சத்திர சிகிச்சையின்பின்னர் கட்டிலில்எழுந்திருக்கலாம். இது கஷ்டமானது என்று எவரும் பயப்படத்தேவையில்லை.

இப்படியான நிலையங்கள் மூலம். கண்பார்வையிழந்தவர்களுக்குமீண்டும் பார்வையளிப்பதைப் பெருந்தொண்டாகவே கருதுகிறேன். இங்கும் இப்படியான நிலையங்களை ஒழுங்குசெய்தால் நான் என் ம் பணியாற்றக் காத்திருக்கிறேன்.

# திராட்சை அபிவிருத்தி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தி பந்தலாக்கவேண்டும். பின்பு ஒரு முழத்திற்கு ஒன்றாக காட்டுக்கம்புகளைப் பந்தல்மேல் பரவி கயிற்றினால் இறுகக் கட்டிவிடல் வேண்டும். பந்தல் ஆகக் குறைந்தது ஐந்தடி உயரத்திற்கு மேல் இருத்தல்வேண்டும். போடப்பட்ட பந்தலில் வளர்ந்த திராட்சைக் கொடிகளைப்படரவிடுதல் வேண்டும்.

## கொடி அறுவடை முறை

திராட்சைக் கொடிகளை அடக்கி வெட்டுதல் சடைக்கவெட்டுதல் என இரண்டு முறையாக அறுவடை செய்யலாம். அடக்கி வெட்டுவதினால் திராட்சைக் கொடி நீண்ட காலத்திற்கு பட்டுப்போகாமல் நிற்கும். சடைக்க வெட்டுவதினால் கொடி நிற்கமாட்டாது. ஆனால் பழத்தை அதிகமாகக் கொடுக்கும். அடக்கி வெட்டுவதாவது கொடி முழுவதையும் வெட்டி தாய் மரத்திலிருந்து புதுக் கொடியை வளரச்செய்வதாகும். சடைக்க வெட்டுவதென்றால் தாய்மரத்திலிருந்து வளர்ந்த கொடிகளில் உள்ள கெட்டுக்களின் மொளிகளை எண்ணி மூன்று மொளி விட்டு வெட்டுதலாகும். இப்படிச்செய்வதினால் கெட்டுகள் அதிகம் விட்டு கூடிய பலனைத்தரும். கொடி அறுவடை ஒருவருடத்தில் இரண்டுமுறை நிகழும். அவை ஆனி, மார்கழிமாதங்களில் நடைபெறும். எமது அனுபவத்தின்படி ஆனி மாதத்தில் அடக்கி வெட்டி மார்கழி மாதத்தில் சடைக்க வெட்டுவதினால் கூடிய பயனைப் பெறலாம் எனத்தெரிய வருகிறது ஆனி மாதத்தில் சோளகக்காற்று வேகமாக வீசுவதினால் கொடிகள் ஆடி அசைந்து நோப்பட்டுவிடும் எனவே அடக்கி வெட்டுவது நன்று. மார்கழி மாதத்தைத் தொடர்ந்து பனி காலம் வருவதினால் பனி காலத்தில் திராட்சை செழித்து வளர்ந்து அதிகம் பயனைக் கொடுக்கும் எனவே இக்காலத்தில் சடைக்கவெட்டுதல் நன்று

## பழம் அறுவடைசெய்தல்

திராட்சைப்பழம் அறுவடை செய்யும்போதுகூரிய கத்தியை பாவித்தல்வேண்டும். கையினால் இடுங்குதல் கூடாது. கையினால் இடுங்கும்போது கொடி காயப்பட்டு மேற்தோல் உரிந்து இடுங்கப்படும் இடத்தில ஒரு கட்டி வளரும்.

## மருந்து

மூன்று மாதத்திற்கு ஒரு முறை நிலைபரத்தைப் பார்த்துஎன்றெக்ஸ்என்னும் மருந்தை அடிப்பது நன்று. இலைகள் பொட்டுப்பொட்டாய்க் கருகுமாயின் அப்போது துருசியையும், சுண்ணும்பையும் தண்ணீரில் கரைத்து அடித்தல்வேண்டும். மேலும் விவசாய உத்தியோகத்தர்களைக் கலந்தாலோசனை செய்துகொள்ளல் நன்று.

# இதுதான் வாழ்க்கை!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் க்ளுக்...
லபக் என்ற துள்ளல்.
படீர்.
மீண்டும் களுக்...
லபக்...

மீனுக்கு விளையாட்டு அலுத்துக் கோபம் கோபமாக வருகிறது. இந்த நீர்க்குமிழியை அழிக்கவே முடியாதோ?

நீர்க்குமிழி சளைக்கவில்லை. தோன்றி அழிந்து தோன்றி அழிந்து...

மீனின் தசைகள் தோன்றி இயங்கக் கஷ்டப்படுகின்றன. அது மெதுவாக நீர் மட்டத்தையடைந்து யாராவது உதவிக்கு வருவார்களா? என்று தலையைத் தூக்கி வாயைத் திறந்து பார்க்க...

பக் பக்கென்று ஏழெட்டுப் பிறவிகளாகப் பிறந்து துள்ளி ஓடுகிறது. அதன் வாய்க்குள்ளிருந்து நீர்க் குமிழி.

மீன் பயந்து நடுங்கிவாயை மூடிக்கொண்டு உள்ளே ஓடி வருகிறது. ஓடிவந்த வேகத்தில் நீர்க்குமிழிகள் நாலு பக்கங்களிலுமிருந்து கல கலத்து ஓடி வருகின்றன.

மீண்டும் பயத்தால் உடல் வெடவெடக்க மீன் நீர்மட்டத்திற்கோடி தலையைத் தூக்கி வாயைத் திறக்கிறது.

பக் பக்கென்று நீர்க்குமிழிகளின் ஆரவாரம்!

இப்போது என்ன சொல்கிறாய் தம்பி?என் வாழ்க்கைக்கு ஒருவரம்பிலைக் கண்டாயா மண்ணும் கல்லும் நீரும் நெருப்பும் நானும் தோன்றுவோம். சிதைவோம் பிறகும் தோன்றுவோம் சிதைவோம். ஆனால் எங்கள் வாழ்க்கை முழுதாக என்றும் அழியாது. உனக்கு வாழ்க்கை ஒரு சொற்ப காலத்தில் முடிந்தால் முடிந்ததுதான் தெரியுமா?

சேச்சே என்ன ஆணவம் என்ன திமிர்! என்று பல்லைக் கடிக்கிறது மீன்.

முகிற் கூட்டத்திடையே இருந்து மெதுமெதுவாக தலை காட்டுகிறது நிலவு.

அதோ நிலவைப்பார். நிலவும் என் வர்க்கம்தான். மெல்லிய கீற்றாகத் தோன்றி வளர்ந்து நிறைந்து தேய்ந்து அழிந்து மீண்டும் தோன்றி... உனக்கும் மனிதனுக்கும் மற்றும் எல்லா 'உயிர்' என்ற வர்க்கத்திருக்கும் கஸ்வுள் தந்த நிலை இதுதான் தம்பி!

நிலவு சிரிக்கிறது!

மீன் அழுதழுது ஓடிச் சென்று நிலவைப் பார்த்து முறையிடலாயிற்று

'நிலவே, இந்த நீர்க்குமிழியின் கொட்டத்தைப் பார்த்தாயா? இதற்கொரு அழிவே கிடையாதா?'

திரைமறைவிலிருந்து முற்றாக வெளிவந்து 'பள பள' வென்று தாழித்துக்கொண்டு நிலவு பேசுகிறது... 'என்ன செய்கிறது தம்பி. இதுதான் இறைவனின்படைப்புநியதி. 'உயிர்' என்ற விசேடத்தைக் கொடுத்த படைப்புகட்கெல்லாம் வாழ்க்கையில் ஒரு முடிவையும் கொடுத்திருக்கிறான் இறைவன் அனுபவித்துக்கொண்டிருக்கிற காலத்தில் நீளமானதாகத் தெரிகிற வாழ்க்கை முடிவு காலத்தில் எல்லாமே கண் மூடித்திறக்கிற கணப்பொழுதில் முடிவதாகப் புலனாகும். எங்கள் வாழ்க்கைக்கு உவமிக்க நீர்க்குமிழியைப் போன்ற படைப்புக்களை நீடித்து வாழவைக்கிறான் இறைவன். உனக்கு மட்டும் உன் வாழ்க்கையின் உண்மையைக் காட்டினால்போதாதல்லவா? உலகனைத்துள்ள உயிர்கட்கும் உண்மை நிலை காட்ட இறைவன் நீர்க்குமிழிக்கு இப்படி ஒரு தலையெழுத்தை எழுதிவைத்தல்லவாவிட்டான்'

மீன் சோர்ந்து போய்த் திரும்புகிறது.

## வண்ண. . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரர்களில் ஒருவரான தவில் வித்துவான் கணேசு வின் புதல்வர்தான் இலங்கை வானொலி வயலின் வித்துவான் சண்முகானந்தம்.

வெண்கல நாதம் பேசும் கணீரென்ற சாரீரம், சுரம் பாடி வழக்கமில்லை. தமிழ் உருப்படிகளும், இராமலிங்க சுவாமிகள் அருட்பா போன்ற பக்திப்பாடல்களும் அவரிடம் கேட்க வெகு இதம்சுகமாயிருக்கும். பாட்டிலே கிளிகொஞ்சும். இரத்தினத்தாரை வண்ண(னை)க் கிளிமொழியார் என்று நான் அழைப்பதுண்டு பலஆண்டுகளுக்குமுன் எப்பொழுதோ நல்லூரிலோ வைத்தீஸ்வரன் கோவிலிலோ அவர் பஜனை பாடியதைக் கேட்டிருக்கிறேன். திருவாசகத்திலே வரும் 'வண்ணக்கிளிமொழியார்' என்ற அடி அவர் வாயிலே அவ்வமயம் தமிழின் பஞ்சவர்ண எழிலுடனே அற்புதமாக வந்தது.

இவ்விதமாக தமது வம்ச பரம்பரை துலங்க இரத்தினத் தீபம் ஏற்றி வைத்த மன நிறைவுடனே வண்ணை இரத்தினத்தாரின் கடைசி நாட்கள் அளவெட்டியில் விவாகம் செய்துகொண்ட அவரது ஒரே புதல்வர் செந்திவேலின் அன்பாதரவில் கழிந்தன, அவருடன் கூட இருந்தே 67-ல் காலமானார். இரத்தினத்தாரின் ஒரு புதல்வியும் அளவெட்டியில்தான் விவாகம் செய்து இளம் வயதில் காலமானார்.

(வண்ணை வைத்தீஸ்வரன் அம்பிகை பேரில் இயற்றப்பட்ட ஒரு பாடலும், 'ஆறுமுக நாவலரைப் போலவே அவதாரமில்லை. இனிமேலே' என்ற வண்ணை மாசிலாமணியின் சாகித்தியமும் இரத்தினத்தார் தமது கச்சேரிகளில் விரும்பிப் பாடுவன.)

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

## நல்ல மாம்..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வகையிலும் முயன்றுபார்க்கலாம் மரத்தின் கைமொத்தக்கிளைகள் சிலவற்றைத் தெரிந்து, அவற்றைச்சுற்றி ஓர் அங்குல அகலத்திற்கு பட்டையைப் பெயர்க்க வேண்டும். அதனால் இலைகள் சேகரிக்கும் காபோவைதரேற்று கீழிறங்காது வெட்டிய பாகத்திற்குமேலேயே தங்கிக் கிளைகளில் அதன் அளவைப்பெருக்க உதவும்.

பிஞ்சுகள் பழமரங்களில் இருந்து சொரிவதற்கு இரு காரணங்களுண்டு. மண்ணில் மிதமிஞ்சி நீர் இருந்து காற்றோட்டத்தைப் பாதித்தல் ஒன்று. மற்றையது போசணைக்குறைவு. மண்ணையதை எளிதில் அறிந்துகொள்ள முடியும். நைதரசன், பொசுபரசு, பொற்றுசு ஆகிய மூன்று போசணைப் பொருள்களுள் நைதரசன் அல்லது பொசுபரசு குறைந்திருந்தால் பூ பூப்பதோ, பிஞ்சு பிடிப்பதோ குறையும். பொற்றுசு குறையும்போது தான் பிஞ்சுகள் அதிகமாய்ப் பிடித்து அவற்றுட் பல உதிர்கின்றன.

—சி கந்தையா.
(இளைப்பாறிய மண்ணியல் வல்லுநர்)

திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் சாதாரண ஆண்டு தைத் திங்கள் 29-ம் நாள் (11-2-71) வியாழக்கிழமை மாலை 6-22 க்கும் 8-16 க்கு மிடையில் வரும் சிங்க லக்கின சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>சோதிலிங்கம்<br>('ஈழநாடு' லிமிட். யாழ்ப்பாணம்)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>பானுமதிதேவி<br>அவர்களுக்கும் |

வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தில் அவன் அருளால் சிறப்பாக நடக்கவிருக்கும் திருமண வைபவத்திற்கு நண்பர்களும் உறவினர்களும் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணத்துக்குப் பின் மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் விருந்துபசாரத்திலும் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் வெள்ளிக் கிழமை [12-2-71] பிற்பகல் 4 மணி.

இங்ஙனம் தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

இ. இரத்தினம் தம்பதிகள்
"பழமுதிர்ச்சோலை"
86, மறவன்புலோ
சாவகச்சேரி.

வெ. சுப்பிரமணியம் தம்பதிகள்
5, அன்னசத்திரம் ஒழுங்கை
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

2764

வின்ஸர் - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன் - வாணிஸ்ரீ
சிவகுமார் - குமாரிலட்சுமி - சோ
நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்
அன்னையும் பிதாவும்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
5-வது வாரம்
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)
சிவாஜி
காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





சிவந்த மண்

வெலிங்டன்சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
முல்லைவனம்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர் — பாரதி
நடித்த
காதல் பறவை

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a. m.
Marcello Mastrianni,
Pamela Tiffin
in
THE MAN, THE WOMAN AND THE MONEY
(adults only)

RAJAH Jaffna
Daily 4 Shows
Giuliano Gemma
in
BLOW HOT, BLOW COLD
( Color - Adults )

MANOHARA
Jaffna
Daily 4 Shows
Thomas Hunter
Henry Silva
in
The best Western
of the Year




கலைமகள் கல்வி நிலையம்

அனுபவம்வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் G. C. E. (OL, AL) கணித விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கும் வகுப்புகளிற் சேர விரும்புவோர் தாமதமின்றித் தொடர்பு கொள்ளவும்.

கலைமகள் கட்டடம், ஆ. மண்டலேஸ்வரன்.
158, கண்டி வீதி, B. Sc. (London) P. G. T.
சாவகச்சேரி. 2765

### தேவை

வீட்டில் சமையல் செய்யவும் பிள்ளைகளைப் பார்க்கவும் உதவி ஆள் தேவை. அநுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது. மனுச் செய்யவும், விளம்பர இல: 2805, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2805

காஷியர்:
காலை 7 மணி தொடக்கம் பகல் 12-30 மணி வரை ஒருவரும், பிற்பகல் 12-30 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை ஒருவரும் இரு காஷியர்கள் தேவை பிணைப்பணம் ஒவ்வொருவருக்கும் ரூபா (500/-) சன்லைற் றைக்கிளினேர்ஸ், ராணி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 2811

### கல்வி

அனுபவம் வாய்ந்த பட்டதாரி ஆசிரியரால் ஜி. சி. ஈ. (O/L) கணிதம், பிரயோக கணிதம், பௌதிகம், ஜி. சி. ஈ. (A/L) பௌதிகம் ஆகிய பாடங்களில் Tuition கொடுக்கப்படும். இடம்: யாழ் பஸ்நிலையத்திற்கு அண்மையில். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம் 2812 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் 2812

### விற்பனைக்கு

ரேடியோ:
ஜேர்மன் டெலிபங்கன் (TELEFUNKEN) (PORTABLE) ரேடியோ விற்பனைக்குண்டு. எஸ் பி கிருஷ்ணன், [illegible] லேசென்ஸ் பகுதி, கச்சேரி, யாழ்ப்பாணம். 2806

காணி
யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் (Stanley college) கட்டிடங்கள் கட்டுவதற்கு பொருத்தமான காணித் துண்டுகள் [illegible] வசதிக்கேற்ற வகையில் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: ஜெயசிங்கம், 5, முருகேசு லேன், நல்லூர். 2808

### விற்பனைக்கு

காணி
யாழ் நகரில் பரிபோவான் தேவாலயத்திற்கருகாமையில் ஆஸ்பத்திரி வீதியில், புகையிரதநிலையம், ஆஸ்பத்திரி, கச்சேரி, பாடசாலைகள் (ஆண்/பெண்) மத்தியிலும் குடிநீர், மின்சார வசதிகளுடன் 5 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. சிறு துண்டுகளாகவோ, அரைவாசியாகவோ கொடுக்கப்படும். விபரங்களுக்கு, ஜெயசிங்கம், 5 முருகேசு லேன் நல்லூர். 2809

### நன்றி நவிலல்

சிவமயம்—பிறேமலதா

எமது திருமணத்திற்கு வருகை தந்தவர்களுக்கும், அன்பளிப்பு செய்தவர்களுக்கும், பாராட்டு தெரிவித்தவர்களுக்கும் பலவகையிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். வ. தியாகராசா தம்பதிகளும், சி. மோகானந்தசாமி தம்பதிகளும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். சிவமயம் தம்பதிகள். 2802

### அறிவித்தல்

10-2-71 தொடக்கம் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலுள்ள நிலுவை அளவைப்பகுதியில் நிலுவை அளவை உபகரணங்களுக்கு அலுவலக நாட்களில் தினமும் பி ப.1-30 மணிதொடக்கம் 4 மணி வரை முத்திரையிடப்படுமென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

தங்கள் நிலுவை அளவை உபகரணங்களை 1971-ம் ஆண்டிற்கு முத்திரையிடும்படி சகல வியாபாரிகளையும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. முத்திரையிடாத உபகரணங்களை வைத்திருக்கும் வியாபாரிகள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்,

ஏ. சி. சுந்தரம்.
ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
5-2-1971. 2769

## மணிமொழிகள்

நோயற்ற வாழ்வு, கடனில்லாமல் இருத்தல், சுற்றத்தார்களை விட்டுத் தனியாக அயல்நாட்டில் வாசஞ் செய்யாமலிருத்தல், நல்ல மனிதர்களுடன் சினேகம், சொந்த புத்தியைக் கொண்டு காரியங்களைத் தீர்மானித்து அதன் படி நடத்தல். பயமற்ற வாழ்க்கை இவ்வாறும் இவ்வுலகில் சுகத்தை அளிக்கக் கூடியவை.

பொறுமையுள்ளவன், அளவுக்கு மிஞ்சிய தயையுடையவன், எவ்வளவு வருமானம் வந்தபோதிலும் சந்தோஷமற்றிருப்பவன், கோபக்காரன், எப்பொழுதும் எல்லாவற்றிலும் சந்தேகப்படுபவன். பிறருடைய பாக்கியங்களை அண்டிப் பிழைப்பவன் இவ்வளவுபேரும் எப்போதும் துக்கத்தையே அடைவார்கள்.

— விதுரநீதி


"உனது நேரத்தை நன்கு மதி;
பிறர் நேரத்தையும் நன்கு மதி"
"யோகி சுத்தானந்த பாரதியார்"

துரித சலவைக்கு

மில்க்வைற் சலவைப் பவுடர்
வாங்கி உபயோகியுங்கள்
பாவித்த உறைகளை அனுப்பி பரிசு
களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
த. பெ. இல. 77 - யாழ்ப்பாணம்


# புதிய அரசியல் அமைப்பில் 29-வது ஷரத்து சேர்க்கப்படவேண்டும்

## அடிப்படைத் தீர்மானங்களுக்கு தமிழர் மகாநாடு கொண்டு வரும் திருத்தம்

யாழ்ப்பாணம், செவ்

"அரசியல்சாசனம்பற்றிய அடிப்படைத் தீர்மானங்களில் தற்பொழுதுள்ள அரசியல் சட்டத்தின் 29-ம் ஷரத்து சேர்க்கப்படவில்லை. சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கும் 29-ம் ஷரத்திலுள்ள சிறுபான்மையினரின் அடிப்படை உரிமை பற்றிய அம்சம் சேர்க்கப்பட்டு அது என்றும்அழிக்கப்படாத தரத்தைப்பெற வேண்டும்."

அடிப்படைத் தீர்மானங்களை ஆராய்ந்து திருத்தம் சமர்ப்பிக்கக்கூடிய தமிழ் மகாநாட்டில் அட்வகேட் என். பொன்னையா கொண்டு வந்த மேற்கண்ட திருத்தம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு கே நேசையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம், கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை. உடுப்பிட்டி எம் பி திரு கே ஜெயக்கொடி. செனட்டர் எஸ் நடராசா உட்பட பல தமிழ் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்

அடிப்படைத் தீர்மானங்கள் ஒவ்வொரு அம்சமாக விரிவாக ஆராயப்பட்டு அதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டது

அட்வகேட் ஆர் ஆர் தங்கராசா பேசும்போது கூறியதாவது: மந்திரிசபையில் 25 சதவீதம் சிறுபான்மை மக்களுக்கும், 25 சதவீதம் பௌத்தமதம் தவிர்ந்த மற்ற சமயத்திற்கும் அளிக்க வேண்டும். ஜனாதிபதி மாகாணரீதியாக தெரிவு செய்யப்படவேண்டும். அப்படியானால் வடமாகாணத்தைச் சேர்ந்த ஒருவரும் ஜனாதிபதியாகவரும்சந்தர்ப்பம் ஏற்படும். இப்படியாக சட்டம் இயற்றப்பட்டால் இரண்டாவதுசபை இருக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. எந்த மாதிரியான அரசியலமைப்புவருங்காலத்தில் ஏற்பட்டாலும் சிறுபான்மையினருக்கு இதன் மூலம் நியாயம் கிடைக்கும்.

அடிப்படை உரிமைகள் பற்றிய அம்சம் நான்கில் மூன்று பலத்தால் மாற்றலாம் என்றால், ஒரு காலத்தில் அது நிச்சயம் சிறுபான்மையினருக்கு எதிராக பாவிக்கப்படும் என செனட்டர் எஸ் நடராசா சுட்டிக் காட்டினார்.

சபையில்தெரிவிக்கப்பட்ட திருத்தங்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதி பற்றி திரு ஐ பி துரைரத்தினத்தினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## நான்கு கால் கோழிக் குஞ்சு!

(நமது நிருபர்)

நான்கு கால் கோழிக் குஞ்சு! உரும்பராய் கிழக்கில் இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது. அழகான இந்தக் கோழிக்குஞ்சு உயிரோடு உலாவித்திரிகிறது. கே. டபிள்யூ. சின்னையா என்பவரது வீட்டில் இந்த அதிசயப் 'பிறவி'யை நூற்றுக்கணக்கானவர்கள் பார்த்துச் செல்கின்றனர்.

## யாருடைய பணம்?

யாழ்ப்பாணம், திங்கள்

அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த திரு. கே தியாகராசா என்பவர் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக கண்டெடுத்த நூற்றுக்கும் இருநூற்றைம்பது ரூபாய்க்குமிடையிலான ரொக்கப் பணத்தை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். காரியாலய நேரத்தில் ரொக்கத்திற்கு உரிய நபர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

## இன்று

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தில் இன்று யாழ் சிறைச்சாலை இந்து ஊழியர் சங்கத்தின் தைப்பூசத்திருவிழா நடைபெறும்.

திருவிழாவை யொட்டி பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவிருக்கிறது.

0 0 0

யாழ் மாநகராட்சி மன்றத்தின் பௌர்ணமி நாள் கலைவிழா இன்று மாநகர முதல்வர் திரு தா. சதுரைராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது

இக்கலைவிழாவில் யாழ் ஆசனக்கோவில் இளைஞர் மன்றக் காப்பாளர் வண. பிதா ஜோய்கிருஸ்ரோத்திரம் தயாரித்து அளிக்கும் 'ஏரோடியாள் சபதம்' என்னும் நாடகம்மேடையேறுகிறது.

0 0 0

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் இன்று தாயுமானவர் திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

0 0 0

அரியாலை மேற்கு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின புதிய கட்டிடத்தை இன்று இரவு 7 மணிக்கு திரு. இளையதம்பி சண்முகம் ஜே பி திறந்துவைப்பார்.

# ஈழநாடு

சாதாரண வருடம் தை மாதம்
27-ந் திகதி [9-2-71]

## அரசியலும் சமயங்களும்

சென்ற வாரம் கொழும்பிலே தபால் அமைச்சர் கௌரவ குமாரசூரியர் திறந்துவைத்த தற்கால இலங்கைத்தமிழ் நூற்காட்சியிலே, எல்லாச் சமய நூல்களுக்கும் முதலிடம் அளிக்கப்பெற்றுள்ளது. சமயத்தின் முக்கியத்துவத்தையும் சமரசத்தின் அவசியத்தையும் இது அறிவுறுத்துகின்றது.

கொழும்பு ஆம்பெனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க மணிமனை அடிக்கல் நாட்டுவிழாவை ஒட்டி வெளியான சிறப்புமலரில், அப்பகுதி ஹேமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை தலைமை ஆசிரியை மேரி மொனிக் அவர்களின் அருமையான ஆசிச் செய்தியில்,

"சகல மதங்களும் ஒரே இறைவனையே நாடுகின்றன என்ற பேருண்மையை யாவரும் அறியவேண்டுமல்லவா? எமது பள்ளிக்கூடத்தில் சைவ முன்னேற்றச் சங்கத்தார் தங்கள் சமய விருத்திக்கான கூட்டங்களை நடத்த உதவி, அவர்களது அன்பைப்பெற்று மகிழ்ச்சி அடைந்துள்ளேன். சமயப் பூசல்கள் ஒழிவதற்கு இதனைவிட வேறு என்னவழியில் பணி புரியலாம்?" என்றும் கேட்கிறார் அவர்.

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கிலே புதிதாக அமைத்துள்ள ஆடல் அரசரான நடேசப்பெருமானின் அழகிய சிற்பத்தை அகற்றவேண்டுமென்ற பிரேரணை, மாநகரசபையிலே அனுமதிப்பாரின்றிக் கைவிடப்பட்டது. சமயப் பூசல்கள் கிளம்புமோ என்ற அச்சம் நீங்கி எல்லாம் சுமுகமாக முடிந்தது மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தக்கதாகும்.

பொதுமக்களைப் பொறுத்தவரை அவர்களிடையே சமய சமரச மனப்பான்மை எவ்வளவு உள்ளதென்பதைக் காட்ட இன்னும் எவ்வளவோ உதாரணங்களைக் கூறலாம்.

ஆனால் இலங்கையின் புதிய அரசியல் அமைப்பைப் பற்றி அமைச்சர் தயாரித்துள்ள அடிப்படைத் தீர்மானம் இந்தச் சமய சமரசத்தைக் குலைக்கும்படியாக உள்ளது. இந்நாட்டு மக்கள் பின்பற்றும் எல்லாச் சமயங்களுக்கும் சரியான இடமளித்து உதவி, இலங்கைக்குடியரசு சமயச் சார்பற்றதாக இருக்க வேண்டுமென்று திரு கே நேசையா அவர்கள் சரியாக அறிவுறுத்துகின்றார்கள்.

எல்லாச் சமயங்களும் அன்பு, அகிம்சை, உண்மை, தூய வாழ்வு இவற்றையே வற்புறுத்துவதால் அப்பொது நெறிகளைத் தழுவிய வகையில் அரசாங்கம் காரியங்களைச் செய்வதாலேயே நாட்டுமக்களிடையே அமைதியும், ஒற்றுமையும் நிலவி நாடு முன்னேறவும் முடிவதாக இருக்கும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 9- 2- 71

344 மீ அன் 61மீ

காலை

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 பௌத்தநற்சிந்தனை, 6-40 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை 7-45 திரைகானம், 8-00 பௌத்த நற்சிந்தனை, 8-15 ஞானமிர்தம், 8-30 சைவநீதி,

344மீ அன் 49 மீ

காலை

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 மத்தாப்பு, 10-30 படத்திலிருந்து 11-15 சிறுவர்மலர், 12-00 சமதிதி, 1-05 பெண்ணுலகம்,

344 மீ அன்ட் 61 மீ

4-30 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 மெல்லிசை, 6-30 விவசாயநிகழ்ச்சி 6-45 கண்ணகிகாவியம், 7-00 தாளவாத்தியக் கச்சேரி, 7-30 விவேக சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு, 9-45 பாட்டு. 10-30 செய்தித் தொகுப்பு.

## அரசியல்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிவேற்றுமைக்கு அப்பாற்பட்டவராகவும், எல்லாக் கட்சிகளின் பொது நம்பிக்கையைப் பெற்றவராகவும் இருக்கவேண்டும் இப்படிப்பட்டவர் கிடைப்பது துர்லபம்தான். என்றாலும் அசாத்தியமல்ல. மனமுண்டானால் நிச்சயம் வழியுண்டு. சிறுபான்மை சமூகத்தவரும் கூட மாறி மாறி தலைவராக வரக்கூடிய முறையில் சட்ட மூலம் இல்லாவிடினும் ஒரு சம்பிரதாயத்தை ஏற்படுத்துவது, சிறுபான்மை மக்களுக்கும் நம்பிக்கை ஏற்படுவதாக இருக்கும்.


கல்வி

ஜி. சி. ஈ. O/L (பங்குனிப் பரீட்சைக்கு மீட்டல்) A/Lக்கும் 10-2-71 இல் மாலை தூய பிரயோக கணிதம் களுக்குவகுப்புகள் நடைபெறும் சேரவிரும்புவோர் பெயர்தரவும் R. E. J. A. சேதுகாவலர் B. A. (Lond) முதலாம் பிரிவில் சித்தியடைந்தவர், பலாலி ஆசிரிய கலாசாலை ஓய்வு பெற்ற கணித விரிவுரையாளர், 2 A. சோமசுந்தர அவெனியூ சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

2457


## மரண அறிவித்தல்

### ஆர். சி. செல்லையா

மானிப்பாயைச் சேர்ந்தவரும் மெமோரியல் ஆங்கில பாடசாலை முன்னாள் தலைமை ஆசிரியருமான திரு. றிச்சேட் சின்னத்தம்பி செல்லையா காலமாகிவிட்டார் இவர் அன்னபூரணத்தின் அருமைக் கணவரும், டாக்டர் திருமதி சம்மி செல்வி (லண்டன்), டாக்டர் திருமதி இராசையா கிருபா (லண்டன்), திரு. அருட்சுதன் (இலங்கை வங்கி கொழும்பு), திரு. தேவமகிபன் (அம்பாறை ஹாடி தொழில் நுட்ப நிலையம்) ஆகியோரின் தகப்பனும், டாக்டர் சம்மி சின்னத்தம்பி (விரிவுரையாளர், கொழும்பு வைத்தியக் கல்லூரி), டாக்டர் லஷ்மன் இராசையா (லண்டன்) ஆகியோரின்மாமனும், திரு சி. இராமலிங்கத்தின் (பி டபிள்யு. டி) சகோதரருமாவர். அன்னாரின் பூதவுடல் மெமோரியல் லேனிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நாளைக்காலை (10-2-71) 8-30 மணிக்கு மானிப்பாய் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

2189

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ந்தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.